# யாழ்ப்பாண
# வைபவமாலை



முதலியார்
குல. சபாநாதன்

உ

மாதகல்

மயில்வாகனப் புலவர்

எழுதிய

# யாழ்ப்பாண வைபவமாலை

இது

முதலியார் குல. சபாநாதன் அவர்கள்

பல பிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து

எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்

'ஈழகேசரி' அதிபர்

திரு. நா. பொன்னையா அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

Copyright] 1949 [விலை ரூ. 1-50

## சமர்ப்பணம்


★

புராதனப் பெருமை வாய்ந்த யாழ்ப்பாண நாட்டின் சரித்திர சம்பந்தமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்ட அறிஞர், **முதலியார் செ. இராசநாயகம்,** C.C.S., அவர்களது ஞாபகார்த்தமாக இந்நூல் வெளியாகின்றது.

[உரிமை பதிவுசெய்யப்பட்டது]

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

முதலியார் செ. இராசநாயகம், அவர்கள், C. C. S.



*Courtesy : ' Eelakesari '*

தோற்றம் : 22 - 10 - 1870.

மறைவு : 17 - 1 - 1940.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக். |
| 1. | முன்னுரை ... ... | ரு |
| 2. | பதிப்புரை ... ... | சா |
| 3. | நூலாசிரியர் வரலாறு ... | கக |
| 4. | யாழ்ப்பாண வைபவமாலை ஆராய்ச்சி | கஅ |
| 5. | நூல் ... ... | 1—96 |
| 6. | அநுபந்தம் ... ... | i |

# முன்னுரை

இலங்கையில் தமிழ் மக்கள் பல நூற்றுண்டுகளாக நிலைபெற்றுத் தமது ஆதிக்கத்தைப் பரவச்செய்த வரலாறு தமிழகச் சரிதத்தில் ஒரு முக்கிய பகுதியாகும். யாழ்ப்பாணத்தில் தமிழரசர் பாரம்பரியமாக ஆண்டுவந்ததோடு, போர்த்துக்கேயர் என்ற பறங்கியர் இலங்கைக்கு வருவதற்கு முன், சிங்கள மன்னரும் தங்களுக்குத் திறை செலுத்துமாறு மேன்மையுற்று விளங்கினர். யாழ்ப்பாண மன்னர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து அறிதற்குத் துணைசெய்யும் ஆதார நூல்கள் கைலாய மாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவ மாலை என்பன.

இவற்றுள் யாழ்ப்பாண வைபவ மாலை விரிவானது; தெளிவான வசனநடையி லுள்ளது. தமிழில் சரித்திர முறையில் எழுதப்பட்ட நூல்கள் மிகச் சிலவே. யாழ்ப்பாண வைபவமாலை இவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெறுதற்குரியது. இதன் ஆசிரியர் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறந்த வித்துவ குடும்பத்தில் தோன்றிய மயில்வாகனப் புலவராவர். இவர் ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அக்காலத்தில் கர்ண பரம்பரையாக அறிந்த வரலாறுகளை இவர் கைலாய மாலை, வையா பாடல் என்ற நூல்களிற் கூறப்பட்ட செய்திகளோடு இயைத்து, யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலை எழுதியுள்ளார் எனத் தெரிகிறது. இதிலுள்ள வரலாறுகள் யாவும் சரித்திர உண்மைகளாகக் கொள்வதற்கில்லை. ஆயினும் இந்நூல் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் பயன்படத்தக்கது.

இந்நூல் இதுகாறும் திருத்தமான முறையில் அச்சிடப்படவில்லை. அச்சிடப்பட்ட பிரதிகளும் இப்பொழுது கிடைப்பது அருமையாய்விட்டது. இங்நிலையில் யாழ்ப்பாண வரலாற்றுராய்ச்சித் துறையில் அதிக ஆர்வத்துடன் உழைத்துவருகின்ற அறிஞர், திரு. குல. சபாநாதன் அவர்கள் இந்நூலைச் செவ்வனே பரிசீலனை செய்து, பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பிக்க முன்வந்தது மிகவும் பாராட்டற்குரியதாகும். இவ்வாராய்ச்சிக் குறிப்புகள் இந்நூலுக்கு ஒரு தனிச் சிறப்பைத் தருவன. திரு. சபாநாதன் அவர்கள் செய்துள்ள இவ்வரும் பணி, யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஆய்ந்தறியுமாறு பலருக்கும் ஊக்கம் அளிக்கும் என்பது திண்ணம்.

இராமநாதன் கல்லூரி
சுன்னுகம், 9-6-49

சு. நடேசபிள்ளை

# பதிப்புரை

யாழ்ப்பாண வைபவ மாலை எனும் சரித்திர நூல் முதன்முதலில் வட்டுநகர் திரு V. V. சதாசிவப்பிள்ளை அவர்களால் 1884-ம் ஆண்டு சென்னையில் அச்சிடப்பட்டது. முதற் பதிப்பிலேயே பதிப்பாசிரியர் தாமாக ஒரு பகுதியினை எழுதிச் சேர்த்துவிட்டார். அப்பகுதி இந் நூலின் இறுதியில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்படியூர் திரு சி. பாலசுப்பிரமணிய சர்மா அவர்கள் இந்நூலிற் சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் 'யாழ்ப்பாண வைபவம்' எனும் பெயருடன் 1916-ல் அச்சிட்டார்கள். இதன் இரண்டாம் பதிப்பு சங்கானை திரு. சு. பொன்னுச்சாமிப்பிள்ளையவர்களால் 1927-ல் வெளியிடப்பட்டது. வைபவமாலையின் ஆங்கில மொழி பெயர்ப்பு நியாயவாதி சி. பிறிற்றோ (C. Britto) அவர்களால் கி பி 1899-ல் அச்சிடப்பட்டது. பிற்காலத்தில் இந் நூற்பதிப்புகளும் கையெழுத்துப் பிரதிகளும் கிடைப்பது அரிதாகிவிட்டது. இந்நிலைமையினைக் கண்டு கவன்ற முதலியார் செ இராசநாயகம் அவர்கள் லண்டன்மாநகரத்து நூதனப் பொருட்சாலையில் கீழைத்தேச நூல்நிலையப் பகுதியில் இருந்த வைபவமாலைப் பிரதியினை வரவழைக்க முயன்றார்கள் அக்காலத்தில் அவர்கள் இலங்கைச் சரித்திரச் சுவடிப் பாதுகாப்புச் சபையின் (Historical Manuscripts Commission) ஓர் அங்கத்தவராய் இருந்தமையால் அச் சபைமூலம் லண்டனிலுள்ள கையெழுத்துப் பிரதியின் படப்பிரதியை (Photostat Copy) எடுப்பித்தார்கள். பின்னர் அதனைப் பிரதிசெய்து அச்சிடக் கருதினார்கள். அதற்குரிய எழுத்துவேலை முழுவதையும் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அவர் வீட்டுக்குச் சென்று யானே செய்து வந்தேன். அத்துடன் இந்நூலுக்கு அடிக்குறிப்புகளையும் அவர்களுடைய மேற்பார்வையின்கீழ் யான் எழுதினேன். இந்நூல் பாகம் பாகமாக 1939-ம் ஆண்டில் 'இலங்கை

வித்தியா சமாச்சாரப் பத்திரிகை'யில் வெளிவந்தது. அப்பொழுது முதலியார் அவர்கள் எமது அடிக்குறிப்புக்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்கள் :- "இந் நூல் மாணவர்க்கும் பிறர்க்கும் பல்கால் உ[illegible] செய்யுமென வோர்ந்து எனது நூலையும் பிறசரித்தி[illegible]சிரியர், ஆராய்ச்சியாளர் கொள்கைகளையும் வைத்தாராய்ந்து கொழும்பு வித்தியாகந்தோரில் ஓர் எழுத்தாளரும், தமிழறிஞரும், நுண்ணறிவாளரும், ஈழநாட்டுப் புலவர் வரலாறு தொகுக்கும் பணியைச் செய்துவருபவருமாகிய திரு. குல சபாநாதன் அவர்கள் குறிப்புரையுமொன்று எழுதி உதவியிருக்கின்றார்கள். அக்குறிப்புரை இந்நூலைத் தெள்ளி வடித்துச் செய்திகளை யொருவாறு உள்ளபடி அறிவித்தற்குப் பேருதவியாயிருப்பதை இந்நூலை வாசிப்போர் இனிது அறிவர்''.

முதலியார் அவர்கள் இந்நூலுக்கு ஏற்ற ஆங்கில மொழிபெயர்ப்பினையும் சேர்த்து வெளியிடக் கருதி அப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அம் மொழிபெயர்ப்புப் பூரணமாவதற்கு முன் அவர்கள் 17-1-40-ல் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்கள். பின்னர் முதலியார் அவர்களுடைய சிரேஷ்ட புதல்வர் திரு. இ. நாயகம் அவர்கள் இம்மொழிபெயர்ப்பு வேலையைப் பூர்த்திசெய்யுமாறு என்னைப் பணித்தார்கள். அங்ஙனமே அதனைச் செய்துமுடித்தேன். ஆனால் அதனைத் தனி நூலாகப் பின்னர் வெளியிடக் கருதி இந்நூலுடன் சேர்க்காது நீக்கிவிட்டேன்.

சில வருடங்களுக்குப் பின்னர் யான் சென்னைக்குச் சென்றிருந்தபொழுது திரு. தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் புதல்வர் திரு. க இராஜேஸ்வரன் அவர்கள் வீட்டுக்குச் சென்றிருந்தேன். யாழ்ப்பாண வைபவமாலைப் பிரதி எங்கேயாவது கிடைக்குமோவென அவர்களை உசாவியபோது அவர்கள் தம் தந்தையார் தேடிப் பேணி வைத்திருந்த ஏட்டுப் பிரதியைத் தந்தது மட்டுமன்றி வைபவமாலை முதற்பதிப்புப் பிரதியொன்றையும் தந்துதவி

ஞர்கள். முன்னொருபோதும் அறிமுகமில்லாத என்னிடம் இத்தகைய கிடைத்தற்கரிய பொருளை நம்பித் தந்த திரு. க. இராஜேந்திரன் அவர்களின் பெருந்தன்மையை யான் என்றும் மறக்கவியலாது. இப் பெருந்தகையாளர்க்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துங் கடப்பாடுடையேன். இவ்விரண்டினையுங் கொணர்ந்து யான் வைத்திருந்த பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பாட பேதங்களைக் குறித்துக்கொண்டேன். பின்னர் திரு அ. சதாசிவப்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூலில்மயில்வாகனப்புலவர்வரலாற்றைக்கூறுமிடத்து 'வைபவமாலையை 'உதயதாரகை'ப் பத்திரப் பிரதிகள் பலவற்றில் முன் அச்சடிப்பித்திருக்கிறோம்'' என்று எழுதியிருப்பதைக் கண்டேன். எனவே கொழும்பு அரசினர் புராதன பத்திர சேமிப்புச்சாலையில் (Government Archives) பழைய 'உதயதாரகை'ப் பிரதிகளைத் தேடிப் பார்த்தேன். அதிர்ஷ்டவசமாக 'வைபவமாலை' வெளிவந்த பிரதிகள் அங்கு காணப்பட்டன. அவற்றிலுள்ள பாட பேதங்களையும் குறித்துக்கொண்டேன். இதுசம்பந்தமாக நண்பர் மு. இராமலிங்கம் அவர்கள் அதிக உதவிபுரிந்தார்கள்.

இந்நூலைப் பாட பேதங்களுடனும் குறிப்புரையுடனும் வெளியிடுவதற்கு முன்னர் நல்லூர், வண. சுவாமி ஞானப்பிரகாசருடைய அபிப்பிராயத்தையும் அறிவது நன்றெனக் கருதி அதனை அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். சுவாமியவர்கள் அதனைப் பார்வையிட்டுச் சில திருத்தக் குறிப்புகளை எழுதியதுமன்றி, 1940-ம் ஆண்டில் எனக்கெழுதிய கடிதமொன்றில் '' தாங்கள் எழுதிய அடிக்குறிப்புக்கள் தங்கள் சரித்திர ஆராய்ச்சி வன்மையை நன்கு புலப்படுத்துகின்றன. பட்சபாதமின்றி அபிப்பிராய பேதங்களை நடுநின்றாராய்ந்து காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. இந்நூல் வெளிவரும் நன்னாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றேன் '' எனக் குறிப்பிட்டார்கள். ஆனால் சுவாமியவர்கள் 22.11.47ல் இவ்வுலகவாழ்வை நீத்தார்கள், சுவாமியவர்கள் உயிருடன் இருந்த காலத்தில்

இந்நூலை வெளியிட முடியாதிருந்தமை எனக்குத் தீராத கவலையை உண்டாக்கிற்று. பின்னர் சுவாமியவர்கள் எழுதிய 'Kings of Jaffna' எனும் ஆங்கில நூலைப் பார்வையிட்டுச் சில குறிப்புகள் எடுப்பதற்காக அந்நூற் பிரதியொன்றைத் தேடியலைந்தபொழுது திரு. ஆர். சி. பிறக்ரர் அவர்களிடம் ஒரு பிரதியிருப்பதாகக் கேள்விப் பட்டு அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். இவ்வறிஞர் அந் நூலைத் தந்துதவியதுமன்றி யாழ்ப்பாணச் சரித்திர சம் பந்தமாகத் தமது அபிப்பிராயங்களையும் தெரிவித்தார்கள். அவற்றையும் அடிக்குறிப்பிற் சேர்த்துள்ளேன்.

மட்டான பண வருவாயுள்ள எம்போலியர்கள் நூல் களை வெளியிடுதல் எங்ஙனம் இயலும் எனக் கருதிக் கவன் றிருந்தபொழுது, 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கட்கு இவ்விஷயத்தை எழுதி உசாவினேன். 'கையெழுத்துப்பிரதியை அனுப்பினால் அச்சிட்டு வெளியிட லாம்'' என அவர்கள் மறுமொழி எழுதினார்கள். இது எனக்குப் பெரிய ஆறுதலைத் தந்தது. ஈழநாட்டிலே பல தமிழ் நூல்கள் வெளிவரக் காரணகர்த்தாவா யிருந்த இவர்களே இந்நூலையும் வெளியிட முன்வந்த பெருந் தொண்டிற்கு யான்மட்டுமன்றித் தமிழுலகமே கடமைப் பட்டுள்ளது என்பது கூறுதேயமையும்.

இந் நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதித் தருமாறு பரமேஸ்வரக் கல்லூரித் தலைவரும் யாழ்ப்பாணச் சரித் திர ஆராய்ச்சி அறிஞருமாகிய திரு சு. நடேசபிள்ளை அவர்களை வேண்டினேன். பல வேலைகட்கிடையில் எனது வேண்டுகோளை மறுக்காது அணிந்துரை எழுதித் தந்த இப்பெருந்தகையாருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மயில்வாகனப் புலவர் அவர்களுடைய வாழ்க்கை வர லாற்றுக் குறிப்புகள் சிலவற்றைத் தந்துதவிய 'இந்து சாதன'ப் பத்திராதிபர் பண்டிதர் திரு ம வே திருஞான சம்பந்தப்பிள்ளை அவர்களுக்கும், இந்நூலின்கண் சில திருத்

தங்கள் செய்வதற்கு வேண்டிய உதவி புரிந்த பண்டிதர் திரு. அ. சிற்றம்பலம் பீ ஏ. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன் உரித்தாகுக. இந்நூலின் அச்சுப் பிரதியைப் 'புறு பார்ப்பதில் எனக்கு உதவியாயிருந்த அன்பர் திரு அ . சுப்பிரமணியம் அவர்களுக்கும், இந்நூலை விரைவில் வெளியிட உதவியாயிருந்த திருமகள் அழுத்தக அலுவலகத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக

கொழும்பு
வெள்ளவத்தை
31-5-49

குல. சபாநாதன்

## இந்நூலாசிரியராகிய மயில்வாகனப் புலவர் வரலாறு

இப்புலவர் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புக் கோயிற் பற்றைச் சேர்ந்த மாதகற் கிராமத்திலே பிறந்தவர். இவ ருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணியம் எனவும், தாயார் பெயர் சிதம்பரம் எனவுங் கூறுப. கண்டியரசன்மீது கிள்ளைவிடுதூது பாடிய மாதகல் சிற்றம்பலப் புலவரின் சகோதரி புதல்வரே மயில்வாகனப் புலவர். இவர் இளமையில் தன் மாமனாரிடம் கல்விகற்றுச் சிறந்த பாண்டித்திய மடையலானார். வையா என்னும் புலவர் மரபில் உதித்தவர் அது,

> நெய்யார்ந்த வாட்கைப் பரராச சேகரன் பேர்நிறுவி
> மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
> வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்
> பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.

என்னும் புலியூரந்தாதிச் சிறப்புப் பாயிரச் செய்யுளா லறியப்படும். இச்செய்யுள் வரதபண்டிதர் பாடியதெனப் பொதுவாக நம்பப்படுகின்றது. வையா எனும் புலவர் சயவீரசிங்கையாரியன் எனப்படும் ஐந்தாம்செகராசசேகரன் காலத்தில் (கி.பி 1380—1414) சமஸ்தானப் புலவராகக் கீர்த்தியுடன் விளங்கினார். இவர் வையாபாடல், பரராச சேகரன் உலா, பரராசசேகரன் இராசமுறை எனும் நூல் களின் ஆசிரியர்.

மயில்வாகனப் புலவருடைய வரலாறு திரு. அ. சதா சிவப்பிள்ளையவர்கள் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' எனும் நூலிலும், திரு. அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் எழுதிய 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' எனும் நூலிலும் வயாவிளான் திரு க. வேலுப்பிள்ளையவர்கள் வெளியிட்ட 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' யிலும், வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்' எனும் நூலிலும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோயிலை கி. பி. 1787-ல் கட்ட ஆரம்பித்து 1791-ல் திருப்பணியை முடித்துக் கு[illegible]பாபிஷேகமும் செய்வித்த தர்மப்பிரபுவாகிய வண்ணை வை[illegible]யலிங்கச் செட்டியாரும் மயில்வாகனப் புலவரும் ஒரே கா[illegible]த்தில் வாழ்ந்தவர்கள். இவ்விருவரும், இந்தியாவினின்றும் யாழ்ப்பாணத்தில் வந்திருந்த கூழங்கைத் தம்பிரானிடம் ஒருங்கு கற்றவர். கூழங்கைத் தம்பிரான் ஒரு பாடத்தை ஒரு முறையன்றி இரண்டாமுறை சொல்லிக்கொடாரென்றும், வைத்தியலிங்கச் செட்டியார் ஒருமுறையிற் கிரகிக்கத்தக்கவரல்ல ரென்றும், மயில்வாகனப் புலவர் ஒருமுறையிற் கிரகிக்கத்தக்க சிறந்த ஞாபக சக்தியுடையவரென்றும், அதனால் தம்பிரான் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை மயில்வாகனப் புலவர் ஒரேமுறையிற் கிரகித்து வைத்தியலிங்கச் செட்டியாருக்கு மீளச் சொல்லிக்கொடுப்பாரென்றும் சரிதாசிரியர் சிலர் கூறுவர். இதனால் மயில்வாகனப் புலவர் சிறந்த ஞாபகசக்தி யுடையவர் என்பது புலனாகின்றது.

## மயில்வாகனப் புலவர் காலம்

கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, பருளை விநாயகர் பள்ளு, கரவை வேலன் கோவை முதலிய நூல்களை இயற்றிய நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், கிள்ளைவிடு தூது, அமுதாகரம், பிள்ளையார் கதை ஆதிய நூல்களை இயற்றிய வரத பண்டிதரும், மயில்வாகனப் புலவரும் ஒரே காலத்தினர் எனச் சரித்திராசிரியர் கருதுகின்றனர். மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவ மாலையெனும் நூலின் சிறப்புப்பாயிரச் செய்யுளில், மேக்கறான் எனும் உலாந்தேசு மன்னன் பெயர் குறிப்பிடப்படுதலால், அது கி. பி. 1736-ல் கொம்மந்தோராகவிருந்த இயன் மாக்கரா அவர்களையே குறிக்குமெனக் கருதி இப்புலவர் காலமும் 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகுமென யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்

டவர், காலஞ்சென்ற பிறக்ரர் திரு. வ. குமாரசுவாமி அவர்கள் ஆங்கில 'இந்துசாதன'ப் பத்திரிகையில் 1934-ம் ஆண்டில் எழுதிய 'சின்னத்தம்பிப் புலவர் காலம்' எனும் கட்டுரையில் இக் கொள்கையினை விரிவாக விளக்கிக் காட்டியுள்ளார்.

மயில்வாகனப் புலவர் அவர்களின் பிற்கால சீவியத்தையும் அவரது காலத்தையும் கரவை வேலன்கோவை பதிப்பித்த பிரமஸ்ரீ இ. சதாசிவஐயர் அவர்கள் அரிதில் முயன்று ஆராய்ந்து அப்பதிப்பில் வெளியிட்டிருக்கிருர்கள். அதனை ஈண்டெடுத்துக் காட்டுதல் பொருத்தமுடைத்தாகுமென நம்புகிறோம் :-

"கி. பி. 1805-ம் ஆண்டில் வைத்தியலிங்கச் செட்டியார் தம் ஆஸ்திகளைப்பற்றிய மரணசாதனப் பத்திரம் பிறப்பித்தார் என்பது அப் பத்திர வாயிலாகவே இன்றும் நாமறியக் கிடக்கின்றது. அங்ஙனம் பத்திரம் பிறப்பித்த பின் செட்டியார் பெரும் பொருள் எடுத்துக்கொண்டு வேண்டிய பரிசனங்களுடன் தந்தோழராகிய மயில்வாகனப் புலவரையும் அழைத்துக்கொண்டு காசிக்குப் பிரயாணமானுர். வழியிலும் காசிப்பதியிலும் பல தருமத் தாபனங்கள் செய்து அங்குச் சிறிது காலத்திற் செட்டியார் காலகதியடைய மயில்வாகனப் புலவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து மேலும் சில காலம் வாழ்ந்திருந்தனர். அப்போது அவராலெழுதப்பட்ட கந்தபுராண ஓலைச்சுவடி ஒன்று இப்பொழுதும் மாதகலில் அவர் வழித்தோன்றலாகிய ஒருவரிடம் இருக்கின்றது. அவ்வேட்டின் இறுதியில் முந்தின கையெழுத்திலேயே,

ஈசன் மைந்தன் புராண மெழுதினேன்
தேசு லாவு திருவளர் மாதையூர்
மாசி லாமணி மாமகன் மைந்தன்
காசி கான்மயில் வாகன யோகனே.

என்னுஞ் செய்யுள் எழுதப்பட்டிருக்கின்றது. இச் செய்யுளால் மயில்வாகனப் புலவர் காசிக்குச் சென்று மீண்ட சம்பவம் நன்கு தாபிக்கப்படுகின்றது 1814-ம் ஆண்டில்

மாதகற் பகுதியில் பெரு வெள்ளம் ஒன்று நிகழ்ந்ததென்றும் அவ்வெள்ளத்தையும் அதனுல் நிகழ்ந்த சேதத்தையுங் குறித்[illegible] ஓர் அம்மானை மயில்வாகனப் புலவராற் பாடப்பட்ட[illegible]றும் அவர் வழித்தோன்றலாயுள்ளோர் கூறக்கேட்டலின், மயில்வாகனப் புலவர் கி. பி. 1814-ம் ஆண்டில் வாழ்ந்திருந்தாராகல்வேண்டும். ஆகவே அவர் செய்த 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் சரித்திர நூல் கி. பி. 1736-ம் ஆண்டில் இயற்றப்பட்டதென்னுங் கொள்கை எவ்வாறு பொருந்தும் என்பது அறிஞர்கள் ஆராயத்தக்கது. 1736-ல் மயில்வாகனப் புலவரும் சின்னத்தம்பிப் புலவரும் பத்து வயதுக்குட்பட்ட மிகச் சிறுவர்களாகவே இருந்திருப்பார்கள்." இவ்வறிஞருடைய கொள்கைப்படி மயில்வாகனப்புலவர் காலம் 18-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியெனக் கருத இடமுண்டு

மயில்வாகனப் புலவர் வண்ணை வைத்தியலிங்கச் செட்டியார் காலத்தில் வாழ்ந்தவராதலின், இப்புலவர் 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் இருந்திருக்கவேண்டுமென முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதி அவ்விஷயம் பற்றி ஆங்கில 'இந்துசாதன'ப் பத்திரிகையில் (29-10-34) ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட்டார்கள். பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் கொள்கையும் இதற்கு ஆதரவளிக்கின்றது. அதனை மேலே காட்டியுள்ளேம். 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' எனும் நூலினை 1916-ம் ஆண்டில் வெளியிட்ட சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களும் மயில்வாகனப் புலவர் சரிதத்தில் "காலம் ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் என்பர்" எனக் கூறியிருத்தலும் இக்கொள்கைக்கு ஆதரவளிக்கின்றது. இன்னும் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' எனும் நூலில், இப் புலவர் காலத்தைப்பற்றி விவரிக்குமிடத்து "மயில்வாகனப் புலவர் வைபவமாலையை இயற்றிய காலம் 1736 வரையிலென மெஸ். விருத்துரை (Britto) கூறிப்போந்தார். ஆயின், வைத்தியலிங்கச் செட்டியாரோடு அவரைக் கூழங்கைத்

தம்பிரானிடம் பாடங்கேட்டவராகச் சொல்லும் ஐதி கத்தின்படி அந்நூலியற்றிய காலம் இன்னும் ஐம்பது வருஷம் வரையிலென்ருலும் பிற்பட்டதேயாதல்வேண்டும்'' எனக் கூறப்பட்டிருத்தலும் ஈண்டு ஒப்பிட்டு நோக்கற் பாற்று. ஆயின், அரசாங்கப் பத்திரப் பாதுகாப்பு நிலையத்திலுள்ள (Archives) டச்சுக்காலத்துப் பத்திரங்களில் 1706-ம் ஆண்டில் பீற்றர் மாக்காரா என்பவர் பிசுக்கால் அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் இருந்தார் (Pieter Macare — Independent Fiscal of the Jaffna Pattam in 1706) எனும் குறிப்புக் காணப்படுதலால், இவருடைய கேள்விப்படியே மயில்வாகனப்புலவர் 1706-ல் வைபவமாலையை இயற்றினர் என திரு. வ. குமாரசுவாமியவர்கள் இந்து சாதனப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றிற் குறிப்பிட்டுள்ளார் (A Peep into Dutch Archives in Ceylon -by V. Coomaraswamy B. A.—'Hindu Organ' of 3-2-1936). காலியில் கொம்மந்தோராயிருந்த இயன் மாக்காரா யாழ்ப்பாணச் சரித்திரத்தில் நாட்டமுடையவராய் இருந்தார் என்பது பொருத்தமற்ற கூற்று என்பதைப் பிள்ளையவர்கள் ஒத்துக்கொண்டு மயில்வாகனப் புலவர் வைபவமாலையை இயற்றிய காலம் 1706-ம் ஆண்டென்றே கொள்கின்ருர். ஆனல் பிசுக்கால் அதிகாரியாயிருந்த ஒருவனை உலாந்தேசு மன்னன் என மயில்வாகனப்புலவர் குறிப்பிட்டிருப்பாரோ என்பது ஐயத்துக்கிடமானது. எனினும் அவ்வதிகாரியையே உலாந்தேசு மன்னன் எனப் புனைந்துரையாகப் பாடியிருத்தல் கூடுமெனக் கொள்ளலாம். அங்ஙனமாயின் மயில்வாகனப்புலவர் காலம் 18-ம் நூற்ருண்டின் முற்பகுதியெனக் கொள்ளவேண்டும்.

எனவே மயில்வாகனப்புலவர் காலம் 18-ம் நூற்ருண்டின் முற்பகுதியெனக் கொள்வர் ஒரு சாரார். 18-ம் நூற்ருண்டின் பிற்பகுதியும் 19ம் நூற்ருண்டின் முற்பகுதியும் எனக் கொள்வர் பிறிதொரு சாரார். சிறப்புப் பாயிரத்திற் கூறப்பட்டுள்ள மக்கறூன் என்பவன் யார் எனத் திட்டமாக அறிந்துகொள்ளும் வரை, மயில்வாகனப் புலவர் காலத்தையும் திட்டமாகக் கூறிவிடமுடியாது.

# மயில்வாகனப் புலவர் இயற்றிய நூல்கள்

(1) புலியூரந்தாதி: புலியூரென்பது சிதம்பரத்துக்கு வேறொரு பெயர். இவ்வந்தாதி மயில்வாகனப் புலவரின் செய்யுள் யாக்குந் திறனை நன்கு புலப்படுத்துகின்றது. இதற்கு ஸ்ரீ ம. க. வேற்பிள்ளையவர்கள் சிறந்ததோர் உரை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். இந்நூலிற் காணப்படும் சிறப்புப் பாயிரம் வரதபண்டிதர் பாடியதென்பர் சிலர்

(2) ஞானாலங்காரரூப நாடகம்: இது ஆன்ம தத்துவங்களை உருவக அலங்காரம் செய்து பாடிய நாடக நூல். இஃது அச்சிடப்படவில்லை.

(3) காசியாத்திரை விளக்கம்: இது புலவரவர்கள் காசிக்குச்சென்று திரும்பிய பின்னர் எழுதியது. இதன் ஏட்டுப் பிரதியொன்று செல்லரித்து வாசிக்கமுடியாத நிலைமையில் முதலியார் இராசநாயகம் அவர்கள் வசம் இருந்தது. பின்வருஞ் செய்யுள் அதன் சிறப்புப்பாயிரம் போலும்:

பிறக்கமுத்தி தருந்தலத்தாற் கினிய(னென)
வருநம்பி பெரியோன் பிள்ளை
சிறக்கமு(த்தி த)ந்தருளுந் தலங்களெலாம்
வலங்(கொள்ள)ச் சிறுமை நூக்கி
ம(றக்க)முத்தி யாய்ந்துணர்வோன் வையாவின்
(வழிம)யில்வா கனவே ளின்று
இறக்கமுத்தி தருந்தலயாத் திரைநூலை
மன்ம(திக்க) வியம்பி னனே.

இவர் வரதபண்டிதர் செய்த சிவராத்திரி புராணத்துக்கும் சிறப்புப்பாயிரக் கவி ஒன்று அளித்துள்ளார். அது வருமாறு:

பரத ராசனுய ரசல ராசன்மகள் பங்க னன்புதரு பண்புசேர்
விரத ராசசிவ நிசியி னின்சரித மிகவி ளங்கிட விளம்பினன்
கரத ராசனைய மொழிய ரங்கனருள் கருணை மாரிநிகர் பருணிதன்
வரத ராசன்மறை வாண ராசன்மிகு மதுர வாசகவி ராசனே.

இவர் சின்னத்தம்பிப் புலவர் பாடிய கல்வளையந்தாதிக்குச் சிறப்புப்பாயிரக் கவி ஒன்று அளித்துள்ளார். அது வருமாறு:

> செம்பொற் சுவட்டினிற் பாரதந் தீட்டிய சே[illegible]டின்சீர்க்
> கம்பக் கரிமுகன் கல்வளை வாழுங் கணபதிக்கு
> நம்பற் கினியமுச் சங்கத்து நூலென நல்லைச்சின்னத்
> தம்பிப் புலவனல் லந்தாதி மாலையைச் சாற்றினனே.

(4) '**யாழ்ப்பாண வைபவ மாலை**' என்பது யாழ்ப்பாணச் சரித்திரத்தைக் கூறும வசன நூலாகும். இது வைபவ மாலையெனப் பெயர்பெறுதலின் பத்திய ரூபமான நூலாயிருத்தல் கூடுமென ஐயுறுவாருமுளர். "யாழ்ப்பாணைப்பதி வரலா றுரைத்தமிழாற் கேட்க" எனுஞ் சொற்றொடர் இந்நூலின் சிறப்புப்பாயிரத்துட் காணப்படலால் இது கத்திய ரூபமான நூலென்பது பெறப்படும்.

**நூல் இயற்றப்பட்ட வரலாறு:**

> உரராசர் தொழுகழன்மேக் கறானென் றோது
> முலாந்தேசு மன்னனுரைத் தமிழாற் கேட்க
> யாழ்ப்பா ணத்தின்
> செய்திமயில் வாகனவேள் செப்பி னனே.

எனவரும் சிறப்புப்பாயிரச் செய்யுளால் இந்நூல் இயற்றப்பட்ட வரலாறு நன்கு புலனாகின்றது. சிறப்புப் பாயிரத்திற் கூறப்படும் மேக்கறான் எனும் பெயர் யாரைக் குறிக்கும் என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. ஆண்டுக் காண்க.

# யாழ்ப்பாண வைபவமாலை ஆராய்ச்சி

இந் நூலி[illegible] காணப்படும் இரு சிறப்புப்பாயிரங்களுள் 'உரராசர் தொழு[illegible]மூன்' எனத் தொடங்கும் செய்யுள் வரதபண்டிதர் பாடியது என்பதும், 'ஒண்ணலங்கொள்' எனத் தொடங்கும் செய்யுள் சின்னத்தம்பிப்புலவர் பாடிய தென்பதும் ஸ்ரீ வ. குமாரசுவாமியவர்களது மதமாகும். மயில்வாகனப் புலவர் தாம் எழுதிய 'வைபவ மாலை'' எனும் நூலுக்குக் (1) கைலாயமாலை, (2) வையாபாடல், (3) பரராசசேகர[illegible]லா, (4) இராசமுறை என்னும் நூல் களையே ஆதாரம[illegible]கக் கொண்டாரென்பது சிறப்புப்பாயி ரச் செய்யுளால் ந[illegible]ன்கு புலப்படும். இந்நூல் நான்கும் தமிழரசர் காலத்தையே விளக்குவன.

மயில்வாகனப் புலவர் இந்நூலில் யாழ்ப்பாடி வரலாறு வரை வையாபாட்லைத் தழுவியும், கூழங்கைச் சக்கரவர்த்தி யின்கீழ் யாழ்ப்பாணக் குடியேற்றம் வரை கைலாயமாலை யைத்தழுவியும், யாழ்ப்பாணத் தரசர்களின் வரிசை பரராச சேகரன் வரலாறு ஆகிய இவைகளை இராச முறையினையும் பரராசசேகரன் உலாவையும் தழுவியும் எழுதியுள்ளாரென வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் குறிப்பிடுகின் றூர்கள். போர்த்துக்கேயர் கால வரலாற்றுக்கும் ஒல்லாந் தர் கால வரலாற்றுக்கும் மயில்வாகனப் புலவர் தாம் கேள்விப்பட்டவற்றையும் கன்ன பரம்பரையினையும் ஆதார மாகக்கொண்டு தலை தடுமாற்றமான கூற்றுக்கள் பலவற் றைப் புகுத்திவிட்டார். இவர் சிறந்த புலவரன்றிச் சரித் திராசிரியர் எனக்கருத இடமில்லை. எனினும் இராசமுறை யும் பரராசசேகரனுலாவும் வெளிவராதிருக்கும் வரை, யாழ்ப்பாண வைபவமாலைதான் யாழ்ப்பாணத்தரசர்களின் வரலாற்றை விளக்கிக்காட்டும் தீபமாக மிளிர்கின்றது.

இந்நூலிற் காணப்படும் சரித்திர முரண்பாடுகளை யெல்லாம் வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் 'The Ceylon Antiquary and Literary Register' (Volume VI Part III) எனும் சஞ்சிகையில் எழுதிய 'Sources of

the Yalpana Vaipava Malai' எனும் கட்டுரையிற் காணலாம். மேலும் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'Kings of Jaffna' எனும் நூலிலும், 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' எனும் நூலிலும் விரிவாகக் காணலாம். அங்ஙனமே முதலியார் இராசநாயகம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'Ancient Jaffna' எனும் ஆங்கில நூலிலும், 'யாழ்ப்பாணச் சரித்திரம்' எனும் தமிழ் நூலிலும் விரிவாகக் காணலாம் இவற்றிற் காணப்படும் முக்கிய குறிப்புக்களையெல்லாம் இந் நூலிலும் அடிக்குறிப்பாகக் காட்டியுள்ளேம். அவற்றையெல்லாம் ஈண்டெடுத்துத் தொகுத்தெழுதுவதாயின் இவ் வாராய்ச்சி அளவின்றி விரியுமாதலின் குறிப்பிடாது விடுகின்றேம். இந் நூலை ஏடுகளிற் பிரதிசெய்தவர்களும் பதிப்பித்தவர்களும் தம் கருத்துக்களையும் இடைச்செருகலாகப் புகுத்திவிட்டனர். அவற்றை இயன்றவரை நீக்கியே இந்நூலை வெளியிட முயன்றுள்ளேம்.

## இப்பகுப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

பி-ம். — பிரதிபேதம்

தி. த. க. பிரதி — திரிகோணமலை, த கனகசுந்த்ரம்பிள்ளை பிரதி.

யா. ச. — யாழ்ப்பாணச்சரித்திரம் – முதலியார் செ. இராச நாயகம்.

யா. வை. வி. — யாழ்ப்பாண வைபவ விமர்சனம் – வண. சுவாமி ஞானப்பிரகாசர்.

இ. ஆ. — இடப்பெயர் ஆராய்ச்சி – திரு. S. W. குமார சுவாமி அவர்கள்.

உ தா. பிரதி. — உதயதாரகைப் பிரதி.

யா. வை. கௌமுதி. — யாழ்ப்பாண வைபவ கௌமுதி – வயாவிளான், திரு. க. வேலுப் பிள்ளை அவர்கள்.

# யாழ்ப்பாண வைபவமாலை

### சிறப்புப்பாயிரம்

க. உரராசர் தொழுகழன்மேக் கறாவினென் றேது
முலாங்தேசு மன்னனுரைத் தமிழாற் கேட்க
வரராச கைலாய மாலை[1] தொன்னூல்
வரம்புகண்ட கவிஞர்பிரான் வையா பாடல்[2]

---

க. இச் செய்யுளொன்றுதான் பெரும்பான்மையாக வழக்கிலுண்டு.

1. இந்நூல் ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்களால் 1906-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுளது. ஸ்ரீமதி க. இராஜ ராஜேசுவரி அம்மையார் எழுதிய அரும்பதவிளக்கம் பிண்டப்பொழிப்பு என்பவற்றையும், முதலியார் இராசநாயகம் அவர்கள் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையினையும், ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 1907-ம் ஆண்டில் வெளியிட்ட ஆங்கில மொழிபெயர்ப்பினையும் ஒருங்கு சேர்த்து, இந்நூல் ஸ்ரீமான் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களால் 1939-ம் ஆண்டு மீட்டும் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுளது. (நூலாசிரியர்: முத்துராச கவிராசர்.)

2. இந்நூல், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் J. W. அருட்பிரகாசம் அவர்களால் 1921-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுளது. இது ஸ்ரீமான் இ. து சிவானந்தன் அவர்களாலும் 1922-ம் ஆண்டு பினாங்கில் பதிப்பிக்கப் பட்டது. இந்நூல் உரைநடையில் "வையா எனும் நாட்டு வளம்" என்ற பெயருடன் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் 1921-ம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கின்றது.

பரராச சேகரன்றன் னுலாவுங்[1] காலப்
படிவழுவா துற்றசம்ப வங்க ளட்டுந்
திரரா[illegible][1] முறைகளுந்தேர்ந் தியாழ்ப்பாணத்தின்
செய்தி[illegible]யில் வாகனவேள் செப்பி னானே.

உ. ஒண்ணலங்கொள் மெக்கறுனென் றோதுபெயர்
பெற்றவிற னுலாந்தே சண்ணல்
பண்ணலங்கொள் யாழ்ப்பாணப் பதிவரலா
றுரைத்தமிழாற் பரிந்து கேட்கத்
திண்ணிலங்கு வேற்படையான் செகராச
சேகரன்றொல் லவைசேர் தொன்னூல்
மண்ணிலங்கு சீர்த்திவையா மரபில்மயில்
வாகனவேள் வகுத்திட் டானே.

---

1. இந்நூல் வெளிவந்திலது.

உ. பிரித்தானிய நூதனசாலையில் உள்ள பிரதியிலிருந்து பிரதி செய்து முதன்முதலாக வெளியிட்டவர் முதலியார் இராசநாயகம் அவர்களாவர்—Hindu Organ 29-10-34.

இச்செய்யுள்களின் வரலாறு விளங்கவில்லை, இவற்றைப் பாடினோர் யாவர் எனத் துணிந்து கூற முடியவில்லை. க-ம் செய்யுளைப் பாடியவர் வரதபண்டிதர் எனவும், உ-ம் செய்யுளைப் பாடியவர் சின்னத்தம்பிப் புலவர் எனவும், காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. குமாரசுவாமி அவர்கள் கருதினார்கள். புலவர் மூவரும் ஒரேகாலத்தவர் என்ப துண்மையெனினும், பாடினோர் வரலாறு துணிந்து கூற முடியவில்லை.

# யாழ்ப்பாண வைபவமாலை

## இராட்சதர்

கிரேதத்திரேதத்துவாபர[1] உகங்களென்னும் முதல் மூன்றுகங்களிலும் இலங்கையை இராட்சதர்கள்[2] அரசாண்டார்களென்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன. இராவணசங்காரம் முடிந்த பின், இவ் விலங்கை யரசாட்சியைத் தசரத ராமனுற் பெற்ற விபீஷணன் கலியுக முற்கூற்றிலும் அரசியற்றி நாராயண மூர்த்தியின் உத்தரவு பெற்று வைகுந்த பதவியில் தேகமுத்தி யடைந்தானென்றும், அவன் நீங்கியபின் வேற்றரசரின் கீழ்க் குடிகளாயிருப்பது நெறியல்லவென்று இராக்கதக் குடிகளாயுள்ளோ ரனைவரும் இலங்கையை விட்டு வலசை வாங்கினர்களென்றுஞ் சொல்லுவது கன்னபரம்பரை.

## விஜயன்

இற்றைக்கு 2400[3] வருஷங்களுக்குமுன் இவ் விலங்கை நாடு யானை, கரடி, புலி மிருகங்கள் சஞ்சரிக்கும் பெரு வனந்தரமாயிருந்தது. அவ் வனந்தரத்திற் சில வேடரேயன்றி யாதொரு

---

1. கிரேதயுகம் — 17,28,000 வருடங் கொண்டது
   திரேதயுகம் — 92,96,000 ,, ,,
   துவாபரயுகம் — 8,64,000 ,, ,,

2. இராட்சதர்—இயக்கர்.

3. இச்சரித்திரம் எழுதிய காலம் கி. பி, 1790-க்கு முன் பின்னுய் இருக்கவேண்டும்.

மானிட சீவனு மிருந்ததில்லை. அக்காலத்திலே வங்கதேசத்துச் சத்திரியமரபிற் பிறந்து, இலாட தேசத்தை யரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விஜயனென்பவன் மகா துஷ்டனாயிருந்ததினால், அவனைப் பிதாவாகிய சிங்கவாகு துரத்திவிட, அவன் புறப்பட்டு அங்குமிங்கும் போக ஒருவரும் இடங் கொடாததினால் அவன் காசிக்குப்போய் அங்கே யிருந்தான்.

## ஆசாரியர்

அவ்விடத்தில் விஜயகுமாரனுக்கு "நீ இலங்கை நாட்டின் மத்தியிலுள்ள கதிரைமலையிற் போயிரு, அந்த நாடு உனக்குடையது" எனச் சொப்பனத்தில் உத்தரவு கிடைத்ததினால் அவன் **நீலகண்டாசாரியர்** என்னுங் குருவை யழைக்க, அவர் தமது பத்தினியாகிய **அகிலாண்டவல்லியம்மாளையும்**, புத்திர புத்திரிகளையும் மருமக்களையுங் கூட்டிக்கொண்டு வந்து தனது பரிவாரங்களுடன் கதிரைமலையிற் சேர்ந்தான்.[1]

## குடியேற்றம்

அக்காலத்தில் இலங்கையிற் குடிசனங்கள்[2] யாருமில்லாததினால், விஜயராசன் குடிகளை யழைத்

---

1. புத்த தேவர் நிர்வாணதசையை யடைந்தநாளில் விஜயன் இலங்கையி லிறங்கினான். (மகா: 54). விஜயன் இலங்கையில் இறங்கியவிடம் மாந்தை அல்லது கீரிமலை யாகும் (யா. ச. 9). பிற்காலத்தில் சிங்கைநகர் என வழங்கிய வல்லிபுரத்திலுமாயிருக்கலாம்.

2. இலங்கைத் தீவில் இயக்கர், நாகர் என்னும் பூர்வீக குடிகள் பரவியிருந்தனர் (மகா: 3, 7). இவர்கள் திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள்; சைவ சமயத்தினர்.

னுக் குடியேற்றக் கருதிப் பல முயற்சிகளைச் செய்துபார்த்தான். இலங்கை இராட்சத நாடா யிருந்ததினால், அவ்விடத்துக்கு வடநாட்டோ மென்று கன்னியாகுமரி தொடங்கி இமயமலை பரியந்தமிருந்த அனைவரும் மறுத்துப் பேசினார்கள். அக்காலத்திலே மகதநாட்டுச் சனங்கள் அநேகர் புத்த சமயத்துக்குட்பட்டதினால், மகதராசன் அவர் களை அந்நாட்டைவிட்டுத் துரத்திவிட, அவர்களிற் சிலர் இமயமலைக்கு வடதிசையிற் போயிருந்தார் கள். பலர் பிரமபுத்திர நதியைக் கடந்து கிழக்கே போய் பிரமதேசத்தைச் சேர்ந்த சீயம் முதலிய நாடுகளில் அலைந்து திரிந்தார்கள். அந்தச் செய் தியை **விஜயராசன்** அறிந்து அவ்விடஞ் சென்று அவர்களிற் பல குடிகளை யழைத்துவந்து இலங் கையி னெத்திசையிலுங் குடியேற்றி,[1] நகரப் பிர திஷ்டை செய்து, அரசாட்சியை ஆரம்பித்தான். அந்தப் புத்தர்கள் சிங்கள[2] மென்று பெயருள்ள இலங்கையிற் குடியேறினதாற் சிங்களரெனப்[3] பெயர் பெற்றார்கள்.

---

1. இச்செய்தி மகாவமிசம் முதலிய சிங்கள நூல்களில் இல்லை.

2. இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் 'எலு' வென்று இக்காலத்திற் பிழைபட வழங்கப்படும் 'ஈழு' வென்னும் நிறைவற்ற பாஷையே பேசி வந்தார்கள். அத னால் இலங்கைக்கு 'ஈழம்' என்றும் 'ஈழமண்டல' மென்றும் பெயர் உண்டாயது. 'ஈழம்' 'சீழம்' என மருவிச் சிஹழம்' 'சிங்களம்' என மாறியது. (யா. ச. ப 11). 'எலு' பாஷை தமிழின் பாகதமென்பர் சுவாமி ஞானப்பிரகாசர்.

3. பூர்வீக சிங்களருட் பெரும்பாலார் திராவிடரும், மிகச் சிறுபாலார் மகதநாட்டினருமாம். சிங்களருடைய நடை யுடை பாவனைகள் சமயம் முதலியன தமிழர்க

## நாற்பெருங்கோயில்

குடிகளை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தினுல் விஜயராசன் சமய வழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கு இஷ்டங் கொடுத்திருந்தும் தன் சமயாசார வொழுக்கத்தைத் தவருமற் காத்துக் கொண்டான்.[1] அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே விஜயராசன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை யெழுப்பிக்கொண்டான். கீழ்த்திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை[2] நிறுத்தி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேச்சுரச் சிவாலயத்தைப் புதுப்பித்து, தென்றிசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலை யெழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைச்சாரலில் திருத்தம்பலையெனும் பதியிலே திருத்தம்பலேச்சுரன், திருத்தம்பலேசுவரி கோவில்களையும், அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோவிலையும்[2] கட்டுவித்து, அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாசாரியனின் மூன்றாங் குமாரன் வாமதேவாசாரியர் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பன்னி

---

ளுடையவற்றைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இவர்களுடைய மொழி தமிழும் மகதநாட்டு மொழியுங் கலந்த தோன்றும். —(பிறிற்றோ). சிங்களர் திராவிடமக்கட் கணத்தைச் சேர்ந்த வொரு பிரிவினர் (மனுஷ பரம்பரை—Pedigree of Man—ஆசிரியர் ஹெக்கல்—Prof. Hackel).

1. விஜயன் பாண்டிய வரசனின் மகளை மணந்தானென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவனும் சைவ சமயத்தவன் எனக் கொள்ளல் சரித்திரத்தோடு முரணுகாது இயைந்து நிற்றல் காண்க.

2. பி-ம் புதுப்பித்து.

யாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து அக் கிரகாரம் முதலிய வசதிகளுங் கொடுத் திருத்தி வைத்தான். அக்கோவில் அவ்விடத்துத் தோன் றிய காரணத்தால் அந்தக் கிராமம் கோவிற்கடவை யெனப் பெயர் பெற்றது.

## நகுலமுனி

முற்காலத்திலே நகுலமுனியென்னும் ஓர் இருடி அங்குள்ள மலைச்சாரலிலே சிலகாலந் தங்கி யிருந்து தீர்த்தமாடி வந்தபொழுது தன் முகத் துக்கிருந்த அங்கவீனம் நீங்கிப் போனதுகண்டு அத்தல விசேடத்தையுந் தீர்த்த மகிமையையுங் குறித்து வியப்புற்று அவ்விடமே தனக்குத் தவஞ் செய்தற்கேற்றவிடமென்று அம்மலை முழைஞ் சிலே வாசஞ்செய்துகொண்டிருந்தார். அம்முனி வனுக்குக் கீரிமுகம மாறிய காரணத்தால் அம் மலைக்குக் கீரிமலை[1] யென்பார்கள். [2]விஜயராசன் அவ்விடத்திற் சிவாலயங் கட்டுவித்தபின் நகுல முனிவர் அவ்வாலயங்களிற் றங்கியிருந்து வழிபாடு பண்ணிவந்தார். அதனால் திருத்தம்பலேசுரர் கோவிலை நகுலேசுரர் கோவிலென்றும் திருத்தம்பலேசுவரி

1. கிரி என்னும் வடசொல்லும் அதன் பொருடரும் மலை என்னுந் தென்சொல்லுஞ் சேர்ந்து கீரிமலை என்னும் நாமம் ஆக, அந்நாமம் காலக்கிரமத்திற் கீரிமலை என்று விகாரப்பட்டு வழங்கலாயிற்றென்று விளம்புவாருமுளர்— இ. ஆ. பக். 131. ஒப்பிடுக: சுதுமலை—Sutbuvala—vala—sand; கிரி—clinsene coracena.

நாகுலம் எனும் இதன் பழைய நாமம் நகுலமென மருவிப் பின் தமிழில் கீரிமலையென்ருயிற்று. யா. ச பக். 3.

2. தி. த. க. பிரதி—"நகுலம் என்பது கிரி" என்பதுஞ் சேர்க்கப்பட்டுளது.

யம்மன் கோவிலை நகுலாம்பிகையம்மன் கோவிலென்றும் பெயரிட்டு வழங்கி வந்தார்கள். விசயராசன் திருப்பணி நிறைவேற்றி முடித்தபின் பிரயாணப்பட்டுத் தன் இராச்சியம் முழுவதையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு கதிரைமலையைச் சேர்ந்தான்.

## விஜயன் மரணம்

அவன் அதன்பின்பு தம்மனு என்னுமிடத்தை இராசதானியாக்கித் தன் மனைவியையும்[1] இரண்டு குழந்தைகளையும் தள்ளிவிட்டுப் பாண்டி நாட்டுப் பெண்ணொருத்தியை விவாகம் பண்ணிச்[2] சில வருஷக்காலம் அரசாண்டு புத்திர சந்தான மில்லாமல் இறந்துபோனான். அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்பவிடாமல் ஒருவருஷங் காப்பாற்றி, பின்பு விஜயராசனின் சகோதரன் குமாரனாகிய பாண்டுவசு என்பவனை அழைத்துவந்து அரசனாக்கினான். இவன் குலத்தில் அரசர் அதன்பின் அநேகந் தலைமுறையாக இவ்விலங்கைநாட்டை அரசாண்டு வந்தார்கள்.

## குளக்கோட்டன் வருகை

சாலிவாகன சகாப்தம் 358-ம் வருஷத்திலே (கி. பி. 436) மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருக்

1. மனைவி இயக்ககுலக் 'குவேனி' யென மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

2 இவன் பாண்டியன் மகளையல்ல இலங்கையிலுள்ள நாக கன்னிகையை மணமுடித்தான் என்பர் இராசநாயக முதலியார் (யா. ச. பக். 11).

கோணேசர் மலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுது பட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுது பார்ப்பித்து அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்துவித்துக் கொண்டிருந்தான்.

## பாண்டுவின் ஆட்சி

அக்காலத்திலே கண்டிநாட்டிலிருந்து[1] இலங்கையை யரசாண்ட **பாண்டுமகாராசன்**[2] மணற்றிடரென்றழைக்கப்பட்ட இந்நாட்டில் வந்திருந்தான். இவ்விடத்திற் குடியிருந்த சிங்களரிற் சிலர் கீரிமலைக்குச் சமீபமாயிருந்த கரைதுறைகளிற் குடியிருந்த முக்குகரென்னும் வலைஞரைக் கொண்டு மீன் பிடிப்பித்து உணக்குவித்துக் கண்டி நாடு முதலிய நாடுகளுக்குக் கொண்டுபோய் வியாபாரம் பண்ணுவது வழக்கமாயிருந்தது.

## முக்குகர்

**உசுமன், சேந்தன்** முதலிய முக்குகத் தலைவர்கள் வேலையாட்களை வைத்து மீன் பிடிப்பித்துக் கொண்டு வந்தார்கள். சிங்களவர் நிழல் வசதிக்கும் தண்ணீர் வசதிக்குமாக அங்குள்ள சிவாலயங்களிற்றங்கி அக்கோவிற் பிரகாரங்களில் மீனைக் காயப்போட்டுந் திருக் கிணறுகளில் தண்ணீர்

---

1. பி-ம் அநுராதபுரத்திலிருந்து

2. இவன் காலம் சிங்கள நூல்களின்படி கி. பி. 491 ஆகும்.

அள்ளவுந் தொடங்கினதினல் அங்கிருந்த பிராமணர் கோவில்களைப் பூட்டிக்கொண்டு அப்புறத்தே ஒதுங்கிவிட்டார்கள். கோவில்களிற் சில காலம் பூசை யில்லாமலிருந்தது. அதையறிந்து **பாண்டுமகாராசன்** கீரிமலைச்சாரலில் வந்திறங்கி விசாரணை செய்து, நியாயமான தண்டனைசெய்து, முக்குகக் குடிகளை அவ்விடத்தைவிட்டுத் துரத்திவிட்டான். **உசுமன்** முதலிய முக்குக வலைஞர்கள் அவ்விடத்தை விட்டு மட்டக்களப்புக்குப் போய்ப் பானகை, வலையிறவு என்னுமிடங்களில் இருந்தார்கள். சில குடிகள் மாத்திரம் இந்நாட்டிலுள்ள மறு துறைகளிற் போய்க் குடியிருந்தார்கள். அது முதல் உசுமன் துறை, சேந்தான்களம், வலித்தூண்டல் முதலிய இடங்களில் முக்குகக் குடிகள் இருந்ததில்லை.

## குளக்கோட்டன்

**பாண்டுமகாராசன்** இந்த முகாந்திரத்தினல் இவ்விடமிருக்க அவன் மனைவி, **குளக்கோட்டமகாராசன்** கோணேசர் கோவிற் றிருப்பணி நிறைவேற்றுஞ் செய்தியைக் கேள்விப்பட்டுக் **கண்டியிலிருந்த**[1] சில சேனைகளை 'நீங்கள் போய் அந்தக் குளக்கோட்டனை இந்நாட்டினின்று துரத்திவிட்டு வாருங்கள்' என்றனுப்பிவிட்டாள். அந்தச் சேனைகள் தம்பலகாமத்திற் போய் அவ்விடத்திற் குளக்கோட்டரசன் நிறைவேற்றும் பெரிய வேலைகளையும் அவனுடன் நின்ற சேனைத் திரளையும் கண்டு பயந்து நடுநடுங்

1. பி-ம். அநுராதபுரத்திலிருந்த

கினார்கள். அரசன் அவர்களை நோக்கி, "ஏன் வந்தீர்கள்" என்க, அவர்கள், "மகாராசனே! இந்தத் திருப்பணிக்கு வேண்டிய பொருள் யாதேனும் தேவையென்றால் விசாரித்துக் கொடுத்து விட்டு வாருங்கள் என்று எங்கள் அரசி அனுப்ப, வந்தோம்" என்றார்கள். அப்பொழுது மகாராசன் அவர்களை நோக்கி, "வேண்டிய சகல வஸ்துக்களும் என்னிடத்திற் சம்பூரணமாயிருக்கின்றன; யாதொன்றும் வேண்டியதில்லை; உங்கள் சேமாதிசயங்களை விசாரித்தேன் என்று உங்கள் இராணிக் கறிவியுங்கள்" என்று சொல்லி அச்சேனை முழுவதற்கும் உச்சிதமான விருந்துகொடுத்தனுப்பினான். அவர்கள் திரும்பிப்போய் அவ்விடத்திலே நடந்த செய்தி யனைத்தையும் அறிவித்துத் தாங்களுண்ட விருந்திற் பரிமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து பேசினார்கள். இராசாத்தி அந்தச் செய்தியைக் கேட்டு யாதொரு பேச்சுமின்றி இருந்தாள்.

குளக்கோட்டு மகாராசன் திருப்பணியை நிறைவேற்றி யவ்வாலயப் பணிவிடைகளை நிறைவேற்றுதற்கும், கோணேசலிங்கத்துக்குப் பூசனை புரிவிப்பதற்கும் செலவு வரவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையுந் தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ் செலுத்தும்படி வன்னியர்களை[1] யழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான்.

1. இக்கூற்றினை நம்பக்கூடாதென்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள்—யா.ச. பக். 24.

அந்நாள் முதல் அவ் வருமானங்களால் ஆலயப் பணிவிடைகளும், அந்தணர் அக்கிரகாரங்களும், மடங்களும் சம்பிரமமாகச் சிறந்து வந்தன. சில காலத்தின் பின் குளக்கோட்டு மகாராசன் தேகவியோகமானன். அதன்பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க் குடிகளாயிருந்த வன்னியர்கள் மிகவும் பெருகியிருந்தார்கள். பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது வன்னியர்களும் வந்து அவர்களுடனே கூடினர்கள். குடிசனங்கள் வர வரப் பெருகி அதிகப்பட்டுக் கொண்டமையால், அரசாட்சியின்றி வெகுவித கலகங்கள் பலகாலும் நேரிட்டன. அவ் வேழு நாடுகளின் வருமானங்களும் கோணேசர் கோவிலுக்குச் செல்வனவேயன்றிக் கண்டிநாட்டரசருக்கு அந்நாடுகளால் யாதொரு நயமுமில்லாமையாற் கண்டிநாட்டு அரசர்கள் அந்நாடுகளைப் பராமுகம் பண்ணிவிட்டார்கள். அக்காலத்திலே சந்திரவன்னியனும் வேறு அநேக குறுநில மன்னரும் ஒருவரின்பின் ஒருவராகத் தோன்றி யழிந்தபின் அவ்வன்னியர்கள் அனைவரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியிற் றலைப்பட்ட ஏழு பேரைத் தெரிந்து அவ்வேழு நாடுகளுக்குந் தலைவராக்கி அவர்களுக்குக் கீழ் அமைந்திருந்தார்கள். வன்னியர்கள் ஆண்டு வந்ததினுல் அவ்வேழு நாடுகளும் வன்னிநாடுகளெனப் பெயர் பெற்றன. அதுமுதல் அவ்வேழு தலைவரின் சந்ததியார் சுயேச்சைப்படி ஆண்டு வந்தார்கள்,

சாலிவாகன சகாப்தம் 515-ம் (கி. பி. 593)[1] வருஷத்திலே இலங்கையரசனுயிருந்த அக்கிரபோதி

1. முதலாம் அக்கிரபோதியின் காலம் சிங்கள நூல்களின்படி கி. பி. 564–597 ஆகும்.

மகாராசன், இவ் வன்னியர்கள் தாங்களும் அர சர்களென்னும் எண்ணங் கொள்ளப் பார்த்ததை யறிந்து அவ் வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தன்னாணையைச் சரியாகச் செலுத்தி வந்தான். அதுமுதல் அவ்வன்னியர்கள் நாட்டதி காரிகளாய் மாத்திரம் ஆண்டுவந்தார்கள்.

## உக்கிரசிங்கன்

சாலிவாகன சகாப்தம் 717-ல் (கி. பி 795)[1] **விஜயராசனின்** சகோதரன் மரபிற் பிறந்த **உக்கிர சிங்கன்** என்னும் அரசன் வடதிசையிலிருந்து வெகு திரளான சேனைகளைக் கொண்டுவந்து போராடிச் சில தலைமுறையாய் இழந்துபோன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக் கும் பிடித்துக் கதிரைமலையிலிருந்து அரசாண்டு வந்தான். தென்னாடுகளை வேற்றரசன் ஆண்டு வந்தான்

**இவ் வுக்கிரசிங்க மகாராசனுக்குச்** சிங்கத்தை யொத்த முகமும் மானிட தேகமுமிருந்தன. இவன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்கக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி, முற்காலத்திலே சோழராசன் தான் தீர்த்தமாட வந்திறங்கியிருக்குங் காலத்திலே மாளிகை கட்டுவித்திருந்த வளவர்கோன் பள்ள மென்னும் இடத்திலே பாளயமிட்டிருந்தான்

1. உக்கிரசிங்கனரசுக்கு வைபவமாலை கொடுத்தோது கின்ற 717-ம் சகவருஷத் தொடக்கம் பொருந்தாது—(யா. வை. வி. பக். 48). இவன் கலிங்கதேசத்திருந்து வந்த வன் அல்லது விஜயனுடன் வந்து சிங்கபுரத்திற் குடி யேறிய தலைவனோ?—யா. ச. 28.

## தொண்டைமான் வரவு

அவன் அவ்விடத்தில்[1] வந்திருப்பதையும் கரணவாய், வெள்ளப்பரவை முதலிய இடங்களில் நல்லுப்புப் படுஞ் செய்தியையும் தொண்டை நாட்டை யரசாண்ட தொண்டைமான் என்னும் அரசன் கேள்விப்பட்டுப் பரிவாரங்களுடன் கிரி மலைச் சாரலில் வந்திறங்கிச் சந்தித்து இந்நாட்டில் விளையும் உப்பிலே தனக்கு வேண்டியவளவு வருடந்தோறும் விலைக்குக் கொடுக்கவும், உப்புப் படு மிடத்துக்குச் சமீபத்திலே மரக்கலங்களைக் கொண்டுபோய் உப்பேற்றவும், மாரிகாலங்களில் மரக்கலங்களை ஒதுக்கிவிட்டு நிற்கவும் வசதியாக வடகடலில் ஓர் ஆறு வெட்டுவித்துக்கொள்ளவும் உத்தரவு கேட்டான். உக்கிரசிங்க மகாராசன் உத்தரவு கொடுக்கத் தொண்டைமான் அங்கிருந்த சிற்றாற்றை மரக்கலங்கள் ஓடத்தக்க ஆழமும் விசாலமும் உள்ளதாகவும் ஒதுக்கிடமுள்ளதாகவும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அதுமுதல் இதுவரைக்கும் அவ்வாறு தொண்டைமானாறு என்றழைக்கப்படுகின்றது.

## வன்னியர் அடக்கம்

உக்கிரசிங்க மகாராசன் அதன்பின் கதிரைமலைக்குத் திரும்பினான். அவன் வன்னிமார்க்கமாகச் செல்லுகையில் வன்னியர்கள் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து தாங்கள் வன்னிநாடுகளைத் திறை கொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள். அரசன்

1. பி-ம். அவ்விடமிருக்க.

தன்னிராச்சியமெங்கும் தன்னாணையே செல்லவுந் தனக்கு வரவேண்டிய திறையைக் கோணேசர் கோவிலுக்குக் கொடுக்கவும் உடன்பாடு பண்ணுவித்துக்கொண்டு கதிரைமலையிற் சேர்ந்தான்.

## மாருதப்பிரவல்லி

இவைகள் சம்பவித்த எட்டாம் வருடத்திலே சோழ தேசாதிபதியாகிய **திசையுக்கிரசோழன்** மகள் **மாருதப்பிரவல்லி**[1] யென்பவள் தனக்கிருந்த குன்ம வியாதியினால் மெலிந்தவளாய் வியாதியை வைத்தியர்கள் ஒருவருஞ் சுகமாக்க முடியாததினால், இனித் தீர்த்த யாத்திரையாகுதல் செய்து பார்த்தால் சுகம் வரவுங்கூடும் என்றெண்ணிக் காவிரிப் பூம் பட்டினத்திலிருந்து புறப்பட்டு அங்குமிங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையில் **சாந்தலிங்கனென்**னும் ஒரு சந்நியாசி கண்டு, "உன் வியாதி பண்டிதர் ஒருவராலுங் குணமாக்கத் தக்கதல்ல. நீ இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகம் தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்றொரு மலையுண்டு அது சமுத்திர தீரத்திலுள்ளது. அங்கே உவர்ச்சல மத்தியிற் சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமுங் கலந்த உத்தம தீர்த்தம் ஒன்றுண்டு. உலகத்திலுள்ள எந்தத் தீர்த்தங்களிலும் முக்கிய தீர்த்தமாயிருக்கின்றது. அதிலே நீ போய் நீராடிச் சிலகாலந் தங்கியிருந்தாற் சுகமடைவாய்" என்று சொல்ல, அச் சொற்

1. மாருதப்பிரவாகவல்லி உள்ளபடி மாறுதலடைந்த ஆடகசவுந்தரியேயாம். (யா. வை. வி. பக். 12)

படி மாருதப்பிரவல்லி புறப்பட்டுத் தாதிமாருந் தோழிமாருஞ் சேனைவீரருஞ் சூழ்ந்துவரக் கிரி மலைச் சாரலில் வந்திறங்கிக் குமாரத்தி பள்ள மென்னும் இடத்திற் பாளயம் போட்டுக்கொண் டிருந்து நகுலமுனிவரைக் கண்டு சாட்டாங்கமாக[1] வணங்கி, அவரால் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டு அத் தல விசேடத்தையும்[2] தீர்த்த மகி

---

1. பி-ம். பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்து

2. 'உதயதாரகை'யில் வெளிவந்த பிரதியிலும் தி. த. க. அவர்களது பிரதியிலும் கீரிமலைத் தல விசேடமும் தீர்த்த மகிமையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன அவற்றையும் ஈண்டுக் குறிப்பிடுகின்றாம்.:—

அப்பொழுது நகுலமுனி அவளை நோக்கி " மாருதப்பிர வல்லியே, உனக்குத் தேவகடாட்சங் கிடைத்ததினால் நீ இத்தலத்தில் வந்திறங்கப்பெற்றாய். இத்தல மகிமையைச் சொல்லுகிறேன் கேள்: கிரேதாயுகத்திலே பரமேஸ்வர மூர்த்தி பார்வதிதேவியுடனே இம்மலைச் சாரலி லெழுந் தருளியிருந்தபொழுது பார்வதிதேவி நீராடுவதற்காகக் கண்டகி தீர்த்தத்தை அப் பரமேஸ்வரமூர்த்தி இவ்விடத் தில் அழைத்து வைத்தார். அத்தீர்த்தத்திலே தேவர்களும் இருடிகளும் பிறரும் வந்து தீர்த்தமாடிப் புண்ணியவான் களாய்ப் போனதினால், அம்முதலாமுகத்திலே இந்நாடு புண்ணியபுரமெனப் பெயர்பெற்றது. இக்காலத்திலே முசுகுந்தச் சக்கரவர்த்தி இவ்விடம் வந்தபொழுது நானும் அவருடனே கூடிவந்து இம் மலைச்சாரிலுள்ள கண்டகி தீர்த்தத்திலாடிச் சிவாலய தரிசனமுஞ்செய்து வருகையில் எனக்கிருந்த கீரிமுக மாறிச் சுபாபமுகங் கிடைத்தது. அதுமுதல் இம்மலையை நகுலகிரியென்றும் இங்குள்ள ஈசுவரனை நகுலேசுவரனென்றும் ஈசுவரியை நகுலாம்பிகை யென்றும் பெயரிட்டழைத்து வருகிறார்கள். அக்காலத்தில் முருகமூர்த்தி சூரசங்காரம்பண்ண கதிரைமலைக்கு முறையே செல்லுகையில் இந் நகுலகிரிச் சாரலில் வந்திறங்கி நகு லேசர் கோவிலி னயலிலே தனக்குமொரு ஆலயமெழுப்பிச் சிலநாளதிலே தங்கியிருந்தார். கலியுகத்திலே அவ்வால யத்துக்குக் கதிரையாண்டவர் கோவிலென்னும் பெயர்

மையையும் அத் தீர்த்தத்தில் ஆடித் தனக்குக் கீரி முகம் மாறின செய்தியையும் அம்முனி சொல்லக் கேட்டு மகா சந்தோஷத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனைசெய்து வந்தாள். சிலகாலத்தில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரைமுக மும் மாறிற்று. மாறவே மாருதப்பிரவல்லியின் யௌவன சொரூபத்தைக் கண்டவர்கள் ஆச்சரி யங் கொள்ளாதிருந்ததில்லை.

---

விஜயராசனால் கிடைத்தது. கந்தசுவாமி வந்திறங்கின துறை காங்கேசன்துறையென் றழைக்கப்பட்டு இப்பொழுது கசாத்துறையென்னும் பெயர் பெற்றிருக்கிறது.

"இரண்டாம் உகத்திலே இராவணன் தானொருவனே யன்றி வேறொருவரும் இராவண வீணையைத் தொடவும் படாதென்று உறுதியான கட்டளை பண்ணியிருந்தபொழுது சித்திராங்கதன் என்னுமொரு கந்தருவன், தானும் அவ் வீணையை வாசிக்க நெடுங்காலம் பேராசை கொண்டிருந் தவன், தசரதராமனால் அவ்விராவணனுடைய இருபது கைகளும் அறுந்து விழுந்த சமையத்திலே அவ் வீணையைக் கவர்ந்துகொண்டு கீரிமலையில் வந்திறங்கி அவ்வியாழைப் பிரபலப்படுத்தினான். அதனால் இவ்விடம் காந்தருவநகரென் றும் வீணாகராக்கியமென்றும் அழைக்கப்பட்டது.

"மூன்றாமுகத்திலே நிடதநாட்டிலிருந்து அரசுபுரிந்த நளனென்னுஞ் சூரியகுலராசன் சூதாடி யரசிழந்து வன வாசஞ் செய்து திரிந்தபொழுது கலியினால் தனக்கு வந்த இடரை நீக்கவேண்டுமென்ற ஆவலுடனே இலங்கையி லுள்ள கோணேசர் சந்நிதானத்துக்கு வந்தான். அங்கிருந்த பெரியார் அவனை நோக்கி 'நீ கீரிமலைக்குப் போய் அங் குள்ள கண்டகி தீர்த்தத்திலாடி நகுலேசர் தரிசனையும் செய்தால் உன் கலி தொலையு'மென்று சொல்ல அச்சொற் படி அவன் செய்தான். அப்பொழுது நகுலேசர் பிரசன்ன மாகி அவனை நோக்கி 'நீ வேண்டிக்கொண்டபடி செய்தேன் போ'வென்றருளிச் செய்து தன் கையிலக்கினியையும் தானணிந்திருந்த சர்ப்பத்தையும் நோக்கி 'நீங்கள் போய் நளச்சக்கரவர்த்தியை வழியிலே சந்தித்து அவனைப்பிடித்த கலியிடரை நீக்கி வாருங்க'ளென் றுத்தரவு பண்ணினார்.

அக்காலத்திலே கதிரைமலையிலிருந்து **உக்கிர சிங்க மகாராசன்** நகுலேசர் கோவிலைத் தரிசிக்க மூன்ருந்தரம் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி வளவர்கோன் பள்ளத்திற் பாளையம் போட்டிருந்தான். அவன் **மாருதப்பிரவல்லியை** நகுலேசர் சந்நிதானத் தயலிலே கண்டு அவள் பேரழகினுல் மயங்கி மிகுந்த ஆச்சரியங்கொண்டு தான் அவளை விவாகஞ் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

---

அப்படியே நளச்சக்கரவர்த்தி போகும் வழிக்கெதிரே அவ்வக்கினி யோர் சுவாலையா யெரிய வச்சர்ப்ப மச்சுவாலைக்குள்ளே விழுந்து வருந்துகிற பாவனைபோற் றுடிக்க, அதைக்கண்டு அச்சக்கரவர்த்தி பரிதாபப்பட்டு அச் சர்ப்பத்தின் பிராணனை இரட்சிக்க வேண்டுமென்று முயன்று அதனை அச்சுவாலையினின்றும் விலக்கிவிட்டான். விலக்கி விட்டவுடனே அச் சர்ப்பஞ் சினந்து பாய்ந்து அவனைக் கடித்தது அப்பொழுது அவன் தேகம் முழுவதும் குட்டம் பிடித்து அவனழகைக் கெடுத்தது. அப்பொழுது நளச்சக்கரவர்த்தி மனங் கலங்கி 'நான் செய்த நன்மைக்கு எனக்குக் கிடைத்த கைமாறிதுவா? சர்ப்பந் தன் சுயகுணத்தைக் காட்டிற்றே நான் இதற்கென்ன செய்யலா' மென்று எண்ணுதலெல்லாம் எண்ணி வருந்துகையில் அச் சர்ப்பம் ஓர் பிராமணனுகி நின்று அவனை நோக்கி 'ஓய் சக்கரவர்த்தியே! பயப்படாதே. நான் நகுலேசரணிந்திருக்குஞ் சர்ப்பாபரணம். அந் நகுலேசர் நீ செய்த வழிபாடு கண்டிரங்கி உன்னை வருத்துகின்ற கலியிடரை நீக்கி வாருங்களென்று எனக்குந் தாமேயிருக்கும் அக்கினிக்குங் கற்பித்ததில் நாமிருவரும் வந்தோம். உன்னை இன்னுனென்று ஒருவரும் அறியாதபடி நீ சிலகாலம் வேற்றுருவமைந்திருக்க வேண்டுமாதலால் அவ்வேற்றுரு வுனக்குக் கிடைப்பதற்காகவே உன்னுடலிற் றீண்டினேன். இவ் வேற்றுரு வேண்டுமென்று நீ விரும்புங் காலத்தில் உனக்குக் கிடைக்கும்; நீங்கவேண்டுமென நினைக்குங் காலத்தில் நீங்கிவிடு'மென்று சொல்லி, அவனுக்கு விடை கொடுத்துச் சர்ப்பமும் அக்கினியும் நகுலேசர் சமுகத்தை யடைந்தன.

## மாவிட்டபுரம்

மாருதப்பிரவல்லி தனக்குக் குதிரை முகம் நீங்கின காரணத்தினாற் கோவிற்கடவை யென்னுங் குறிச்சிக்கு மாவிட்டபுரம்[1] எனப் பெயர் சூட்டி அவ்விடத்திலே கந்தசுவாமி கோவிலைக் கட்டுவிக்க ஆரம்பித்து, அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் விக்கிரகங்களும் பிராமணரும் வரும்படி பண்ணவேண்டுமென்று பிதாவாகிய திசையுக்கிர சோழனுக்குத் திருமுகம் அனுப்பினாள். அப்பொழுது திசையுக்கிரசோழன் சகல ஆயத்தங்களும் பண்ணிக்கொண்டு இலங்கையிலேயுள்ள

---

"இது நடந்தேறிச் சிலகாலஞ் சென்றபின் தருமபுத்திர மகாராசனின் தம்பியாகிய அருச்சுனன் தீர்த்த யாத்திரையைப் பண்ணித் தென்றிசையை நோக்கி வரும்பொழுது இத்தலத்திலும் வந்திறங்கி இங்குள்ள கண்டகி தீர்த்தத்திலாடி நகுலேசர் சிவாலயத்திற்சேர்ந்து சுவாமி தரிசனமுஞ் செய்தான். அப்பொழுது நகுலேசர் நகுலாம்பிகையுடனே பிரசன்னமாகி அவனுக்கு வேண்டிய வரங்களுங் கொடுத்தருள்சுரந் தனுப்பிவைத்தார்.

"நாலாவதான இக் கலியுகத்திலும் அநேக தவத்திகளும் பெரியோரும் மூர்த்தி தலம் தீர்த்தமென்னும் முச்சிறப்புக்களையும் நோக்கி, இவ்விடத்துக்கு யாத்திரை பண்ணுகிறார்கள். இவ்வுலகத்தி லிந்தநாட்டைக் கீரிமலை நாடென்றும் மணற்றிடலென்றுஞ் சொல்வார்கள். இது மகா புண்ணிய தலம். நீ இத் தீர்த்தத்திலாடிச் சிவாலய தரிசனஞ் செய்தால் உனக்குள்ள பிணியும் நீங்கி உன் குதிரை முகமும் மாறு" மென்று சொல்லி இப்படியே இந்தத் தல விசேடத்தையும்............

1. இதற்கு வேறுபொருள் கூறுவாருமுளர். பரவை வழக்கிலுள்ள 'மாவட்டபுரமே' புராதன நாமமென்பர். அதனை 'மஹாவட்டபுர' என்னுஞ் சிங்களப்பெயரின் திரிபென்று சொல்வர். (மஹா – பெரிய; வட்ட – விஸ்தாரம், ஆலமரம்) இ. ஆ. பக். 132.

கீரிமலைநாட்டுக் கனுப்புவதற்குத் தில்லை மூவாயி ரரில் ஒருவரைத் தன்னிடத்துக்கு அனுப்பி வைக்கும்படி சிவாலயத் தலைவனுக்குக் கட்டளை யனுப்பினான் அப்பொழுது சிவாலயத் தலைவன், 'பிராமணர் தோணியேறுவதும், இலங்கையிற் குடியிருப்பதும் மகா தோஷமாயிருக்க அரசன் இப்படிக் கட்டளை யனுப்பி யிருக்கிறானே ; நான் இதற்கென்ன செய்யலாம்' என்று பயந்து தில் லைச் சிவாலயத்திலே மூன்று நாட் பட்டினி கிடந் தான். அப்பொழுது கனவிலே 'கீரிமலைச் சாரலா னது அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தினாலுஞ் சிவாலய மகத்துவத்தினாலும் மகா திவ்விய தல மாகவே யிருக்கின்றது. காசியிற் பிராமணரும் அங்கே யிருக்கிறார்கள். பிராமணர் தங்கள் நியம நிட்டை வழுவாமற் செய்வதற்கு மரக்கலங்களில் இராத் தங்காமல் ஏற்றலாம். நகுலமுனிவன் அத்தல விசேஷத்தை நோக்கி அவ்விடத்திலிருந்து தவம் பண்ணும்போதே அத்தல விசேடத்தைக் குறித்து யோசிக்க வேண்டியதென்ன? யாதொரு யோசனையுமின்றி அனுப்பலாம்' என்று உத்தரவு கிடைத்தது.

## பெரியமனத்துளார் வருகை

அப்பொழுது சிவாலயத் தலைவன் பெரிய மனத்துளார் எனுந் தீட்சதரைச் சோழராசனிடம் அனுப்பிவைக்கச் சோழராசன் சகல தளபாடங் களையுங் கந்தசுவாமி, வள்ளியம்மன், தெய்வ நாயகியம்மன் விக்கிரகங்களையும் பெரிய மனத்து ளார் கையில் ஒப்புவித்து அனுப்பிவைத்தான்.

தீட்சதர் அவைகளையுங் கொண்டு கசாத்துறை[1] என்னுந் துறையில் வந்திறங்கினர். கந்தசுவாமி விக்கிரகம் வந்திறங்கின காரணத்தால் அந்தத் துறைக்குக் காங்கேசன்துறை[2] என்று பெயராயிற்று.

## மாருதப்பிரவல்லியின் மண நிகழ்ச்சி

ஒருநாளிரவில் மாருதப்பிரவல்லி தேவாலயத் திருப்பணியைப் பற்றிய ஆலோசனையுடன் சப்பிர மஞ்சத்திற் சாய்ந்து விழிப்பா யிருக்குஞ் சமயத்திலே அர்த்தசாம வேளையில் உக்கிரசிங்க மகாராசன் பாளையங்களையும் அரணிப்பான சேனைக் காவல்களையும் கடந்து அவளிருந்த பாளையத்தினுட் புகுந்து அவளையெடுத்துத் தன் பாளையத்திற்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டான். பொழுது விடிந்தபின் மாருதப்பிரவல்லியின் தாதிமாருந் தோழிமாருங் காவற் சேனைகளும் அவளைக் காணுததினுல் மனங்கலங்கித் தேடிப்போய் உக்கிரசிங்க மகாராசன் பாளையத்தில் இருந்த செய்தி அறிந்து அவனிடத்திற் சென்று, "நாங்கள் என்ன செய்யலாம்?" என்று கேட்க, அவன், "மாருதப்பிரவல்லி என் பட்டத்துத் தேவியானுள். நீங்கள் போய் இந்தச் சுபசோபனச் செய்தியைப் பிதாமாதாவுக் கறிவியுங்கள்" என்று சொல்லி, வழிச் செலவுக்குப் பொருளுங் கொடுத்

1. புத்தர்கள் 'காயா' வுக்கு யாத்திரைபோக மரக் கலமேறுந் துறையானபடியால் காயாத் துறையெனப் பட்டுக் காசாத்துறை யெனத் திரிந்தது.

2. காங்கேயன் எனும் அதிபன ஒருவன் இருந்தமையால் உண்டாய பெயரென்பாருமுளர்.

தனுப்பிவிட்டான் அதன்பின் **உக்கிரசிங்க ராசன்** கதிரைமலைக்குப் போக யோசித்தபோது **மாருதப் பிரவல்லி** கந்தசுவாமி கோயிற் றிருப்பணி நிறைவேற்றி முதலாம் உற்சவச் சிறப்புக் கண்டால் அல்லாமல் அவ்விடத்தை விட்டுப் போகப் பிரியமில்லை யென்றறிஞல், அப் பிரயாணத்தை நிறுத்தித் திருப்பணியை நிறைவேற்றி, ஆனி உத்திரத்தினன்று துவசாரோகணந் தொடங்கி உற்சவத்தை நிறைவேற்றிக் கொண்டு, கதிரைமலையிற் சென்று விவாகச் சடங்கையும் நிறைவேற்றி, சகல சௌகரியங்களையும் அனுபவித்திருந்தான்.

## பெரியமனத்துளாரின் விவாகம்

தில்லையிற் பெண் எல்லை கடவாததால், **பெரிய மனத்துளார்** விவாகமில்லாதவராய் வந்திருந்தார். அவர் சாம்பசிவ ஐயரின் மகள் வாலாம்பிகை (பி-ம் வாலாம் பெண்) யை விவாகஞ் செய்து, அப் பெண்ணுக்குத் தில்லைநாயகவல்லி யென்று பெயரை மாற்றிக் கந்தசுவாமி கோவிற் றென்புறத்திலுள்ள அக்கிரகாரத்தில் வாசஞ் செய்து தன் பணிவிடையை நிறைவேற்றி வந்தார். பிராமணக் குடும்பங்கள் இரண்டும் ஒரு குடும்பமாகி இரு திறத்துக் கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைத் தலைவரானுர்.

இது நிற்க, கதிரைமலையிலிருந்த உக்கிரசிங்க **ராசன்** சிலகாலத்தின் பின் செங்கடக நகரியை[1]

---

1. சிங்கைநகர் என்னும் பெயரை மயில்வாகனப் புலவரோ அவருக்குப்பின் ஏடெழுதியவர் எவரோ 'செங்கடகநகர்' என்று மாற்றிவிட்டனர். யா. ச. 29.

இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங் காலத்தில் மன்மதன் போன்ற ரூபமுஞ் சர்வ ராசலட்சணங்களும் உடையனுய்ச், சிங்கத்தின் வாலையொத்த வாலுடனே ஒரு குமாரனும் அவனுடனொரு பெண்ணும் பிறந்தார்கள். அவ்விருவருக்கும் நரசிங்கராச னென்றுஞ் சண்பகாவதி யென்றும் பெயரிட்டார்கள். அவர்களுக்கு விவாகம் நிறைவேற்றி நரசிங்கராசன் என்னும் பெயர் படைத்த வாலசிங்கராசனுக்கு முடிசூட்டி அரசாள வைத்து மரணமடைந்தான். வாலசிங்க மகாராசன் செயதுங்கவரராசசிங்க மென்னும் பட்டத்துடன் முடி சூட்டப்பெற்று அரசாட்சியை ஒப்புக்கொண்டான்.

## வீரராகவன்

அக்காலத்திலே சோழநாட்டிலிருந்து இரண்டு கண்ணுங் குருடனுகிய கவிவீரராகவன்[1] என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரியிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்கமகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக்கொண்டுபோய் யாழ்வாசித்துப்

---

1. யாழ்ப்பாடியின் வரலாறு சமூலமாய் நிஷேதிக்கப் படல் வேண்டும். — யா. வை. வி. பக். 19.

திரு. இராசநாயக முதலியார் அவர்கள் இவ் வரலாற்றினை முற்றுகத் தள்ளாது பிறிதொருவாற்றன் ஏற்றுக் கூறியிருக்கின்றனர். — யா ச. பக். 30. இவ்வறிஞரது கொள்கைப்படி யாழ்ப்பாடி (பெயர் தெரியவில்லை) பெற்ற ஊர் கரையூரும் பாசையூரும் — Ibid. கலிங்கவரசர் 10–11-ம் நூற்றுண்டில் சிங்கை நகரிலிருந்து அரசாண்டிருப்பதால் ......யாழ்ப்பாணன் அரசாண்டான் என்பதும், பாண்டி மழவன் சோழவரச குமாரனைக் கொணர்ந்தானென்பதும் புனைந்துரை. — யா. ச. பக். 37.

பாடினன். அரசன் அதைக்கேட்டு மகா சந்தோஷமாய் அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந் நாட்டைக் கொடுத்தான்.

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணன் இதற்கு **யாழ்ப்பாணம்**[1] என்று பெயரிட்டு, இவ்விடத்தில் வந்திருந்து, வடதிசையிற் சில தமிழ்க் குடிகளை அழைப்பித்துக் குடியேற்றி இவ்விடமிருந்த சிங்களவர்களையும் அவர்களையும் ஆண்டு, முதிர்வயதுள்ளவனாய் இருந்து இறந்துபோனன். அக்காலத்திலே சிங்களவரும் பிறரும் இந்நாட்டை அரசாளக் கருதித் தமிழ்க் குடிகளை யொடுக்கியதால் தமிழ்க்குடிகள் மீண்டும் தங்கள் நாட்டுக்குப் போய்விட்டார்கள்.

---

1. இதுவே முதலியார் இராசநாயகம் அவர்களது மதமுமாம் — யா ச. பக். 30, 253 - 254. சிங்களர் நல்லூருக்கு வைத்த யாப்பானே, 'யாப்பாபட்டுனே' யென்னும் பெயரே பிற்காலத்தில் யாழ்ப்பாணம் என மருவியதென திரு. S. W. குமாரசுவாமியவர்களும் (இ. ஆ பக். 130), சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களும் கருதுகின்றார்கள். (யா. வை வி. பக் 18.)

யாழ்ப்பாணம் எனும் பெயர் 15-ம் நூற்றுண்டுச் சிங்கள நூலிற்றான் முதன்முதற் காணப்படும்.

14-ம் நூற்றுண்டிறுதியில் இருந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதர் "யாழ்ப்பாணயன் பட்டின மருவிய பெருமாளே" எனக் குறிப்பிட்ட இடம் யாழ்ப்பாணத்தையே குறித்ததென்றும், அதனல் யாழ்ப்பாணம் எனும் பெயர் தமிழ்ப் பெயரெனவுங் கொள்வர் ஒரு சாரார். அருணகிரிநாதர் குறித்த இடம் எருக்கத்தம்புலியூரென்பாருமுளர். எங்ஙனமாயினும் அருணகிரிநாதர் குறிப்பிட்ட தலம் ஈழநாட்டின்கண்ணதே யென்பது வலியுறின், யாழ்ப்பாணம் எனும் சொல் சிங்களப் பெயரடியாகப் பிறந்ததெனுங் கொள்கை வலியிழந்துபடும்.

## மழவன்

இந்த நிலைபரத்தில் யாழ்ப்பாணம் கொஞ்சக் காலம் தளம்பிக்கொண்டிருக்கையில், சிங்கள கலகத்துக்கு எடுபடாமல் இருந்து காலம்விட்டு வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டி மழவன் என்னும் பிரபு மதுரைக்குப் போய் அவ்விடத்திலே சோழநாட்டிலிருந்து வந்து இராச உத்தியோகத் துக்கேற்ற கல்வி கற்றுக்கொண்டிருந்த திசை யுக்கிரசோழன் மகளாகிய சிங்ககேதுவுக்கு மருமகனை சிங்கையாரியன் என்னுஞ் சூரியவமிசத்து இராசகுமாரனைக் கண்டு யாழ்ப்பாணத்தின் நிலைபரத்தை அறிவித்து இவ் யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்ய வரவேண்டுமென்று கேட்க, சிங்கையாரிய ராசன் மறுத்துப் பேசாமற் பாண்டிமழவன் கேள்விக்கு உடன்பட்டு, கல்வியறிவிலும் புத்தி விவேகத்திலும் எவர்களும் வியந்துகொள்ளத் தக்க உத்தண்ட வீரசிகாமணியாகிய புவனேகவாகு[1] என்னும் மந்திரியையும், காசிநகரத்திருந்து

---

1. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய இப் புவனேகவாகு யாழ்ப்பாண வரசனின் மந்திரியல்லவென்றும், 15–ம் நூற்றாண்டு மத்தியில் சிங்களவரசனால் அனுப்பப்பட்டு யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டு, நல்லூரை இராசதானியாக்கி அங்கே 16 வருடம் அரசாண்டிருந்த செண்பகப் பெருமாளென்றும் இராசநாயக முதலியார் கூறுவர். (யா. ச. 75 – 77).

இவ்விஷயம் பற்றி 'Hindu Organ' (1933) பத்திரிகையில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஈழகேசரியில் (25-9-38) வெளியிட்ட 'தமிழ் நூல்களில் யாழ்ப்பாணம்' எனும் கட்டுரையினையும் ஈண்டு ஒப்பிட்டாராய்ந்து உண்மை காண்க.

வந்த வேதிய குலோத்துங்கனாகிய **கெங்காதர ஐயர்** என்னுங் குருவையுங் கொண்டு, தனது பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டு, **பாண்டிராசன் வழி** விட்டனுப்பிவைக்க, யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி நல்லூர்ப் பகுதியிலே யரசிருக்கையை ஸ்தாபிக்கக் கருதி, சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன் முகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டு, நாலுமதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுவித்து மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பூங்காவையும், பூங்காவன நடுவிலே ஸ்நான மண்டபமும் முப்புடைக் கூபமும் உண்டாக்கி அக் கூபத்தில் யமுனாநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு, நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனாவீரரிருப்பிடம் முதலிய வனைத்தும் கட்டுவித்து, தன்னுடன் வந்த காசியிற் பிரமகுலதிலகனான **கெங்காதர ஐயரும் அன்னபூரணி அம்மாள்** என்னும் பத்தினியும் வாசஞ்செய்வதற்கு அக்கிரகாரமும் உண்டாக்கிக் கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும்[2] வடதிசைக்குச் சட்டநாதேசுவரர் கோவில், தையல்நாயகியம்மன் கோவில், சாலை விநாயகர்

1. "தென்றிசைக்குக் கைலைவிநாயகர் கோவிலையும்"—உ. தா. பிரதி.

குடியேற்றம்: யாழ்ப்பாணத்திலிருந்து போன பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமழவன் கொண்டுவந்த வேளாண் குடிகளுள் பின்னுமொரு பொன்பற்றியூர் வேளாளன் பாண்டி மழவன் இருப்பதைக் கவனித்த முதலியார் இராசநாயகம் அவர்கள், "பாண்டி மழவன் சென்று குடிகளைக் கொண்டுவந்தான் எனக் கூறுங் கூற்று ஆகாய

கோவிலையுங் கட்டுவித்துத் திலகவதியா ரென்னும் பத்தினியுடனே கிரகப் பிரவேசஞ் செய்து வாழ்ந்திருந்தான்.

## குடியேற்றம்

இங்ஙனமிருக்கையில், ஒருநாள் புவனேகவாகுவுடன் ஆலோசித்து, சிங்கையாரிய மகாராசன் தமிழ்க் குடிகளை அவ்விடம் அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழ் நாட்டரசர்களுக்குத் திருமுகங்கள் எழுதியனுப்பினுன். அவ்வரசர்கள் சில குடிகளை யனுப்பிவைக்க, அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குள் ஐந்து குடிமைகளுடனேயும் வந்த் பொன்பற்றியூர் வேளாளன்

---

கங்கையில் மலர்ந்த தாமரையோ டொக்குமென" (யா. ச. பக். 239) க் குறிப்பிடுகின்ருர்கள்.

சரித்திரவாராய்ச்சி அறிஞர் திரு. வ. குமாரசுவாமி அவர்களும் யாழ்ப்பாணக் குடியேற்றத்தை ஆராய்ந்திருக்கின்ருர்கள்.

"இருபாலை மண்ணுடுகொண்ட முதலி முடிசூட்டும் உரிமை உடையவருள் முதல்வராகவும், தெல்லிப்பழை கனகராயன் செட்டி துலாபாரதானக் கிரியைக்கு அதிபராகவும், மயிலிட்டி நரசிங்கதேவன் அரசிறை வருமானங்களைப் பொக்கிஷத்திற் சேர்க்கும் வரிநிலைக் கள அதிபராகவும் விசேஷ அழைப்புப் பெற்று, கி. பி. 13-ம் நூற்ருண்டு மத்தியில் யாழ்ப்பாண ஆரிய மன்னர் அரசியலாரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேறியவர்களே என்பதும், ஏனைய பிரபுக்களும் கைலாய வைபவ மாலைகளிற் சொல்லியபடி தொண்டை மண்டலப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்களென்பதும் இராசநாயக முதலியார் சொல்லுகிறபடி மாலிக்கபூரின் படையெழுச்சியால் அல்லோல கல்லோலப்பட்டு 14-ம் நூற்ருண்டில் பல மண்டலங்களிலிருந்து வந்தவர்களல்ல என்பதும் மேலே நிகழ்த்திய ஆராய்ச்சியாற் பெறப்பட்ட முடிபுகளாம்" எனத்

பாண்டிமழவனையும் தம்பியையும் மைத்துனனாகிய சண்பக மழவனையும் அவன் தம்பியையும் சிங்கை யாரிய மகாராசன் திருநெல்வேலியிலே குடியிருத்தினான். காவிரியூர்ப் புரவலாதிதேவனின் மூத்த குமாரனாகிய நரசிங்கதேவனை மயிலிட்டியிலிருத்தினான். வாவிநகர் வேளாளன் செண்பகமாப்பாணனையும் அவன் ஞாதியாகிய சந்திரசேகர மாப்பாணனையும் கனகராயரென்னுஞ் செட்டியையும் தெல்லிப்பழையில் இருத்தினான். கோவலூரிலிருந்து வந்த பேராயிரமுடையானென்னும் வேளாளனை இணுவிலில் இருத்தினான். அவ்வூர் திருப்திப்படாததினால் அவன் அவ்விடத்தைவிட்டு மேலைக் கிராமத்திற் போயிருந்தான். இராசமுத்திரையும்

---

தண்டிகைக் கனகராயன் பள்ளு எனும் நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்ட பாகத்தில் திரு. குமாரசுவாமியவர்கள் ஆராய்ந்து முடிபுகட்டியிருக்கின்றார்கள்.

பிள்ளையவர்களுடைய கொள்கைகளை மறுத்து முதலியார் இராசநாயகம் அவர்கள் தங் கொள்கையை நிறுவியிருக்கின்றார்கள். (யா. ச. பக். 239—246.)

பிள்ளையவர்களுடைய முடிபுகள் சில வலிந்து கோடல் போற் காணப்படுகின்றன. இவ் வறிஞர் கூறுவது:–

"தெல்லிப்பழை, மயிலிட்டி, இருபாலை ஆகிய மூன்று இடங்களிலுங் குடியேறியவர்கள் தொண்டைநாட்டிலிருந்து வந்தவர்கள் எனவும், கனகராயன் செட்டி, எயிற்கோட்டத்து எயில்நாட்டுச் சிறுகச்சிப்பேட்டையைச் சேர்ந்த காரைக்காட்டினர் எனவும், நரசிங்கதேவன் புலியூர்க் கோட்டத்துப் புலியூர்நாட்டு மயிலை அல்லது மயிலாப்பூரினர் எனவும் மண்ணுடுகொண்ட முதலி ஊற்றுக் கோட்டத்துப் பாலநாட்டுப் பாலியூரினர் எனவும் முடிபு கண்டாம்."

"மதுரைக்குப் பாண்டிமழவன் பரிந்து சென்றமையும், அங்கிருந்து செல்வமதுரைச் செழியசேகரன் புதல்வனை

பலவரிசைகளும் பெற்ற கச்சூர் வேளாளன் நீலகண்டனையும் அவன் தம்பிமார் நாலுபேரையும் பச்சிலைப்பள்ளியிலிருத்தினான் சிகரமாநகர வேளாளன் கனகமழவனையும் அவன் தம்பிமார் நால்வரையும் புலோலியில் இருத்தினான். கூபக நாட்டு வேளாளன் கூபகார்யேந்திரனையும் புண்ணிய பூபாலனையும் தொல்புரத்தில் இருத்தினான். புல்லூர் வேளாளன் தேவராயேந்திரனைக் கோயிலாக் கண்டியில் இருத்தினான். ஏரெழுப தென்னும் பிரபந்தம் பாடப்பெற்ற உயர்குல வேளாள மரபினனான தொண்டை மண்டலத்து மண்ணாடு கொண்ட முதலி யென்பவனை இருபாலை யென்னு மூரில் இருத்தினான். செய்யூர் இருமரபுந் துய்ய தனிநாயகன் என்னும் வேளாளனை நெடுந்தீவில் இருத்தினான். காஞ்சிபுரத்தால் வந்த பல்லவனென்னும் பிரபுவையும் இரண்டு துணைப் பிரபுக்களையும் வெளிநாடென்னும் பல்லவராய கட்டியிலிருத்தினான்.

இப்படியே அந்தந்தப் பிரபுக்களை அவரவர் அடிமைக்குடிகளுடனே யவ்வவ்விடங்களில்

---

சிங்கையாரியன் பெருகுபுகழ் யாழ்ப்பாணம் பேரரசு செய்ய வந்தமையும் மனோராச்சியத்தின் பாற படுகின்றன" என்பர் சுவாமி ஞானப்பிரகாசர். —(யா. வை வி பக். 63)

கயிலாய மாலையிற் குறிக்கப்பட்ட குடிகளை மயில்வாகனப் புலவர் தக்க ஆதாரமின்றித் திரித்துக் கூறிவிட்டனர் என்பது முதலியார் அவர்கள் கொள்கை.

இவ்வாராய்ச்சியாற் பெறும் பயன் சிறிதாதலின் இத்துறையில் மீட்டும் ஆராயப்புகுதல் வீண் காலப் போக்காகும் என விடுக்க.

இருத்தியபின், வல்லியமாதாக்கன் என்னும் பராக்கிரம சூரனை மேற்பற்றுக்கும் செண்பகமாதாக்கனென்னும் சூரிய வீரனைக் கீழ்ப்பற்றுக்கும், இமையானமாதாக்கன் என்னும் உத்தண்ட வீரனை வடபற்றுக்கும், வெற்றிமாதாக்கன் என்னும் விசய பராக்கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக நிறுத்தி, உத்தண்ட வீரசிகாமணியாகிய வீரசிங்கனென்பவனைச் சேனுபதியாக்கி ஓர் சுபதினத்திலே நல்ல முகூர்த்தமிட்டு மகுடாபிஷேகம் பெற்று நகரிவலம் வந்து சிங்காசனம் ஏறிப் பூலோக தெய்வேந்திரனுய் அரசாண்டான். இவ்வரசனுக்கு ஓர் கை கூழங்கையாயிருந்ததினுல் இவனைக் கூழங்கையாரியன்[1] என்றும் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி யென்றுஞ் சொல்வார்கள்.

---

1. ஜெயதுங்கனுக்குப் பின் ஆண்டவன் கூழங்கையனல்லன். அவனுக்கு மூன்று நூற்றுண்டுகளுக்குப் பின் பிரபலமடைந்த விஜயகாலிங்கச் சக்கரவர்த்தியாகிய கலிங்க மாகனையே ஏட்டெழுத்தில் கா—வைக் கூ—வெனவும், லி—யை, ள—வெனவும், எழுத்துருவில் மாறுபடக் கண்டு விஜய கூளங்கைச் சக்கரவர்த்தியென, வைபவமாலையார் நம்பி ளகரத்தைச் சிறப்பெழுத்தாக்கி முடித்துவிட்டார்.—யா. ச. பக். 247.

இம்மதம் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுக்கும் சம்மதம் முதலியார் அவர்களது முடிபு மிகப் பொருத்தமானதே. இத்தகைய ஆராய்ச்சியினை நோக்குந்தோறும் முதலியார் அவர்களது சரித்திரவாராய்ச்சித் திறமையினைக் கண்டு இறும்பூதெய்தாதிருக்க முடியாது.

கி. பி. 1215-ல் கலிங்க விஜயவாகு அல்லது கலிங்க மாகன் என்னும் அரசன் இலங்கைமேற் படையெடுத்து பொலன்னறுவையைப் பாழாக்கி, அங்கிருந்தரசாண்ட பாண்டியகுலத்தரசனைக் கொன்று.........கி. பி 1236 வரையும் பொலன்னறுவையில் அரசாண்டிருந்தான் என்று

## நல்லூர்க் கோயில்

சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கையேற்று நடத்தி வருகையிற் புறமதில் வேலையையுங் கந்தசுவாமி கோவிற் றிருப்பணி

---

மகாவம்சம் கூறும். இவனே சிங்கைநகர் ஆரிய அரசர்களுக்குள் முதலாவதாகச் சக்கரவர்த்திப்பட்டமும் கீர்த்திப் பிரதாபமும் பெற்றவனுனபடியால், விஜயகாலிங்கச் சக்கரவர்த்தி எனவும், பாண்டிமழவனுல் மதுரையிலிருந்து கொண்டுவரப்பட்ட சோழவரச குமாரனெனவும், அவனுல் நல்லூரிலே முடிசூட்டப் பெற்றவன் எனவும் வைபவமாலை கூறும்.—யா. ச. பக். 49.

மாகன் வேறு ஜயவாகு வேறு என்பது சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களது கொள்கையாகும். காலிங்கமாகன் விஜயவாகு எனும் இருவர் தமிழரசர் கலிங்க தேசத்தினின்றும் பெரும் படையோடு வந்தவர்கள் ஒருங்கு வட இலங்கையை ஆள்வோராய்க் காணப்பட்டார். ஜயவாகு யாழ்ப்பாண நாட்டை அரசாள, மாகன் 1215-ம் ஆண்டு தொடக்கம் புலத்திநகரில் வீற்றிருந்து தென் இலங்கை முழுதையும் தனிக்குடைக்கீழ் அடக்கிச் செங்கோலோச்சினுன்—யா. வை. வி. பக் 64.

1242 வரையில் காலிங்க மாகன் வடதிசையைநோக்கிச் செல்ல நேரிட்டது. காலிங்க மாகனுக்கு செயசிங்கவாரியன் என்னும் பெயரிருந்ததுபோலும். இதனையே வைபவமாலையாளர் விசய கூளங்கைச் சக்கரவர்த்தி என்ருர் என்க. காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி புலத்திநகரை ஒருவி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலையில், முன் அவ் யாழ்ப்பாண இராச்சியத்தை மகாமன்னனேடு ஒத்து அரசாண்டிருந்த ஜயவாகு இறந்திட்டான்போலும். ஜயவாகு மாண்டபின் யாழ்ப்பாண அரசிருக்கையை இனிதாய் (மாகன்) நாட்டினுன் என்பதுதான் உண்மை. யா.வை. வி. பக். 65.

வைபவமாலையிற் கூறிய உக்கிரசிங்கனே இச் ஜயவாகுவாயின், முதற்கால் சிங்கைநகரை இராசதானியாக்கினுனெனவும், மாகனெனும், காலிங்கச் சக்கரவர்த்தி அதனை கி. பி. 1246-ம் ஆண்டளவில் அரண்செயது திருத்தினுனெனவுங் கொள்க.—யா. வை. வி. பக். 69.

யையுஞ் சாலிவாகன சகாப்தம் எண்ணூற்றெழு பதாம்[1] வருஷத்திலே புவனேகவாகு வென்னும் மந்திரி நிறைவேற்றி முடித்தான்.

## விருந்து

சிங்கையாரிய மகாராசனும் புவனேகவாகு[2] மந்திரியும் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனமுஞ் செய்துகொண்டு அவ்வாலய விசாரணையை அரசாட்சி விசாரணைக்குள்ளாக்கிக்கொண்டு கந்தசுவாமி கோவிலில் வந்து பெரியமனத்துளாரின் குமாரர் சிதம்பர தீட்சதரின் மகன் சின்னமனத்துளார் விருந்திட உண்டு இளைப்பாறினார்கள். அவ்விருந்து மகாவுசிதமாயிருந்ததினால் புவனேகவாகு அவ்விருந்திற் பரிமாறிய ஒவ்

---

1. கி. பி. 1248–உக்குச் சரியாகும். இது காலிங்கச் சக்கரவர்த்தி சிங்கை நகரைக் கட்டிய ஆண்டாகலாம்.— யா. வை. வி. பக். 66.

இவ்விபரத்தைப் பின்பற்றியே:

"இலகிய சகாப்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை
யலர்பொலி மாலை மார்ப னும்புவ னேக வாகு
நலமிகுந் திடுயாழ்ப் பாண நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே"

என்னுஞ் செய்யுள் எழுந்ததுபோலும்.

2. புவனேகவாகு மந்திரியென்றமை சரித்திர மயக்கம். செண்பகப்பெருமாள் (சப்புமல்குமாரய) நல்லூரிலே கி. பி. 1450–ல், ஒரு புது நகரெடுப்பித்துச் சிறீசங்கபோதி புவனேக வாகு என்னும் சிங்கள நாமத்தோடு 17 வருடங்களாக அரசு செய்து வந்தவன்; இவ்வரசனே நல்லூர்க் கந்தசுவாமிகோயிலைக் கட்டுவித்தவன். அக்கோயிற் கட்டியத்தில் இன்றும் இவன் 'சிறீசங்கபோதி புவனேகவாகு' வெனப் புகழப்படுகிறான்.—யா. ச. பக். 75.

வொரு பதார்த்தத்திற்கும் ஒவ்வொரு பாட்டுச் சொன்னான். அவற்றுட் சில வருமாறு:

## வெண்பா

க. இன்னமுத விண்டுவி(ண்)ணோர்க்
 கீந்தசெய லன்னதுவாம்
மன்னவனுந் தொக்க வருதினியு(ம்)
 —நன்னரு(ண்)ண
அன்னமளித் திங்நாளி
 லாதரவு தந்துநின்று
சின்ன மனத்தான் செயல்.

உ. சின்ன மனத்தான்
 செயும்விருந்திற் சாற்றுருசி
அன்னதனை விண்ணோ ரறிந்திருந்தால்
 — முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்து
 வேலைகடைந் தேயுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்.

இப்படியே பாட்டுக்களுஞ் சொல்லிக் கொண்டு தேவாலயத்தைப் பற்றிய ஒழுங்குகளும் பண்ணிக்கொண்டு திரும்பினான்.

---

க. பி-ம் விண்டு விண்ணோர்க்கீந்த செயலிதுவாம்.
 வருதினியும்; திங்நாளிவ் வாதரவு
 (வருதினி—படை)

உ. அலை—கடல்; உலைதல்—தளர்தல்.

## நல்லூரில் புதுக்கோயில் அமைத்தல்

காரியங்கள் இப்படி நடந்தேறி வருகையில் ஒருநாளிரவிற் சப்பிர மஞ்சத்திலே அரசன் சாய்ந்து நித்திரை செய்திருக்கையில் பரமேசுர மூர்த்தி பாருவதி தேவியுடன் கனவிலே தரிசனையாகி யுத்தரவு கொடுத்த பிரகாரமாகவே மகா சந்தோஷத்துடனே கைலை விநாயகர் கோவிலயலிலே கயிலாத நாதர் கோவிலையுங் கைலைநாயகியம்மன் கோவிலையும் எவற்றினும் விசேஷித்தவைகளாகக் கட்டுவித்து[1] மூன்று சபைகள், பரிவார தேவர்கள் இருப்பிடம், உக்கிராணசாலை, யாகசாலை, அக்கிரகாரம், தேரோடும் வீதி, மடம், அன்னசத்திரம் இவைகளையெல்லாம் இயற்றுவித்து, பிரமாணத்துக் கிணங்கச் சுற்றுமதிலும் கோபுரமுமெழுப்பிக் கேதாரத்திலே மன்மதன் பூசித்து வந்த ஆதாரலிங்கத்தையும் அழைப்பித்து பிரதிஷ்டை செய்வித்துப் பாண்டியராசன் கீழ் முதற் பாளையத் தலைவனாயிருந்து இராமநாதபுரத்தை யாண்ட சேதுபதிக்குப் பாசுரமனுப்பி யழைப்பித்து கெங்காதரய்யர் என்னுங் காசியிற் பிராமணனையே பூசனை நடத்தும்படி வைத்து அல்லும் பகலுங் கைலாய நாதர் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு நல்லூர்க்கயிலையில் நெடுங்காலமிருந்து அரசாண்ட

---

1. இவ் விபரம் கைலாயமாலையிலிருந் தெடுக்கப்பட்டது. அதிற் சொல்லியபடியே முதலரசன்மேலேற்றிக் கூறப்பட்டிருக்கிறது. நல்லூர் இராசதானியானபின் கட்டப்பட்ட கோயிலானபடியால் சிங்கைப் பரராஜசேகரன் (கி. பி. 1478 அளவில்) காலத்தில் கட்டப்பட்டதென இராசநாயக முதலியார் கூறுவர். (யா. ச. பக். 77.)

பின் தன் குமாரனாகிய குலசேகரசிங்கையாரியனுக்கு முடிசூட்டி வைத்துச் சிவபதஞ் சார்ந்தான்.

## குலசேகர சிங்கையாரியன்

குலசேகர சிங்கையாரியன்[1] அரசாட்சி முறைகளைத் திருத்திக் குடிகள் பிரியப்படத்தக்கதாகச் சமாதான அரசாட்சி செய்து தன் மகன் குலோத்துங்க சிங்கையாரியனுக்குச் சிங்காசனத்தை ஒப்புவித்துச் சிவலோகஞ் சேர்ந்தான்.

## குலோத்துங்க சிங்கையாரியன்

குலோத்துங்க சிங்கையாரியன்[2] வயல் நிலங்களைத் திருத்துவித்து வருமானங்களை[3] அதிகப்

---

1. கி. பி. 1240-ம் ஆண்டளவில் அரசனானான்.

2. இவ்வரசன் கி. பி. 1256-ம் ஆண்டளவில் அரசனானான்.

3. மன்னார்க் கடலில் முத்துக் குளிக்கும் உரிமை சிங்கைநகர் அரசருக்கே உரியதாயிருந்தது. இவ்வரசனுக்கும் யாப்பாகுவில் இராசதானி அமைப்பித்து ஆண்ட முதலாம் புவனேகவாகுவுக்கும் அவ்வுரிமையைப்பற்றி விவாதம் உண்டாகிப் போர் மூண்டது. குலோத்துங்கன் பெருங் கடற்படையுடன் வந்து புவனேகவாகுவை வென்று யாப்பாகுவை அழித்துப் புத்தசமயிகளாற் போற்றப்பட்டு வந்த புத்த தந்தத்தைக் கவர்ந்து சென்றான். புவனேகவாகு சிங்கைநகர் அரசனுக்குக் கீழ் ஒரு சிற்றரசனாய்த் திறையீந்து அரசாண்டான்.—யா. ச. பக். 55.

கி. பி. 1296-ல் யாப்பாகுவில் போர் வலியிழந்த புவனேகவாகுவின் குமாரன் குலசேகரபாண்டியனை யடைந்து தென்னிலங்கைச் சிற்றரசையும் புத்த தந்தத்தையும் தனக்குக் கொடுக்கும்படி சிங்கைநகர் அரசனாகிய விக்கிரமனுக்கு இயம்புமாறு இரந்தான். அவ்வண்ணமவனும் இயம்பவே, அதற்கிசைந்து விக்கிரமனாற் கொடுக்கப்பட்ட சிற்றரசையும் தந்த தாதுவையும் பெற்றுக்கொண்டு, திறையிறுக்க வுடன்பட்டு மூன்றாம் பராக்கிரமவாகுவாக யாப்

படுத்திக் குடிகளையுஞ் சந்தோஷப்படுத்திச் சமாதான அரசாட்சி செலுத்தித் தன் குமாரனாகிய விக்கிரமசிங்கையாரியனுக்கு அரசாட்சியை வைத்துப் பரபதஞ் சேர்ந்தான்.

## விக்கிரம சிங்கையாரியன் : சமயக்கலகம்

இவன்[1] காலத்திலே இங்குள்ள புத்த சமயிகளான சிங்களவருக்கும், தமிழருக்கும் சமய காரியங்களையிட்டுப் பெருங் கலக முண்டுபட்டபொழுது சிங்களர் சில தமிழரைக் காயப்படுத்தி இருவரைக் கொலைசெய்து இப்படியே முரட்டுத்தனங்காட்டி நின்றார்கள். அதையறிந்து விக்கிரமசிங்கையாரியன் அவர்களைப் பிடித்து விசாரணை செய்து அக் கலகத்துக்குத் தலைவராய் நின்ற புஞ்சிவண்ட என்பவனையும் வேறு பதினேழு சிங்களவரையுங் கொலை செய்து வேறு பலரைச் சிறைச்சாலையிலுமிடுவித்தான். அதன்பின் கலகம் அமர்ந்தது. சில சிங்களக் குடிகள் ஒளித்து இந்நாட்டைவிடப் புறப்பட்டார்கள். இவ் விக்கிரமசிங்கையாரியன் தமிழர்மேல் அதிக பட்சம் வைத்து நடந்ததினால் சிங்களவர் இவன்மேற் பற்றுள்ளவர்களாயிருந்ததில்லை.

---

பாகுவில் அரசனானான். பின்பு இத்துறை யளிப்பதற்கும் யாழ்ப்பாணவரசன் தாக்கிற்கும் பயந்து, சிங்கள அரசர் தங்கள் இராசதானியைக் குருநாக்கலுக்கும், தம்பதெனியாவுக்கும், மலையரணுடையதும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிக தூரமுள்ளதுமான கம்பளைக்கும் மாற்றி மாற்றி வந்தார்கள். எங்குச் சென்றாலும் சிங்கைநகர் அரசர்களுக் கடங்கியே யிருந்தார்கள் என்பதற் கையமில்லை.

1. இவ்வரசன் கி. பி. 1279-ம் ஆண்டளவில் அரசனானான்.

## வரோதைய சிங்கையாரியன்

இவனுக்குப்பின் இவன் மகன் வரோதைய சிங்கையாரியன்[1] அரசாட்சியை ஒப்புக்கொண்டு மார்க்க வழிபாடுகளைக் குறித்த சில கட்டளைகளை ஏற்படுத்தி இருதிறக் குடிகளையுஞ் சமாதானப் படுத்தி முறைமையான அரசாட்சி செய்து தன் குமாரன் மார்த்தாண்ட சிங்கையாரியனுக்கு அரசிருக் கையைக் கொடுத்துப் பரகதி யடைந்தான்.

## மார்த்தாண்ட சிங்கையாரியன்

மார்த்தாண்ட சிங்கையாரியன்[2] கல்வியும் வேளாண்மையும் விருத்தியாகத்தக்க முயற்சி களைச் செலுத்தி வன்னியர்களால்[3] வந்த கலகங்

---

1. இவ்வரசன் கி. பி. 1302-ம் ஆண்டளவில் அரச ஞானன்.

2. இவ்வரசன் கி. பி. 1325-ம் ஆண்டளவில் அரச ஞானன்.

இவன் காலத்தில் முகம்மதிய பிரயாணியாகிய இபின் பட்டூட்டா (Ibn Batuta) வந்திறங்கி அக்கால அரசியற் செழிப்பைப் புகழ்ந்திருக்கின்ருன்.

3. வன்னியர்கள்—யா. ச. பக். 58

சோழ பாண்டிய சேனைகளுடன் வந்த வன்னியப் பிர தானிகள் பலர் பனங்காமம், குமாரபுரம், ஓமந்தை, தம் பலகாமம் முதலா மிடங்களில் நிலையிட்டனர். யாழ்ப்பாண - சிங்கள அரசரின் வலிகுன்றிய காலங்களில், தாம் தாம் குடியிருந்த இடங்களைத் தாம் தாம் ஆள வேண்டுமென நோக்கங்கொண்டிருந்தார்கள். இவர்கள் தாமிருந்த இடங் களில் சைவ ஆலயங்களைக் கட்டிச் சைவ சமயத்தைப் பரி பாலித்து வந்தார்கள். இவர்கள் வீரம் செறிந்த மக்க ளாதலின் மிகவும் பிற்காலத்திலும் தங்கள் வலிமையை அடிக்கடி காட்டி வேற்றரசர்கட்கு அடங்காமலும் வாழ்ந் தவர்கள்.

களையும் அமர்த்திக் குடிகளைத் தாய்போலக் காப்பாற்றித் தயாளகுணமுள்ளவனு யரசாண்டதினுல் அவன் மரணித்தபோது இருதிறத்துக் குடிகளுள்ளும் அவனுக்காகப் பிரலாபியாதவர்களில்லை. அவன் மரித்தபின் அவன் மகன் குணபூஷண சிங்கையாரியன் முடிகட்டி யரசாண்டான்.

## குணபூஷண சிங்கையாரியன்

இவன்[1] தன் பிதாவிலும் அதிக தயாளகுணமுள்ளவனுய்க் குடிகளைப் பாரபட்சமில்லாமல் நடத்தி அரசாட்சியைத் திறப்படுத்திக் கல்வியும் செல்வமும் வர்த்திக்க முயற்சிசெலுத்திப் பூரணவாயுளுடையனுய்த் தன் குமாரன் **வீரோதைய சிங்கையாரியனுக்கு** இராச்சியப் பொறுப்பை ஒப்புவித்து ஆறியிருந்து சிலகாலத்தின்பின் தேகவியோகமானுன்.

## வீரோதையசிங்கையாரியன்: வன்னியுட்புகல்

**வீரோதயை சிங்கையாரியன்**[2] காலத்தில் **சிங்கள வராற்** சில கலகங்க ளுண்டுபட அவன் கலகங்களைத் தன் வீரத்தினு லடக்கி, அக் கலகங்களை **வன்னியர்கள்** தூண்டிவிட்ட செய்தியறிந்து, **வன்னியர்கள்** மேற் படையெடுத்து ஏழு வன்னி

1. இவ்வரசன் கி. பி. 1347-ம் ஆண்டளவில் அரசனுனன்.

2. இவ்வரசன் கி. பி. 1371-ம் ஆண்டளவில் அரசனுனன் என்பர் முதலியார் இராசநாயகம்.

இவ்வரசன் கி. பி. 1344-ம் ஆண்டளவில் அரசனுனன் என்பர் சுவாமி ஞானப்பிரகாசர்.

யையுங் கொள்ளையாடி அவ் வன்னியர்கள் ஒரு போதும் அவ்வித எண்ணங் கொள்ளாதபடி செய்து திரும்பினான்.[1] அவன் மீண்டு வந்தவுடன் சிங்கள கலகக்காரர் அவன் காலடியில் விழுந்து தங்கள் குற்றங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டிக் கொண்டதினால் அவர்களுக்குப் பொறுதி கொடுத்து நன்முகங் காட்டினான்.

## மதுரைக்குச் சேறல்[2]

அக்காலத்திலே மதுரையிற் சந்திரசேகர பாண்டியனுடனே[3] சத்துருக்கள் போயெதிர்த்து யுத்தஞ் செய்து இராச்சியத்தைப் பிடித்துக்கொள்ள,

---

1. வன்னியர் செருக்கறுக்கத் துணைபுரிந்த ஓமந்தைச் சிறு பிரதானிக்குச் சிற்றரசுப் பட்டமும் வரிசைகள் பலவும் நல்கி அவனை ஏனை வன்னிய பிரதானிகளுக் கதிகாரியாம் பதவியு மீந்தான்.—யா. ச. பக். 65.

2. யாழ்ப்பாண வரசனின் உதவியுடன் சுந்தரபாண்டியன் பாண்டிய வரசைப் பெற்றது கி. பி. 1310-ல் ஆனதால் இச்செயலை வரோதைய சிங்கையாரியின் மேலேற்றிக் கூறுவர் முதலியார் இராசநாயகம் அவர்கள்—யா. ச. பக். 59—60.

3. இவன் மதுரைச் சுந்தரபாண்டியன் என்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள். "இவன் மாறவர்மன் குலசேகரனின் தர்மபத்தினி மகன். இவன் வீரபாண்டியன் வகித்த செங்கோலைப் பிடுங்கி மூன்று வருடம் வகித்தான்.... இவ்வரலாற்றிற் சொல்லப்பட்ட மூன்று வருட அரசு கைக்கொள்ளச் சுந்தரபாண்டியனுக்குப் பக்கத் துணையாய் நின்றதே வீரோதய சிங்கையாரியனின் வீரச் செயலென்ப. அங்ஙனமாயின் இவ்வாரியச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலம் 1310 முதல் 1344 ஈறாக 34 வருடங்களுக்கு மேற்படும். ஆயின் முந்திய குணபூஷண சிங்கையாரியனின் கீழ் இளவரசனாயிருந்த காலையில் அச்செய்தி நிறைவேறியதாயின் ஆட்சிக்காலம் குறைவுள்ளதாகலாம்"—யா. வை. வி. பக். 89—90.

பாண்டியன் ஒளித்து யாழ்ப்பாணத்துக்கோடிவந்து வீரோதைய சிங்கையாரியனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்போது வீரோதைய சிங்கையாரிய இராசன் பாண்டியன் கீழ் பாளையத் தலைவராயிருந்த சேதுபதி முதலான வீரர்களையுங் கூட்டித் தன் சேனைத் திரள்களையுங் கொண்டு மதுரையிற் புகுந்து போராடிச் சத்துருக்களைத் துரத்திப் பாண்டியனுக் கராசாட்சியை நிலைப்படுத்தித் திரும்பினான்.

## வன்னியர் வெறுப்பு

இவன் மறுபடியும் வன்னியர் மேற் கொள்ளையாட வர வெண்ணியிருக்கிறு னென்று ஒரு பொய்க்கதையுண்டானபோது வன்னியர்கள் பயந்து கண்டியிராசனிடம் போய்த் தங்களுக்கு உதவிசெய்ய வேண்டிநின்றார்கள். அந்தக் கண்டியிராசன் "யாழ்ப்பாணம் எங்கள் முன்னோர் பரிசாகக் கொடுத்த இராச்சியமாகவிருப்பதால் நான் அதற்கு விரோதமாகப் படையெடுத்து என் குலப் பிதாக்களின் பேருக்கு அபகீர்த்தி வருவிக்கமாட்டேன்" என்று மறுத்துச் சொன்னதினால் அவ்வேழு வன்னியர்களும் கன திரவியங்களைக் கொண்டுவந்து வீரோதைய சிங்கையாரியனைக் கண்டு நன்முகம் பெற்றுத் திருப்பிப்போய்ப் பயமற்றிருந்தார்கள். வீரோதைய சிங்கையாரியன் இளவயதிலே மரணமடைந்தான் இவன் போசனஞ் செய்து இரவில் நித்திரையாயிருக்கையில் மரணமடைந்ததினால் இவன் மரணத்தைக் குறித்துப் பலவிதமாய்ப் பேசிக்கொண்டார்கள்.

## செயவீரசிங்கையாரியன்

அவன் குமாரன் **செயவீர சிங்கையாரியன்**[1] சிறுவயதில் முடி சூட்டி அரசனாய் வந்தும் மிகு விவேகவானாய்ச் சத்துரு பயமின்றி அரசாட்சியை நடத்திக் குடிகளை இரட்சித்து வெகு கீர்த்திமானானான்.

---

1. இவன் கி. பி 1380-ல் அரசனானன் என்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள். எனவே சகாத்தம் 1380-ம் வருஷம் என்பது கி பி. 1380 எனக் கொள்ள வேண்டும்.

இவ்வரசனைப்பற்றி வைபவமாலை அதிகம் குறிக்காதிருந்தாலும் பக்க வேதுக்களால் இவனுடைய சரித்திரம் விரிவாக வெளிவந்துவிட்டது.

கம்பளையிலே மூன்றும் விக்கிரமவாகு என்னுஞ் சிங்கள அரசனுக்கு மந்திரியும் படைத்தலைவனுமாயிருந்து பின்பு பிரபு ராசாவெனும் பதவி பெற்றவனும், வஞ்சி நகரத்து மலையகுலத்தைச் சேர்ந்தவனும், சிங்கள இதிகாசங்களிலே அளகேஸ்வரன் என்றும் அளகைக்கோன் என்றுங் கூறப்படுபவனுமாகிய இவ்வரசன் ஜயவர்த்தனபுரம் என்னுமிடத்தை அரண்படுத்தி வலி மிகுந்தமையால் ஆரியச்சக்கரவர்த்தி இவனிடம் திறைவாங்கும்படி அனுப்பியஏவலாளர்களை இவன் கொன்று திறையு மிறுக்காது விட்டான். ஆரியச் சக்கரவர்த்தி இவன்மீது படையெடுத்து வென்றான். ஆனால் அளகேஸ்வரன் வென்றானெனச் சிங்கள நூல் கூறுகின்றது. கோட்டகம எனுமூரிற் கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனமொன்றில்,

"சேது
கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்"

எனும் வெண்பா பொறிக்கப்பட்டிருத்தலினுற் சிங்கைநகர் அரசனே வெற்றி பெற்றானென்பதும் இச்சிலை அவ்வெற்றியின் ஞாபகசின்னமென்பதும் முதலியார் இராசநாயகம் அவர்களது மதம்—யா. ச. பக். 68...69. இப்போரில் அள

## கண்டியரசனுடன் பொருதல்

அக்காலம் கண்டிநாட்டை யரசாண்ட புவனேக வாகு முத்துச்சலாபத்தைக் குறித்து இவனுடனே விவாதம் பண்ணி நெருங்கினதினால் இவன் அவ னுடனே நெருங்கி யுத்தஞ் செய்து வெற்றி

---

கேள்வரன் இறந்தான் எனவும் சிங்கள அரசர் திறை யீந்து வந்தார்களெனவும் முதலியார் அவர்கள் குறிப்பிட் டிருக்கின்றனர்.

செயவீரசிங்கை யாரியனுடைய வரலாற்றைச் செக ராசசேகர மாலைச் சிறப்புப்பாயிரச் செய்யுளின் உதவி கொண்டு சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் துருவித் துருவி ஆராய்ந்திருக்கின்றார்கள். இவ்வாராய்ச்சியின் பயனை யாழ்ப்பாண வைபவ விமர்சனம் எனும் நூலிற் காண்க.

தென்னிலங்கை அரசரைத் திறைகொண்டமை மேற் கூறிய சிலாசாசனத்தால் உறுதிப்படுவதை சுவாமி அவர் களும உடன்பட் டெழுதியிருக்கின்றார்கள்.

செகராசசேகரன் மாற்றாரோடு போர்த் தொழிலும் தன் இராச்சிய நற்பரிபாலனமுஞ் செய்து அரசு கட்டி லில் வீற்றிருந்தவன், "தீந்தமிழிலுந் தேர்ந்த நிபுண னாகி முத்தமிழ்தேர் செகராசசேகரமன்" "சதுர் மறை பயில்வோன்" எனவும் புகழப்படுதற்கு இலக்காயினன். (செக. மாலை. பக். 35, 36)

செகராசசேகரமாலை, செகராசசேகரம் (வைத்திய நூல்) என்னும் இரண்டோடு தக்ஷிண கைலாச புராண மும் இவன் காலத்துத் தமிழ் நூல்களாகத் தோன்று கின்றன.— யா. வை. வி. பக். 97.

சிங்கையாரிய வரசர் விடையும் பிறையும் பொறிக் கப்பட்ட நாணயங்களை இதற்கு முன்னிருந்தே வழங்கி வந்தாலும், இவ்வரசன் காலத்தில் அடிக்கப்பட்டவை அச்சு உருவத்தில் விளக்கமாகவும் அழகாகவும் இருக் கின்றன — யா. ச. பக். 70.

'சேது' எனும் மொழி பொறிக்கப்பட்ட காசு யாழ்ப் பாணத் தரசர்களுடையதா யிருக்கக்கூடும் என முதலி யார் இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டதை, தாம் பின்

கொண்டு இலங்கை முழுவதும் மிதுன யாழ்க் கொடி தூக்கிச் சாலிவாகன சகாத்தம்[1] 1380-ம் வருஷத்திலே இலங்கை முழுதும் ஒரு குடைக் கீழ் அரசாண்டான். பன்னிரண்டாம் வருஷத்திலே பராக்கிரமவாகு வென்பவன் பாண்டியராசனைப் பிணைவைத்துத் திறைதருவேனென்று செயவீர சிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தை வாங்கி அரசாண்டு இவனும் இவன் பின்வந்த அரசருந் திறையிறுத்து வந்தார்கள். இவன் நெடுங்காலம் அரசாண்டு தன் மகன் குணவீரசிங்கையாரியன் புயத்தில் இராச்சியத்தை யேற்றிப் பூலோக வாழ்வை நீங்கினன்.

## குணவீரசிங்கையாரியன்

கண்டியரசர் கொடுத்து வந்த திறையை நிறுத்தினதினால் குணவீரசிங்கையாரியன் அவர்கள் மேல் யுத்தஞ் செய்து சில பகுதிகளைப் பிடித்துத் தமிழ்க் குடிகளை யிருத்தித் தன்னரசாட்சி யாக்கினன்[2]

---

ருடர்ந்து ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டதாகச் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். (Ceylon. Antiquary. Vol. V. Pt. IV.) இவ்வாராய்ச்சியில்லாதிருப்பின் இந்தக் காசுகள் சேதுபதி வேந்தர் காசுகளுடன் சேர்ந்து யாழ்ப்பாணத் தரசர்களின் புகழை மழுங்கச் செய்து விட்டிருக்கும்.

1. இச்செயல் யாப்பாகுவிலிருந் தரசாண்ட முதலாம் புவனேகவாகு காலத்திலெனக் கொள்வர் முதலியார் இராசநாயகம். ஆகையால் கி. பி. 1279 க்குப் பின்னரசாண்ட விக்கிரமசிங்கை யாரியன் காலமாகும.

2. இவன் கி. பி. 1410 வரையில் அரசனானன்.

இவ்வரசன் அளகைக்கோனூர் அல்லது அளகேஸ்வரனோடு பொருது தோற்றோடித் தன் இராச்சியத்தினுள்

மதுரையை யரசாண்ட நாயக்கர்களுக்குஞ் சில பேருதவி செய்தான். இவன் தன் பிதாவைப் போலவே சிறந்த அரசாட்சி செய்து வயோதிகனாகித் தன்னரசாட்சியைத் தன் மகன் கனகசூரிய சிங்கையாரியனுக்குக் கொடுத்துச் சொற்கமடைந்தான்.

## ஓடிப்போதல்

கனகசூரிய சிங்கையாரியன்[1] சிங்களக்குடிகளுக்கு இளக்கங் காட்டி வந்ததினால் அவர்கள்[2] மேலாட

---

ஒடுங்கி அடங்கவேண்டியதாயிற்றென்பர் சுவாமி ஞானப்பிரகாசர் — யா. வை. வி. 99—102.

இங்ஙனம் கூறல் சிங்கள சரித்திர நூலிற் கூறப்பட்ட நிகழ்ச்சியோடு முரணுதிருத்தல் காண்க. எனினும், அளகேஸ்வரன் செயவீரசிங்கையாரியனாற் றோற்கடிக்கப் பட்டான் என்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள். இது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. இவ்வறிஞர் இவ் விஷயம்பற்றி (Ceylon Literary Register Third Series - Vol II.) எனும் சஞ்சிகையில் நீண்டதோர் ஆராய்ச்சிக் கட்டுரை யெழுதியிருக்கின்றார்கள்.

இவ்வரசனே இராமேச்சுரக் கர்ப்பக் கிரகத்தை கி. பி. 1414-ல் கட்டுவித்தவன். திருப்பணிக்கு வேண்டிய கருங்கற்களைத் திருக்கோணமலையில் வெட்டுவித்து அங் கனுப்பினான் — யா. ச. பக். 72-73.

பரராசசேகரம் எனும் வைத்திய நூல் இவன் காலத்தில் எழுதப்பட்டது.

1. இவன் கி. பி. 1440 வரையில் அரசனானான்.

2. கோட்டை அரசனாகிய ஆறும் பராக்கிரமவாகுவின் தத்த புத்திரனாகிய செண்பகப்பெருமாளைத் தனது இராச்சியத்தினின்றும் அகற்றும் நோக்கமாக வன்னியர்களையும் யாழ்ப்பாணவரசனையும் போர் செய்து வென்று வருமாறு அரசன் அனுப்பினான். செண்பகப்பெருமாள் இவ்விரு திறத்தினரையும் வென்றான். அவனை ஆரிய

டங்கொண்டு வன்னியமார்களின் உதவி பெற்றுக் கலகஞ் செய்தபோது, **கனகசூரிய சிங்கையாரியன்** இரவிலே தன் மனைவி மக்களையும் கொண்டு வட தேசத்துக்கு ஓடிப்போய்விட[1],

## விசயவாகு

**விசயவாகு**[2] வென்னுஞ் சிங்களவன் தானே யரசனெனத் தலைப்பட்டுத் தமிழ்க்குடிகளை யொடுக்கித் தமிழுரை யுடைநடை பாவனைகளி லெல்லாந் தங்களைப் போலாக வேண்டுமென்று பலவந்தம் பண்ணி மாறுதல் பண்ணுவித்து அதற்

---

வேட்டையாடும் பெருமாள் என அரசன் புகழ்ந்து யாழ்ப் பாணத்தையே அரசுபுரியுமாறு அனுப்பினான், இவன் நல்லூரிலே கி. பி. 1450இல் ஒரு புது நகரெடுப்பித்துச் சிறிசங்கபோதி புவனேகவாகு எனும் சிங்கள நாமத்துடன் அரசாண்டான். இவ்வரசனே நல்லூர்க் கந்தசாமி கோயிலைக் கட்டுவித்தவன்.

இவனையே சிங்கையாரிய மகாராசனின் மந்திரியென மயங்கிக் கூறினர் வைபவமாலையுடையார். இவனைப்பற்றி 25-ம் பக்கத்தில் எழுதிய குறிப்புகளையும் நோக்குக. மந்திரியாகிய புவனேகவாகு வேறு; சிறிசங்கபோதி புவனேகவாகு வேறு; பெயரளவில் மட்டுமே ஒற்றுமையுண் டென்பர், திரு. ஆர். சி. பிறக்ரர் அவர்கள்.

1. ஆரியச் சக்கரவர்த்தி இவ்வமரிற் கொல்லப்பட்டா னென இராசாவளி கூறுதல் சிறிதும் பொருந்தாது. இந் நூல் மிகவும் பிற்காலத்தது. ஆயின் சுட்டிய நிகழ்ச்சிகள் நிறைவேறிய காலத்திலேயே எழுதுற்றதாகிய ஓர் சிங்கள நூலால் ஆரியச்சக்கரவர்த்தி ஒளித்தோடியமை நன்றாக நிச்சயிக்கப்படுகின்றது. (கோகில சந்தேசய) — யா. வை. வி. பக். 105.

2. இவன், செண்பகப்பெருமாள் கோட்டைச் செங் கோலைக் கவர்ந்துகொள்ள விரைந்து செல்லுகையில் தன திடமாய் விட்டுப்போன ஓர் சேனைத் தலைவனாகலாம் — யா. வை. வி. பக். 107.

கமையாதவர்களைத் தண்டித்துப் பதினேழு வருஷம் அரசாண்டான்.

கனகசூரிய சிங்கையாரியன் தன் பிள்ளைகளாகிய பரராசசேகரனையும் செகராசசேகரனையுந்[1] திருக்கோவலூரில் இராச குடும்பத்தவர்பாலிற் கல்வி கற்க வைத்து யாத்திரை பண்ணும்படி தன் மனைவியுடனே காசி பரியந்தம திருத்தலங்கள் தோறும் சுற்றித்திரிந்து திரும்பிக் கோகர்ணச் சிவாலயத்தில் வந்திறங்கி அவ்விடத்திலிருந்து சில வருடகாலம் சிவராத்திரி விரதம் அனுட்டித்தான். அப்படி யனுட்டித்து வருங்காலத்தில் ஒரு நாள் கனவிலே, "நீ மதுரைக்குப்போ, அங்கே உனக்குச் சகாயங் கிடைக்கும்" என உத்தரவு கிடைத்ததினால், விரத உத்தியாபனமும் செய்து திருக்கோவலூருக்குப் போய் அங்கே தன் பிள்ளைகள் வளர்ந்தவர்களாய்ப் போர்ச் சாமார்த்தியத்திலும் கல்விப் பயிற்சியிலுஞ் சரீரவழகிலும் அதிகப்பட்டவர்களாயிருக்கக்கண்டு அளவில்லாத சந்தோஷவானானான். பிதாவைக கண்டபோதே பிள்ளைகளின் முகம் சூரியனைக்கண்ட செந்தாமரைப் புட்பங்கள் போலாயின. பிள்ளைகள் இருவரும் சத்துருவைச்

---

1. பரராசசேகரன், செகராசசேகரன் என்பன யாழ்ப்பாணத்தரசர் ஒருவர் பின் ஒருவராய் இட்டுக் கொண்ட சிங்காசனப் பெயர்களாகும். அவ்விதமே பாண்டியவரசர் ஜடாவர்மன், மாறவர்மன் எனவும் சோழவரசர் பரகேசரி வர்மன், இராஜகேசரி வர்மன் எனவும் சிங்காசனப் பெயர் வகித்தார்கள். இதை யறியாத மயில்வாகனப்புலவர் இவ்விரு பெயர்களும் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த இவ்விரு சகோதரரின் பெயர்களென மயங்கி எழுதிச் சென்றார் போலும்.

செயிக்கவும் இராச்சியத்தை மீட்டுக்கொள்ளவும் பண்ணியிருந்த பிரயத்தனங்களைக் கண்டு பிதா மிகுந்த ஆச்சரியங்கொண்டு அவர்களை முத்த மிட்டு அங்குள்ள இராச குடும்பத்தாருக்குத் தான் காட்டவேண்டிய நன்றியறிதல் எல்லாங் காண்பித்து, பிள்ளைகளையுந் தேவியையுங் கூட்டிக் கொண்டு மதுரையிற் போய்ச் சேர்ந்தான். கனக சூரிய சிங்கையாரியன் மதுரையிற் சேர்ந்தபொழுது பாண்டிநாட்டைப் பகுதியாய் ஆண்ட சிற்றரசர் பலரும் சேனைகளையும் ஆயுதங்களையுங் கொடுத்து விட அவன் சகல ஆயுதங்களுடனேயும் யாழ்ப் பாணம் வந்து சேர்ந்து மேற்குவாசல் வழியாக நுழைந்தான்.

## விசயவாகுவின் மரணம்

விசயவாகு காத்திராதவேளையிற் சேனை வர்க் கத்துடன் இவன் (கனகசூரிய சிங்கையாரியன்) நுழைந்த போதினும் அவன் சடுதியிற் சேனைக ளைக் கூட்டி அஞ்சா நெஞ்சனாய் நின்று பெருஞ் சண்டை பண்ணினான். செகராசசேகரன் ஓர் அரணி மேற் சண்டை செய்து நிற்கப், பரராசசேகரன் விசயவாகுவின் துணிவையும் அவன் செய்யும் வீரத்தையுங் கண்டு வாட்படையுடனே விசயவாகு வின் போர்முனைமேற் சிங்கம் பாய்ந்தாற்போற் பாய்ந்து சேனைகளையும் விசயவாகுவையும் தன் வாளுக்கிரையாக்கினான். அதைக் கண்டு செகராச சேகரனுடன் எதிர்த்த போர்முனை முரிந்து கெட்டுச் சிதறிப் போயிற்று.

## பழைய அரசன் அரசாட்சியை மீளப்பெறல்

பரராசசேகரன் பிதாவை அரசாட்சியில் வைத்துத் தான் தேசவிசாரணை செய்ய முயன்று விசயவாகுவின் கலகத்தினுடன்பட்ட அநேக சிங்களவரைப் பிடித்துக் கொலை செய்வித்தான். அநேக சிங்களக் குடிகள் தங்கள் குடும்பங்களுடனே யாழ்ப்பாணத்தை விட்டுக் கண்டி நாட்டுப் புறங்களிலே போய்க் குடியேறினார்கள். போகாமலிருந்த குடிகள் தமிழருக்கு மிகவும் பயந்து நடந்தார்கள். அதன்பின் பரராசசேகரன் சோழராச வமிசத்தைச் சேர்ந்த இராசலெட்சுமியம்மாளென்னும் பெண்ணை விவாகம்பண்ணினான். பிதாவாகிய கனகசூரிய சிங்கையாரியன் அவனை முடிசூட்டிச் சிங்காதனத்தில் வைத்துத் தான் இளைப்பாறியிருந்து சில காலத்தின்பின் இறந்து போனான்.

### பரராசசேகரன் மனைவிமக்கள்

பரராசசேகரன்[1], பொன்பற்றியூர் வேளாளர் மரபில் முடிதொட்ட வேளாளரென்னும் பாண்டிமளவன் குலத்திற் பிறந்த அரசகேசரியின் மகள் வள்ளியம்மையை இரண்டாம் மனைவியாககினான். மணவக்குடியிலிருந்துவந்த மங்கத்தம்மாள் என்பவளை வைப்புப் பெண்ணாக்கினான். பரராசசேகரனுக்குப் பட்டத்துத் தேவியாகிய இராசலெட்சுமியம்மாள், சிங்கவாகுவென்றும் பண்டாரமென்றும் இரு குமாரரைப் பெற்றாள். இரண்டாந் தேவியாகிய வள்ளியம்மை யென்பவள் பரநிருபசிங்கம்

---

1. இவன் கி. பி. 1478-ல் அரசனானான்.

முதலிய நாலு பிள்ளைகளைப் பெற்ருள். வைப்புப் பெண்ணுகிய மங்கத்தம்மாள் சங்கிலி[1] யென்னு மொருவனைப் பெற்ருள். இப்படியே இராச குடும்பம் பெருகத் தொடங்கிற்று[2].

## சகோதரன்

பரராசசேகரன் அரசாட்சி முறையை அதிக விவேகமாக நடத்திவரச் செகராசசேகரன் கல்வி முயற்சி யுள்ளவனுய்த் தான் வடநாட்டிலும் தென்னுட்டிலுமிருந்து கொண்டு வந்த சகல சாஸ்திரங்களையும் பிரபலப்படுத்தும் பொருட்டு வித்துவான்கள் பலரைச் சேர்த்துச் சபை கூட்டிச் சில நூல்களைச் செய்வித்துத் தானும் சோதிடம் செகராசசேகரம் முதலிய சில நூல்களைச் செய்தான்[3].

## கல்வி வளர்ச்சி

பரநிருபசிங்கத்தின் மைத்துனனும் பரராச சேகரன் மருமகனுமாகிய அரசகேசரி யென்பவன்

---

1. இச் சங்கிலியின் வரலாறு மிகவும் சிக்கலாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கிலிக்கும் போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது பாலிய வரசனின் பரிபாலகனுகவிருந்த சங்கிலிக்கும் சரித்திர மலைவுண்டாக இந்நூலாசிரியர் எழுதியுள்ளார். செகராச சேகரன் எனச் சிங்காசனப் பெயர்வகித்துப் பலவருடங் களாக வரசாண்ட இச்சங்கிலி வைப்புப் பெண்ணின் மக னென்பது பொருந்தாவுரையாகும்.

2. போர்த்துக்கேயர் நூல்களைக் கொண்டு, 'வக்கிரத் துக்குறி பண்டாரம்' 'சியங்கேரி' என இரு பெயர்கள் மாத்திரம அறியக்கிடக்கின்றன.

3. செயவீர சிங்கையாரியன் காலத்தில் இயற்றப் பட்ட நூல்களென இவை முன்னரே கூறப்பட்டிருத்தல் காண்க. பி-ம்: செகராசசேகரமென்னுஞ் சோதிடமுதலிய...

இரகுவமிச[1] மென்னும் நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துப் புராண நடையாகப் பாடித் திருவாரூரிலே கொண்டுபோய் அரங்கேற்றிப் பெருங் கீர்த்தி யடைந்தான். இப்படியே யாழ்ப் பாணம் கல்வியறிவிலே தலைப்பட்டுப் பல வித்து வான்கள் அங்குமிங்கும் எழும்பினார்கள். பரராச சேகரனுஞ் செகராசசேகரனும் தங்களுக்குரிய சிங்கை யாரியப் பட்டத்தைச் சிங்கை யெனச் சுருக்கித் தங்கள் பெயர்களின் முன் நிறுத்திச் சிங்கைப்பர ராசசேகரன், சிங்கைச் செகராசசேகர னென்றாக்கினார் கள். செகராசசேகரன் சாஸ்திரங்கள் பலவற்றை யும் பாண்டி நாட்டி லிருந்தும் ஆதீனங்களிலிருந்தும் அழைப்பித் தெழுதுவிக்க அடிக்கடி சேதுக் கரை யிற் போயிருந்து வந்தான். இராச குமாரர்கள் கல்வியிலும் படைப் பயிற்சியிலும் தேகவளர்ச்சி யிலும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வந்தார் கள். அவர்களுக்குட் சங்கிலியென்பவன் கபட சிந்தையுங் கடு விவேகமும் அஞ்சாக் குணமுந் துஷ்ட நடையு முள்ளவனானான். மற்றவர்கள் ஒழுக்கமும் உயர்குணம் முதலிய சுபநயங்களு முள்ளவர்களானார்கள்.

---

1. இந்நூல் எதிர்மனசிங்க பரராசசேகரன் காலத் தில் இயற்றப்பட்ட தென்பர் சுவாமி ஞானப்பிரகாசர் — யா. வை. வி. 110.

இரண்டாம் தமிழ்ச் சங்கம் இவன் காலத்தில் நிறு வப்பட்டதெனவும் இரகுவம்சம் இக்காலத்திற்றான் இயற் றப்பட்டதெனவும் உடன்படுவர் முதலியார் இராசநாயகம் அவர்கள் — யா. ச. பக். 77, 78.

## சுபதிட்ட முனிவர்

இப்படி யிருக்கும் காலத்தில் ஒருநாள் அகத்தியமுனிவரின் பௌத்திரருஞ் சித்தமுனிவரின் புத்திரருமாகிய சுபதிட்டமுனிவர்[1] பரராசசேகர மகாராசனைக் காணவந்தார். அரசன் அவ்விருடிக்குத் தான் செய்யவேண்டிய ஆசார வுபசாரங்கள் அனைத்தையுஞ் செய்து ஆசனத்தின் மேலேற்றி அவரை நோக்கி, "சுவாமி! தேவரீர்! என் பிதாவுக்கு வருங்கால சம்பவங்களை அறிவித்திருந்தீர். அவைகள் அடியேனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. ஆதலால் அவைகளை விபரமாகச் சொல்லி அடியேனுக்கும் இவ்வரசாட்சிக்கும் இனிமேற் சம்பவிப்பவைகளைத் தெளிவிக்க வேண்டும்" என்று கேட்டான். அப்பொழுது சுபதிட்ட முனி அவனை நோக்கி, "அரசனே! இன்னமுஞ் சிலகாலம் உனதரசாட்சி சிறப்பாக நடக்கும். முன் முடி சூட்டிய முகூர்த்தம் தப்பிப் போனதினால் உன்னிற்பின் இம்முடியைச் சூடுதற்குப் பிள்ளைகளில்லை" என்றார். அதற்கு அரசன் இருடியை நோக்கி, "எனக்குப் பட்டத்துத் தேவி பெற்ற பிள்ளைகள் இருவருண்டே; அவர்கள் இல்லாதே போனால் இரண்டாந் தேவி பெற்ற பிள்ளைகளுண்டே. இவர்க ளெல்லாருமில்லாமற்

---

1. சுபதிட்டமுனிவரின் வரலாற்றை இடைச்செருகல் எனக்கொள்வர் சுவாமி ஞானப்பிரகாசர். இவ்வரலாற்றிற் கூறப்பட்டவற்றுட் சில உண்மைகள் உளவென நிலைநாட்ட முயன்றிருக்கின்றார்கள் முதலியார் இராசநாயகம் அவர்கள். இம்முனிவர் வாக்கின் பிற்பகுதி இடைச்செருகல் எனவும் குறிப்பிட்டுள்ளார் — யா. ச. பக். 79-82 & Ancient Jaffna 374-80.

போவார்களா?" என்றான். அதற்கிருடி, "அரசனே! நீ இத்தனை பிள்ளைகள் உண்டெடன்பது மெய்யே. அவர்களுட் பட்டத்துக்குரிய மூத்த குமாரன் விஷத்தினாற் கொலையுண்பான். இளையவன் வாளினால் வெட்டுண்பான். உன் இரண்டாந் தேவியின் மூத்த குமாரனை வைப்புப் பெண்ணின் மகன் வாய்ப் பேச்சினால் மயக்கி அரசாட்சியைக் கையாடிக் கொடுங்கோலரசு செலுத்துவான். அவன் செய்யுங் கொடுமைகளைக் குடிகள் தாங்கமாட்டாமற் பொருமை கொள்வதினாலும் உன் இரண்டாந் தேவியின் மூத்த குமாரனை அவன் வெறுத்துப் பகைகொள்ளப் பண்ணுவதினாலும் அவர்களால் இராச்சியம் அன்னியர் கைவசமாகும்" என்றார். அதற்கரசன், "அன்னிய இராசர்கள் கையிலிருந்து எப்பொழுது மீளும்?" என்று கேட்க,

## பறங்கிக்காரர்

இருடி அவனை நோக்கி, "அரசனே! இவ்விராச்சியம் முதல் முதல் பறங்கிக்காரர்[1] கையில் அகப்படும். அவர்கள் சில ஆலயங்களையெல்லாம் இடித்துச் சத்யவேதத்தைப் பலபந்தமாகப் பரப்பி நாற்பது வருடகாலம் வரைக்கும் கொடுங்கோல் செலுத்தி யரசாட்சி செய்துவருவார்கள்.

## உலாந்தேசர்

பறங்கிக்காரரை உலாந்தேச மன்னன்[2] உபாயமாகப் பிடித்து இறப்பிறமாது சத்தியவேதத்தை

1. பறங்கிக்காரர் ஆட்சி கி. பி. 1620—1658.
2. உலாந்தேசர் ஆட்சி 1658—1796.

இராசவதிகாரத்திற்றைப் பரப்பித் தன் சமயவால யங்களிலே யன்றிச் சிவசமய வாலயங்களில் மார்க்க வழிபாடு செய்ய இடம் வையாதபடி சனங்களைக் கட்டுப்பாடுபண்ணிச் சிவசமய ஆசா ரங்களை முழுதுந் தள்ளிப்போடத்தக்க கட்டாயங் களைச் செய்து தன் சமயக் கோவில்களைக் கட்டு வித்துச் சமய காரியங்களில் நெருக்கிடை பண் ணியும் அநேக வரிகளை வைத்துக் குடிகளை வருத்தியும் நூற்றிருபது வருடத்துக்கு மேற்பட அரசாட்சி செய்வான். அவனிடத்திலே இங்கிலீசு மன்னன் இராச்சியத்தைப் பெற்றுச் சமய காரியங் களிற் பலபந்தஞ் செய்யாமல் எவர்களுக்கும் இஷ்டங் கொடுத்து எவர்களுந் தங்கள் இட்டப் படி தேவாலயங்களைக் கட்டி முடிக்கத் தடை செய்யாமல் விட்டு எழுபத்தோன்பது வருஷம் அரசு செய்வான். இவன் தன் அரசாட்சி முற்கூற்றிற் போலப் பிற்கூற்றில் நீதிமுறை செலுத்தாதே போவான். இவன் தன் அரசாட்சியை இழந்து போகும் காலம் நிறைவேற முன்னமே சிங்கை யாரிய மகாராசன் கட்டுவித்த கோவிற் றிருப்பணி களும் விஜயராசன் கட்டுவித்த திருப்பணிகளும் பழையபடி நிறைவேற்றமாவதற்கு ஆரம்பமா கும்[1]. அவ்வாலயங்களை அநேகர் புகழையீட்டிக் கொள்வதற்குக் கட்டத் தொடங்கி, முன்னிருந்த நிலைபரங் கட்டத் தவறிக் கட்டியுளைந்து போவார் கள். அவ்வாலயங்களில் வடமதில் வாயில்காப் பாக நின்ற சிவாலயம் ஒன்று மாத்திரமே சிவ

1. இவ்வாலயங்களில் நகுலேச்சரமும் திருக்கேதீச்சர மும் முற்றுப்பெற்றன.

கடாட்சம் பெற்ற ஒருவனால் முதன் முதல் நிறை வேறும் மற்றைய ஆலயங்களும் ஒன்றின்பின் ஞென்ருக நிறைவேற்றமாகும். எல்லா ஆலயங் களிலும் விசேஷமாகிய கைலாயநாதர் கோவிலும்[1] கையிலை நாயகியம்மன் கோவிலும் முன்னிருந்தபடி கட்டியெழுப்புதற்கு கைலாயநாதராற் பூரணகடாட் சம் பெற்றுக் கொள்பவர்களே முயல்வார்கள்.

## ஆங்கிலேயர்

இங்கிலீசு மன்னன் எழுபத்தொன்பது வருஷம்[2] அரசாண்டபின் பிராஞ்சிய இராசனும் உலாந்தேசு மன்னனும் இராச்சியத்தை அவன் கையிலிருந்து கபட தந்தரமாகப் பிடித்து கொழும்பி லிருந்து அரசாளுவார்கள். அப்பொழுது வாலசிங்கம் வெளிப்பட்டு அவர்களிடத்தில் வருவான். வரவே அவன் கையில் இலங்கை அரசாட்சி முழுவதை யும் ஒப்புவித்துத் தங்கள் நாட்டுக்குப் போவார் கள். அதன்பின்[3] பூலோப(க) சிங்க சக்கிரவர்த்தியின் மகன் ஆரிய சிங்கச் சக்கிரவர்த்தி கன்னியாகுமரி தொடங்கி இமயமலை பரியந்தமுள்ள ஐம்பத்தாறு தேசங் களையும் ஒரு குடைக்கீழ் அரசாளுவான். உன் சந்ததி யாருக்குள இனி ஒருபோதும் அரசாட்சி வருவ தில்லை" என்று சொல்லி சுபதிட்டமுனி எழுந்து போனர். இப்படி உறுதிவாக்காகவே சொன்ன போதிலும் சுபதிட்டமுனி தனக்கு விபரித்துச்

1. கைலைவிநாயகர் கோவிலும் — உ. தா. பிரதி.

2. இவ்வாக்கு இடைச் செருகல்; அன்றியும் கணக் கும் பிழைபட்டுவிட்டது.

3. தி. த. க. பிரதி; "கேதாபுரியையாளும்",

சொல்லிய வாக்குக்களை அரசன் நம்பினவனும் நம்பாதவனுமாயிருந்தான்.

## இராசகுமாரன்

சிலகாலத்தின் பின் இராசாவின் முதற் குமாரன் சடுதிமரணமுண்டுபட்டு இறந்துபோனான். சங்கிலி நஞ்சூட்டிக் கொன்றானென்பது ஒருவருக்குந் தெரியாதே போயிற்று. மூத்த குமாரன் இறந்து போக அரசன் தன் இளைய குமாரனாகிய பண்டாரமென்பவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிவைத்துத் தீர்த்த மாடுவதற்குப் பரிவாரங்களுடனே,

## அரசன் கும்பகோணத்துக்கு யாத்திரை செய்தல்

கும்பகோணத்துக்கு யாத்திரை பண்ணினான். சோழதேசத்தரசனும்[1] மகாமக தீர்த்த மாடுவதற்குப் பரிவாரங்களுடன் அவ்விடத்தில் வந்திருந்தான். அவ்விடத்தில் அச் சங்கிலி செய்த குழப்படியினால் அவனையும் பரராசசேகரனையும் பரிவாரங்களையும் அவ்வரசன் பிடித்துச் சிறையில் வைத்தான். படை சேனைகளுடன் பின்னாகப்போன பரநிருப

1. தஞ்சாவூர் அரசனென்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள் — யா. ச பக் 82.

பரராசசேகரன் கும்பகோணத்துக்குப் போவ விடத்தில் சோழ இராசனோடு போராடி வென்றகதை உபகதையே. எங்ஙனமெனில், சோழ இராச்சியம் விஜயநகர எழுச்சியின் முன்னே இருந்தவிடமுந் தெரியாமல் அழிந்தொழிந்து போயினமையால்; அன்றியும் தீர்த்த யாத்திரைக்கு வேற்றுத்தேசம் போனவொருவன் அத்தேச அரசனைப் பொருது வென்றானென்பது சிறிதும் பொருந்தாததோர் கூற்றாம். — யா. வை. வி. பக். 111.

சிங்கம் அதைக் கேள்விப்பட்டுப் போய்ச் சண்டை யாரம்பித்துக் கடும்போர் பண்ணுகையிற் பரநிருப சிங்கத்துக்கு வலுவான காயங் கிடைத்தது. அப்படியிருந்தும் அவன் அந்தக் காயங்களையும் எண்ணமல் வீராவேசங் கொண்டு போராடி அவ்வரசனைப் பிடித்துச் சிறையிலிட்டுப் பரராசசேகரன் முதலானவர்களைச் சிறையிலிருந்து நீக்கி மூன்று மாதம் அங்கேயிருந்து தனக்குப் பட்ட காயங்களையும் மாற்றினன். அப்பொழுது சோழநாட்டரசன் தன் இராச்சியத்தைத் தான் ஆளும்படி விட்டால் திறையிறுப்பேனென்று வேண்டிக் கொள்ள, அவனிடத்தில் அதற்கேற்ற பிணை வாங்கிக் கொண்டு இராச்சியத்தை ஒப்புவித்து விட்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினன்.

## பரநிருபசிங்கன் ஏழு கிராமங்களைப் பெறல்

யாழ்ப்பாணத்திற் சேர்ந்தபோது பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை யழைத்து அவனுக்குக் கன வரிசைகளுஞ் செய்வித்து மிகவுங் கனப்படுத்தி கள்ளியங்காடு, சண்டிருப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம் என்னும் ஏழு கிராமங்களைச்[1] சொந்தமாகக் கொடுத்துச் செப்புத்

---

1. இவ்வேழு கிராமங்களும் ஒருசேர ஓரிடத்ததாயின் அதன் ஆளுகையைத் தன் மகனுக்கு நல்கி அதிபதியாக்கினனென்பது நம்பத்தக்கதாகும். ஆனல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் இவ்வேழு கிராமங்களுக்கும் ஏழு அரசகுடும்ப மக்களை அதிபதிகளாக்கியபடியால், அக்கிராமங்கள் அவர்களுக்குத் தந்தை வழிவந்த உரிமைப் பொருள்கள் என்பதைக் காட்டவே இக்கதை எழுந்தது போலும் (யா. ச. பக். 83.)

தகட்டிலே பட்டயமும் எழுதிக் கொடுத்து அரசாட்சியின் இரண்டாம் அதிகாரமுடையவனுமாக்கினான். அது சங்கிலிக்கு மன நோவாயிருந்தும் வெளிக்குக் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

## அவனது வைத்தியத் திறமை

அக்காலத்திலே கண்டியிராசன் மனைவி பண்டிதர்கள் அநேகரால் மாற்றமுடியாத வயிற்று வலியில் வருந்தினதினால் அவ்வரசன் நல்ல வைத்தியன் ஒருவனை அனுப்பும்படி பரராசசேகர மகாராசனுக்குப் பாசுர மனுப்பினான்[1]. அவ் வியாதி மாற்றுதற்கு பரநிருபசிங்கஞ் செய்த சூட்சத்தைக் குறித்துக் கண்டியிராசன் ஆச்சரியங் கொண்டு அவனுக்குத் தான் செய்ய வேண்டிய உபசாரங்கள் எல்லாஞ் செய்தனுப்பி வைத்தான்.

## சங்கிலி சிங்காசனத்தைக் கைப்பற்றல்

அக்காலத்தில் ஒரு நாள் பண்டாரம் என்னும் இளவரசன் பூஞ்சோலை சுற்றிப் பார்த்து வருகையிற் சங்கிலி மறைவிலே நின்று வாளினால் வெட்டிக் கொலை செய்து இராச்சியந் தனக்கென்று முன்னின்றான். அவன் தன்னுயிரையுஞ் சிதைப்பானென்னும் பயத்தினாலே பரராச மகாராசன் பேசாதே யொதுங்கிவிட்டான். அதுகண்டு

1. பி-ம். 'பரராசசேகரன் பரநிருபசிங்கத்தையே அனுப்பிவைத்தான். பரநிருபசிங்கம் வியாதியை ஒரே ஔஷதத்தினாலே மாற்றினான்'' — உ. தா. பிரதியும், தி. த. க. பிரதியும்.

பரநிருபசிங்கம் நானிருக்க இராச்சியம் இவனுக்கெப்படிக் கிடைக்குமென்று தன் வலிமை காட்ட முயன்ருன். அதை யறிந்து சங்கிலி[1] பரநிருபசிங்கத்திடத்திற் போய், "கேளும் அண்ணு! நாங்கள் இருவருஞ் சகோதரராயிருக்கவே இராச்சியம் எங்களிருவருக்கும் பங்கென்பதற்குத் தடையில்லை. நாமிருவரும் பகை கொண்டாடி நின்ருல் வன்னியர்கள் இராச்சியத்தைப் பறித்துக் கொள்ளப் பார்ப்பார்கள். அப்படி வராதபடி இப்போதைக்கு நான் இராசனென்றும் நீர் மந்திரியென்றும் இருந்தாளுவோம். இனிமேல் வேருெழுங்கு பண்ணிக் கொள்வோம். இராச்சிய வருமானம் இரண்டு பேருக்கும் பங்காகவேயிருக்கும். உமக்கு எங்கள் பிதாவினுற் கிடைத்த தேசவதிகாரத்தை உமது மகன் பரராசசிங்கத்துக்குக் கொடுத்து விட்டு என்னுடனே கூடிக் கொண்டாற் பெருங் காரியங்களெல்லாம் நிறைவேற்றலா"மென்று சொல்லி வாய் மயக்குக் காட்டி வசப்படுத்தப் பரநிருபசிங்கம் இதற்கிணங்கி மந்திரி யுத்தியோகத்துக்கு ஏற்பட்டான்.

சில காலத்துக்குள்ளே சங்கிலி சேனைகளைத் தன்வசப் படுத்திப் பெலத்துக்கொண்டு பரநிருபசிங்கத்துக்குப் பங்கிட்டுக் கொடுத்து வந்த பங்கையும் பரராசசிங்கத்துக்குக் கொடுத்திருந்த தேசாதிகாரத் தலைமையையும் நிறுத்தி மந்திரி யுத்தியோகத்துச் சம்பளம் மாத்திரம் கொடுக்கத்

1. சங்கிலி கி. பி. 1519-ல் இராச்சியத்தைக் கைக்கொண்டான்.

தொடங்கினான். இன்று முதலாக நீர் திறை கொடுக்க வேண்டியதில்லை யென்று பரநிருபசிங்கம் பாசுரமெழுதிச் சோழநாட்டரசனைத் தடுத்தான்[1].

## பறங்கிக்காரர்

அந்நாட்களிற் பறங்கிக்காரர் மன்னாரில் வியாபாரம் பண்ணி வரத்துப் போக்காயிருக்கை யில் அவர்கள் செய்த உபதேசத்தினால் அறுநூறு குடிகளிற் சனங்கள் சத்தியவேதத்திற் சேர்ந்தார் கள்[2]. அதைக் கேள்விப்பட்டவுடனே சங்கிலி இராசன் அந்த அறுநூறு வீட்டுக்காரரையும் பெண் ஆண் குழந்தையென்னும் பேதம் பாராட் டாமல் அனைவரையும் வெட்டுவித்தான்[3].

## சிங்களவரைத் துரத்தல்

யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இருந்த புத்தசமயக் கோவில்களை யெல்லாம் இடிப்பித் துச் சிங்களக் குடிகளை முழுதாகத் துரத்திவிட் டான். அந்தச் சிங்களக் குடிகள்[4] ஒன்றாகிலும் இருந்ததில்லை.

---

1. அந்நாட்களில் சோழவரசு இருக்கவில்லை.

2. பிரான்சிஸ் சவேரியார் என்னுங் கத்தோலிக்க குரு தென்னிந்தியாவிலே பரதவர்களுக்குச் சுவிசேஷ சேவை செய்து வருங்கால் தன் பெயரையுடைய பரதவக் குரு ஒருவரை மன்னாருக்கனுப்பி அங்கிருந்த கடையர்கள் 600 பேரைக் கி. பி. 1543ல் கிறீஸ்தவர்களாக்குவித்தார்

3. இப்பெருங்கொலை நிகழ்ந்தது 1544-ம் ஆண்டு மார்கழி மாசத்திலாகும்.

4. 'கண்டி நாட்டிலும் வன்னியிற் காட்டிலும், போயொதுங்கினார்கள். அது முதல் யாழ்ப்பாணத்தில் சிங்களக்குடிகள் — தி. த. க. பிரதி.

### யாவுகர்[1]

முன் விசயவாகுவின் கீழ்ப் போர்ச் சேவுகராய் இருந்த யாவுகச் சேனையிலே கொலைக்கும் இராச தண்டனைக்கும் தப்பியிருந்த சில யாவுகக் குடிகள் சாவாங் கோட்டையிலும் சாவுகச்சேரியிலும் இருந்தார்கள். அவர்களையும் துரத்திவிட்டான்.

### 49 வன்னியர்களின் மரணம்

அந்தக் காலத்தில் நாற்பத்தொன்பது வன்னியர்மார் தென்னாட்டிலிருந்து மரக்கல மேறி வருகையில் நெடுந்தீவிற் கடலில் அமிழ்ந்து போனார்கள். அவர்களின் மனைவி மக்களுங் கரைப்பிட்டி வன்னியனும் அவன் மனைவி அம்மைச்சி நாச்சியாரும் வெவ்வேறு மரக்கலங்களிலே கன இரவியங்களுடனே வந்திறங்கினார்கள். அவர்களுட் கரைப்பிட்டி வன்னியன் ஓடைக் குறிச்சி யென்னும் கந்தரோடையிலே வீடுகட்டிக் கொண்டு மற்ற வன்னியர்கள் வரும்போது கூடிக்கொண்டு போகலாமென்றிருந்துவிட்டான். மற்ற வன்னியர்கள் நெடுங்காலமாக வரக்காணாததால் வன்னிச்சிகள் அங்கங்கே வீடுகட்டிக் கொண்டு தங்கள் தலைவர்களின் வரவைப் பார்த்து வேலைக்காரரின் உதவி பெற்று அங்கங்கே யிருந்தார்கள்.

### நம்பிகள்

கரைப்பிட்டி வன்னியன் கீழ் அறுபது கத்திக்கார நம்பிகள் சேவுகராயிருந்தார்கள். அந்த

---

1. குலோத்துங்க சிங்கையாரின் 13-ம் நூற்றாண்டில் யாப்பாகுவை யழித்த பொழுது சிறையாகப் பிடிக்கப் பட்ட யாவகர் — யா. ச. பக். 86.

நம்பிகளுட் டலைநம்பியின் மகளைக் கரைப்பிட்டி வன்னியன் கற்பழித்தான். அவள் தகப்பன் அறிந்து மறுநாள் அவ் வன்னியன் தேவவழிபாடு செய்து கொண்டிருக்கையில் அவனைக் கொலை செய்தான். அவன் கொலையுண்ண அவன் மனைவி அம்மைச்சி நாச்சியார் வயல்வெளியிலோடித் தான் எங்கே போகலாமென்றறியாமற் தற்கொலை செய்திறந்தாள். நம்பித் தலைவனும் இராசவிசாரணைக் குள்ளாகிக் கொலையுண்டான். வன்னியர் கையிலிருந்த திரவியம் சங்கிலி இராசனுக்காயிற்று. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததினுலே சாணாரக் கும்பம்[1] என்னும் அயற்கிராமத்திருந்த சாணாருக்குப் பணிவிடைக் காரராகிப் பனையேறுந் தொழில் பயின்று பின்பு அத்தொழிலைத் தங்கள் சொந்தமாக்கிக் கொண்டார்கள்.

## நளவர்[2]

அந்த நம்பிகள் தங்கள் குலத்தை விட்டு நளுவினதால் அவர்கள் நளுவரென்றாய் இக்காலம் நளவரென்றாயிற்று.

## மறவர்

இராமநாதபுரத்திலிருந்து சில மறவர் வந்து மறவன்புலவிற் குடியிருந்து உள் நாடுகளில் வந்து

1. சாணாரக்குப்பம் மாகையப்பிட்டியைச் சேர்ந்தது.

2. நளவருஞ் சிங்கள மரமேறிகளே. சிங்கள மரமேறிகள் காலில் தளைபோடாது மரங்களில் ஏறிப் பின் இறங்கும்போது நழுவி வருகின்றபடியால், நழுவரெனப்பட்டு, அப்பதம் நழுவராய் நளவராயிற்று. யா. ச. பக் 85-86.

பெருங் களவு நடத்தினதால் அவர்களிற் பலரைப் பிடித்துச் சங்கிலி இராசன் கொலை செய்வித்ததினால் மிச்சமான பேர்கள் பன்றியந்தாழ்வு என்னுங் காட்டுக்குள்ளே போய்க் குடியிருந்தார்கள்.

## சங்கிலி பரநிருபசிங்கத்தை வெறுத்தல்

அக்காலத்திலே வடதேசத்திலும் தென்தேசத்திலும் பெரும் பஞ்சமுண்டானதினாற் பலசாதியான[1] குடிகளுக்குள்ளே[2] ஒரு பெருங் கலகமுண்டான பொழுது அக்கலகத்தை யடக்கச் சங்கிலி இராசன் அவ்விடத்துக்குப் போய்த் திரும்பி வருகையில் இருபாலை யெல்லை கடந்தவுடனே வாத்தியகாரர் வாத்தியத் தொனியை நிறுத்தினார்கள். நிறுத்தினதற்குக் காரணம் என்னவென்று அரசன் கேட்க, "இது பரநிருபசிங்கத்தின் இடமாயிருக்கின்றதினால் உத்தரவின்றித் தொனி செய்யப் பயந்துவிட்டோம்" என்றார்கள்.

---

1. 'குடிகளும் ஈடுபட்டுவந்து அங்குமிங்குங் குடியிருந்தார்கள். அந்நாட்களிலே வடமிருட்சிப் பகுதியிலிருந்த குடிகளுக்குள்ளே' — தி. த. க. பிரதி.

2. இவ்விடத்தில் அத்வக்காத்து பிறிற்றோ அவர்களின் மொழி பெயர்ப்பின்படி அதிகம் வித்தியாசம் உண்டு. 'வடதேசத்திலும் தென்றேசத்திலும் பெரும் பஞ்சம் உண்டானதின் பொருட்டு தென்றேசத்துப் பல்வேறு குடிகள் புதிதாகவந்து குடியேறினமையால், அரசனின் கொடுங்கோன்மை காரணமாகக் குறைந்த குடிசனத்தொகை ஒருவாறு சமன்பட்டது. அந்நாட்களில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்த குடிசனங்களுக்குள்ளே ஓர் பெருங்கலகமுண்டுபட...' என விரித்துக் கூறப்பட்டிருக்கின்றது. ஆயின் இக்குடியேற்றத்தைப் பற்றி 1916ம் ஆண்டு வெளிவந்த பிரதியிலும் குறிப்பிடப்படவில்லை.

அதன்மேற் சங்கிலி கள்ளியங்காடு முதலிய ஏழு கிராமங்களையும் பரநிருபசிங்கத்தின் கையாற் பறிக்க யோசித்துஞ் செப்புப் பட்டயமிருந்ததினால் முடியாதே போயிற்று. முடியுஞ் செங்கோலும் பரராசசேகர மகாராசன் கையில் இருந்ததினாற் சங்கிலி முடியின்றி அதிகாரஞ் செலுத்தி வந்தான். பரராசசேகரன் வன்னியமாரைத் துணையாகக் கொண்டு பரநிருபசிங்கத்துக்கே முடிசூட்ட எண்ணங் கொண்டிருந்தான். சங்கிலி வேறு முடி தேடிச் சூட்டிக்கொள்ள ஆலோசித்தும் கலகம் நேரிடுமென்று பயந்து அப்போதைக்கு அந்த எண்ணத்தை நிறுத்திவிட்டுப் பரநிருபசிங்கத்துக்கும் பரராசசேகரனுக்கும் வன்னியமாருடனே அதிக கொண்டாட்டம் நடப்பதையறிந்து தான் நிறுத்தி வைத்த வருமானப் பங்கை மறுபடியும் பரநிருப சிங்கத்துக்குக் கொடுக்கவும் கிராம அதிகாரத்தைப் பரராசசிங்கத்துக்குக் கொடுக்கவும் சம்மதித்துச் சமாதானம் பண்ணிக்கொண்டான். பரநிருபசிங்கத்துக்கும மகனுக்கும் இராசாக்களுக்குரிய நாமங்கள் இருந்ததினால் அந்தப் பெயர்களுக் கொவ்வொரு பட்டத்தையுஞ் சூட்டி வித்தியாசமாக்கி விட ஆலோசித்து வடதிசை வேளாளருக்குரிய முதலிப் பட்டத்தை அவர்கள் பெயர்களின் இறுதியிற் சேர்த்து பரநிருபசிங்கமுதலி, பரராசசிங்கமுதலி யெனத் தானெழுதி வைத்துக் கொண்டது மல்லாமல் ஒரு தினத்திற் பரராசசிங்கத்தை யழைத்து, "உன் பிதாவுக்கும் உனக்கும் சகல இராமங்கள் மேலும் அதிகாரம் கிடைத்திருக்கின்றது. உங்களிற் பின் உங்கள் சந்ததியாருக்கும்

இவ்வதிகாரம் தலைமுறை தலைமுறை தோறும் நிலையாகவே நிற்கும். ஆதலால் உங்கள் பின் குலத்தாருக்கு ஒரு பட்டஞ் சூட்டிவைக்க விரும்பு கிறேன். அதென்னவென்றால் ஐஞ்ஞூறு கிராமத் துக்கே தலைமை பெற்றது மடப்பம், அளித்தல் - காப்பாற்றுதல். மடப்பத்தை அளிப்பதால் மடப் பளி யென்பதாம்" என்றான்[1]. அதைப் பரராசசிங் கம் தன் பிதாவுக் கறிவிக்க, "அவன் எப்படிப் பிதற்றினாலும் பிதற்றட்டும். வரவர இருந்தறிய லாம். நீ உன் அலுவலைப் பார்" என்றான். அதன் பின் சங்கிலி சேனைகளையும் ஆயுதங்களையும் அதி கம் அதிகமாகச் சேர்த்து வரவரப் பெலத்துக் கொண்டான்.

## இளைப்பாறிய அரசன் திரவியத்தைப் புதைத்தல்

காரியங்கள் இருக்கிற நிலைபரத்தைக் கண்டு பரராசசேகர மகாராசன் தன்னிடத்திலிருந்த சேம திரவியத்தை இராக்காலத்திலே யானைகளில் ஏற் றிக்கொண்டுபோய் வன்னிநாட்டைச் சேர்ந்த

---

1. மடப்பளி :— கலிங்க தேசத்து மடப்பளி யூரி னின்று வந்த அரசகுடும்பத்தவர்களே மடப்பளியார் என்றழைக்கப்பட்டனர்.— யா. வை. வி. பக். 148–149, யா. ச. பக். 117—. நூலாசிரியர் கூறியதை நிலைநாட்டுவர் சில சரித்திராசிரியர்கள். மடப்பளியென்னும் மொழியை மடைப்பள்ளியாக்கி அரசகுடும்பங்களுக்குச் சமையல் செய்தவர்களின் சந்ததியார் எனக்கூறுவாருமுளர்.

மடப்பம். 500 கிராமங்களுக்குத் தலையூர் எனச் சதுரகராதியிற் கண்டது. இம்மொழியிலிருந்தே மடப் பள்ளி யென்னுஞ் சொல் பிறந்ததென்பது வைபவமாலை யார் கூற்றுப்போலும்.

வொரு பெருங் காட்டுக்குள்ளே தன் முன்னோர் திரவியஞ் சேமித்து வைத்த விடத்திலே சேமித்து வைத்துச் செங்கோலையும் முடியையும் அவ்விடத்திற் கூட வைத்து உன்மத்த வயிரவனையும் காவல் வைத்துத் திரும்பி வந்து தன் மாளிகையில் இருந்துவிட்டான்.

## அரசனுக்கு எதிராகச் சூழ்ச்சி

பரநிருபசிங்கமும் சங்கிலியும் ஒருவரோடொருவர் வெளிக்குச் சந்தோஷவான்கள் போலக் காட்டியும் உள்ளெண்ணத்திலே ஒருவரை ஒருவர் சதிப்பவர்களாகவே யிருந்தார்கள். சங்கிலியின் கொடுமை வரவரத் தலைப்படத் தொடங்கிற்று.

## அர்ச். சவேரியார்

சத்திய வேதத்திற் சேர்ந்த அறுநூறு குடிகளைச் சங்கிலி இராசன் மன்னாரில் வெட்டுவித்ததினால் சவேரியார் என்னும் பறங்கிக்காரர் பறங்கிக்காரரை யாழ்ப்பாணத்தில் ஊடாடப்பண்ணவும், தன் சமயத்தை நாட்டவும் அவாவுள்ளவராய்த் திரிந்தார்[1]. அந்நாட்களிற் பரநிருபசிங்கத்துக்கும் சங்கிலிக்கும் பகை நேரிட்டிருப்பதைக் கேள்விப்பட்டுச் சவேரியார் பரநிருபசிங்கத்துடனே எழுத்து மூலமாய்க் கொண்டாட்டமானார். பரநிருபசிங்கம் இனிமேல் இராச்சிய வதிகாரம் தனக்குள்ளே வரமாட்டாதென்று கண்டுகொண்டு இராச்சியத்

1. சவேரியார் சங்கிலி மன்னனிடத்திற்போய்த் தன் மதத்தைப் போதிப்பதற்கு உத்தரவு கேட்டும், அரசன் இடங்கொடுக்கவில்லை.

தைச் சங்கிலி கையிலிருந்து பறித்து அன்னிய ராசனுக்குக் கொடுக்க எண்ணங் கொண்டான்[1].

## அப்பா மகளின் கற்புக்குப் பங்கம்

இப்படி யிருக்குங் காலத்திற் சங்கிலி தன் மந்திரிமாருள் ஒருவனாகிய அப்பா வென்பவன் மகள் மிகவும் அழகுள்ளவளா யிருந்ததினால் அவளைக் கற்பழிக்கும் நோக்கங் கொண்டிருந் தான். அதை அவளின் பிதாவறிந்து பரநிருப சிங்கத்தினிடத்தில் வந்து தன் மானத்தைக் காப் பாற்றித் தரவேண்டுமென்று அழுதான். பரநிருப சிங்கம், "நீ பயப்படாதே, நான் காப்பாற்றி வைப்பேன்" என்று திடஞ் சொல்லி, ஓர் ஓலை யெழுதி, "இதைக் காக்கைவன்னியன் கையிற் கொண்டுபோய்க் கொடு. அவன் ஊர்காவற்று றையில் வந்திறங்கியிருக்கிறான்" என்று சொல்ல, அப்படியே அவன் கொண்டுபோய்க் கொடுத் தான். காக்கைவன்னியன் அதை வாசித்துப் பார்த்துக்கொண்டு, "நீ உன் மகளைப் பரநிருபசிங் கத்தின் வீட்டில் அடைக்கலமாக வைத்துவிட்டுப் போய் உன் அலுவலைப்பார். நான் சற்றிடம் போய் வந்து எல்லாம் பார்த்துக் கொள்வேன்"

1. அக்காலத்தில் யாழ்ப்பாண வரசனைப் பயப்படுத்த லாமென நினைத்து நெடுந்தீவில் வந்திறங்கியவன் போர்த் துக்கேயரின் படைத்தலைவனாகிய மாட்டின் அப் பொன்சோ தே சௌசா (Martin Aponso de Sousa) என்பவனாவன். அவனிடம் உதவிகேட்கப்போனபரநிருபசிங் கத்திடமிருந்து விலையுயர்ந்த முத்துக்களையும், சங்கிலியிட மிருந்து 5000 பர்தாங்கு அளவினதான திரவியத்தையும் பற்றிச் சென்றனன். யா. ச. பக். 92.

என்று சொல்லி பரநிருபசிங்கத்திற்கு வதில் ஓலையுங் கொடுத்தனுப்பிவிட்டான். வன்னியன் சொற்படியே அப்பா வென்பவன் பரநிருபசிங்கத்தினிடத்திலே ஓலையையுங் கொடுத்துப் பெண்ணையும் அடைக்கலம் வைத்தான்.

## பறங்கியர் வியாபாரிகளென்ற சாட்டில் வருதல்

உடனே காக்கைவன்னியன்[1] தரங்கம்பாடிக்குப் போய் அங்கே பறங்கிக்காரரைக் கண்டு, "யாழ்ப்பாணம் பிடித்துத் தருவேன், வாருங்கள்" என்றான். அவர்கள் அவன் பேச்சை நம்பாததினுற் சத்தியம் பண்ணிக் கொடுத்தான். அப்பொழுது பறங்கிக்காரர் வியாபார முகாந்தரத்தில் வருபவர்கள் போலப் பண்ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலியிடத்திற் போய்த் தாங்கள் வியாபாரஞ் செய்ய உத்தரவு கேட்டார்கள். அதற்குச் சங்கிலி சம்மதியாதே போனான். அப்பொழுது பரநிருபசிங்கமும் மந்திரிமாரும் ஒருமித்து நின்று இப்படிப்பட்ட வியாபாரம் இந்த நாட்டுக்கவசரமாகத் தேவையாகவே யிருக்கின்றது. இந்த வியாபாரம் நடந்தேறினால் இவ்விடத்திற் கிடையாத நூதனப் பொருள் அநேகம் நாங்கள் பெற்றுக்கொள்ளலாமென்று மேன்மேலுஞ் சொல்லச் சங்கிலி ஒருவாறுடன்பட்டு இவர்கள்

---

1. தரங்கம்பாடியில் போர்த்துக்கேயர் இருந்தமை, காக்கை வன்னியன் ஊருத்துறைக்கு வந்தமை, அப்பா அவனுக்கு ஓலைகொண்டு சென்றமை ஆதிய விபரங்களெல்லாம் தடுமாற்றமே — யா. வை. வி. பக். 118.

பகற்காலத்தில் நாட்டுக்குள் வந்து வியாபாரம் பண்ணிக்கொள்ளலாம். இராக்காலம் ஊருக்குள் நிற்கக்கூடாது. தோணிகளிலே போய்த் தங்க வேண்டுமென்று உத்தரவு கொடுத்தான். சில நாளாக வியாபாரம் அப்படியே நடந்தேறி வந்தது. அப்படி நடந்து வருகையிற் பறங்கிகள் சில பட்டுப் புடவைகளும் பல நூதன வஸ்துக்களுங் கொண்டு வந்து சங்கிலி இராசனுக்குக் கொடுத்து நன்முகம் பெற்றுக்கொண்டு, "மகாராசனே! நாங்கள் தோணிகளிற் சமையல் போசனம் பண்ணுகிறதும் நித்திரை செய்கிறதும் மிகுந்த வருத்தமாயிருக்கின்றது. ஆதலால்[1] நாங்கள் தங்கியிருக்கவும் வியாபாரப் பொருள்களைச் சேகரிக்கவும் கடலோரத்திலே ஒரு வீடு கட்டிக் கொள்ள உத்தரவு கிடைக்கவேண்டும்," என்று கேட்டார்கள். அதற்குச் சங்கிலியிராசன், "நாட்டுக்குள்ளே கட்டக் கூடாது, கடலோரத்திலே தான் கட்டிக் கொள்ளலாம்," என்று உத்தரவு கொடுத்தான்.

## கோட்டை கட்டுதல்[2]

அவ்வுத்தரவைச் சாட்டாகக் கொண்டு பறங்கிகள் மண்ணால் ஒரு கோட்டையைக் கட்டி

---

1. "கடலோரத்திலே" — தி. த. க. பிரதி.

2. பரநிருபசிங்கன் தூண்டுதலால் போர்த்துக்கேயருக்கு வியாபாரம் செய்ய இடங்கொடுத்தான் என்பதும், காட்டுநடுவே அவர்கள் கோட்டைகட்டியிருப்பதைச் சங்கிலி வேட்டம் போன காலத்திற் கண்டு, கோட்டையையிடிப்பித்து அவர்களையும் வெளிச் செல்லக் கட்டளையிட்டான் என்பதும், அப்போது அவர்கள் இவனுடன் போர்

முடித்து அதிலே படை சேனைகளையும் ஆயுதங்களையும் நிறைத்து வைத்தார்கள். அவ்விடத்துக்குத் தென்புறங் கடலும் மற்ற மூன்று புறமும் பெருங் காடுமாயிருந்ததினால் அங்கே மனிதப் போக்குவரவு இல்லாமலிருந்தது. அதினால் அந்தச் செய்தி அரசனுக்கு வெளிவராமற் போயிற்று. காரியம் இப்படி நிறைவேறிச் சில காலத்தின் பின் சங்கிலியிராசன் வேட்டையாடுதற்குக் காட்டினுட் புகுந்து அங்கு மிங்குஞ் சுற்றி வருகையிற் கோட்டை கொத்தளத்தையுங் கொடிகளையுந் தூரத்தே கண்டு திகைத்தவனாகி அவ்விடத்திற் போய் அங்குள்ள ஆயுதங்கள் அனைத்தையுங் கண்டு: "நீங்கள் இவ்விதமாகச் செய்ய உத்தரவு தந்தவன் ஆர்?" என்றான். "அரசனே! நீர்தான்," என்றார்கள். "நீங்கள் தங்குதற்கு ஒரு சிறிய வீடு கட்டிக்கொள்ள உத்தரவு தந்தேனே யொழிய இப்படிக் கோட்டை கட்ட நான் உத்தரவு தந்ததில்லை. இப்பொழுதே பிடுங்

---

செய்தார்கள் என்பதும் ஆதாரமற்ற வெறுங்கதை — யா. ச. பக். 101.

சோனகர் பண்ணைத்துறையிற் கட்டிய பண்டகசாலைகளைப் பறங்கியர் கட்டியவை எனவும் பறங்கியர் அவற்றை அழிக்க, சங்கிலி அழித்தானெனவும், காக்கோ (அல்லது காக்கா) என்னு மிளவரசனைக் காக்கை வன்னியன் எனவும், பலமாறுதலான கதைகளை வரைந்த தோடமையாது பலவருஷங்களின் முன் இறந்துவிட்ட சங்கிலியை 1591 இலும் அரசாளுவோனாகக் காட்டிற்று. சங்கிலி காலத்துப் பறங்கியரின் போரையும் அவனுக்குப் பின் நான்காவதாய் ஆண்டவனுடைய காலத்துப் போரையும் ஒன்றாக்கி விநோதமான யுத்த சரித்திரமொன்றை ஏற்படுத்திவிட்டது — (யா. வை. கௌமுதி பக். 56.)

குங்கள்," என்ருன். அதற்குப் பறங்கிகள் உடன் படாததினுல்[1] யுத்த முண்டாக ஏதுவாயிற்று.

## யுத்தம்

யுத்தம்[2] நடப்பிப்பதற்கு நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற் புறத்தே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னுக விருந்த வெளியையே யிடமாக நியமித்துக் குறித்த நாளிலே யுத்தத்தை ஆரம்பித்துப் பதினெருநாளாக நடத்திஞர்கள். பறங்கிகள் துப்பாக்கிச் சூத்திரத்தைக் கையிற் கொண்டு அணியணியாய் நின்ருர்கள். தமிழர் வாள் முதலான படைக்கலங்களைக் கொண்டு நின்ருர்கள். இருதிறத்தவர்களும் படை யொழுக்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருந்ததினுல் ஒழுங்கான யுத்தம் நடந்ததில்லை. பறங்கிகள் ஒருவர் துப்பாக்கிச் சூத்திரத்தை நீட்டி இலக்குப் பிடிக்க மற்ருெருவர் பற்றுவாய்க்கு நெருப்பு வைக்கச் சில முறைகளிற் பற்றுவாய் புகைந்து வெடித்திராதிருக்க சில முறைகளில் வெடிதீர்ந்து ஆட்களைக் காயப்படுத்தியும் கொலை செய்தும் நெருங்கத் தமிழர் வாள் மூதலிய

1. "அரசன் பலவந்தம் பண்ணித் துணிந்து முடியாதே போயிற்று. பறங்கிகள் முரட்டுத்தனங்காட்டி நின்றதினுல்" — தி. த. க. பிரதி.

2. நல்லூரிலே கி. பி. 1560-ம் ஆு சங்கிலிக்கும் போர்த்துக்கேயருக்கு மிடையில் நடந்த யுத்தத்திற்கும், கி. பி. 1620-ல் பாலிய வரசனுக்குப் பரிபாலகனுக விருந்த சங்கிலியுடன் நடத்தின யுத்தத்திற்கும் மலைவு. முதற் சண்டையில் சங்கிலியே வெற்றியடைந்தான். இரண்டாம போரில் சங்கிலி பிடிபட்டுக் கோவைநகரிற் சிரச்சேதஞ் செய்யப்பட்டான்.

படைக் கலங்களுடன் அஞ்சாமல் மேல்விழுந்து வெட்டிவரச் சேனைகள் இளைத்துப்போன வேளைகளிற் **சங்கிலி** இராசனும் அவனுக்குத் துணைவீரராய் நின்ற நானூறு பராக்கிரம சாலிகளும் முன்னணியிற் பாய்ந்து கடும்போர் செய்து சேனை(யின்) களைப்பை மாற்றப்[1] பறங்கிகள் ஏழாம் நாளிற் போரிலே அபசெயப்பட்டு, "இனியென் செய்வோம்! சங்கிலியிராசன் கையில் அகப்படுவதே யொழிய வேறு கெதியில்லை,"யென்று மனந் தத்தளித்துக்கொண்டு நின்ற சமயத்திலே அந்தப் பறங்கிகள் தங்களுக்குத் தரங்கம் பாடியில் துணைச் சேனை வந்து சேர்ந்ததைக் கண்டு மறுபடியும் மனத்தைரியங்கொண்டு நெருங்கி யுத்தஞ் செய்தார்கள். துப்பாக்கிச் சூத்திரங்கள் பற்றுவாய் புகைந்து புகைந்து இடைக்கிடை தாமதங்கள் நேரிட்டதினால் அப்பறங்கிகளும் வாட்படை கொண்டே பெரும்பாலும் யுத்தஞ்செய்ய வேண்டியதாயிருந்தது. வாள் யுத்தம் நடந்தேறி வருகையிற் பறங்கிகள் மறைவில் நின்று துப்பாக்கிச் சூத்திரங்களாற் சுட்டு அமடுபண்ண முயன்றார்கள். அது கண்டு தமிழர் கவண்கல் முதலிய ஆயுதக் காவல்களை யேற்படுத்தி அந்த அபாயத்தை மாற்றினார்கள்.

**பரநிருபசிங்கமும்** மந்திரிமாரிற் பலரும் பெரு முயற்சி செய்யாதிருப்பதைக் கண்டு **சங்கிலி** யிராசன் அவர்களைக் கோபித்துப் **பரநிருபசிங்கத்தின்**

---

1. "பறங்கிகளின் சேனை குறைவுபட்டது."—தி. த. க. பிரதி.

மேற் பெருங்குறை கூறினன். அதற்குப் பரநிருப சிங்கம், " இதுநாம் பயின்றிராத புதுப் போரா யிருப்பதினல் எங்கள் சமத்து இந்த விடத்திலே செல்லாது '' என்றான். அரசன் சிரித்துப் பரி காசம் பண்ணி, "நானும் உங்களைப் போலவே இந்தப் போரை இதற்கு முன் ஒருபோதுங் கண்டறியாதவன். நான் பண்ணும் போரைப் பார்த்து நில்லுங்கள் " என்று சொல்லித் துணை வீரவான்களுடனே பறங்கிச் சேனையிற் புலிகள் பாய்ந்தாற்போற் பாய்ந்து பத்தாம் நாளினன்று 1700 பேருக்கதிகப்பட வெட்டிவிழுத்தினன்.

## பறங்கியரின் தோல்வி

பதினேராம் நாளையிற் போரினன்று 1400[1] சனங்களுஞ் சேனைத் தலைவனும் விழ பறங்கி கள் முரிந்து கெட்டோடினார்கள். [2] சங்கிலியிரா சன் திரும்பிப்போய்ப் பறங்கிக்காரர் கட்டுவித்த கோட்டைக்குள் நுழைந்து காயப்பட்டவர்களும் போருக்கு அற்றையிற்றினம் வராமல் நின்றவர் களுமாகிய அனைவரையுங் கொன்று கோட்டை யையும் இடித்துப் பரவிவிட்டுப் பறங்கிகளின் திரவியங்களையெல்லாம் கொள்ளையிட்டுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினன்.

1. பி-ம்-2400.

2. "சங்கிலியிராசன் பறங்கிச் சேனைகளைத் துரத்திக் கொண்டு போக அவர்கள் காடுகளுக்குள்ளே நுழைந்து மேற்குத் திக்கை நோக்கி ஓடினார்கள். அப்பொழுது''... இ. த. க. பிரதி

## சங்கிலியின் புத்தியற்ற செய்கை

சேனைகள் தங்கள் போர்வெற்றிகொண்ட சந்தோஷத்துக் களியாட்டுக் கொண்டாட்ட மது வெறியில் மூர்க்கங்கொண்டு ஒருவரையொருவர் அடிக்கவும் வையவும் தலைப்பட்டதினாற் பெரும் ஆரவாரம் உண்டாயிற்று. அதை யடக்கும்படி அரசன் ஆட்களை யனுப்பிப் பார்த்தும் அடக்க முடியாதே போனதினால் அரசன் மிகுந்த கோப உக்கிரத்துடனே புறப்பட்டுப்போய் அவர்களுக்குச் சமைத்து வைத்த போசனங்களை யெடுப்பித்து நிலத்துக்குள்ளே வெட்டிப் புதைப்பித்தான். இந்தச் செய்கை சேனைகளுக்கெல்லாம் பெரும் வெறுப்பை யுண்டாக்கிற்று. சேனைத் தலைவன் வீரமாகாளியம்மன் கோவிலிலே தன் நியமம் முடித்துக்கொண்டு நின்றதினால் அவ் விடத்திலில்லை.

## பறங்கிகள் மீண்டும் போருக்கெழுதல்

பறங்கிகள் அபசெயப்பட்டோடினதையுந் தாங்கள் அந்தரங்கத்திற் செய்த சகாயம் வாயாமற் போனதையுங் குறித்துப் பரநிருபசிங்கம் மிகுந்த விசனமடைந்து காக்கைவன்னியனுக்கு ஓலை யனுப்பி இனி வெளியாய் நின்று பறங்கிகளுக்குத் துணைச்செய்யத் தனக்குதவி செய்யும்படி கேட்டனுப்பினான். அந்த வோலை காக்கைவன்னியன்[1] கையிற் சேரமுன்னமே போரில்

1. காக்கு எனும் சேனாதிபதி தன் மாமனான அரசனைத் தேடிப்போய்ப் புத்திகூறியதை மாற்றி காக்கைவன்னியன் அரசனைப் பிடித்துக் கொடுத்தானென்றது

முரிந்தோடிய பறங்கிகள் ஊர்காவற்றுறையிற் போய்க் காக்கைவன்னியனைப் பிடித்து, "உன்னை நம்பி நாங்கள் போரில் ஏற்பட்டு 16000 சனத்துக்கு மேற்படச் சாகக் கொடுத்தோம். நீ எங்களை அழைத்து வந்து யாதொரு சகாயமுஞ் செய்யாமல் உன்பாட்டிலே திரிந்தபடியினாலே தான் இந்த நட்டம் எங்களுக்கு வந்தது. நீ எங்களுக்கு இந்த மோசஞ் செய்ததினால் இப்பொழுது உன்னைக் கொலைசெய்வது எங்கள் தீர்மானம்" என்று நெருங்கினார்கள். அப்படி நெருங்கிய சமயத்திற் **பரநிருபசிங்கம்** அனுப்பிய ஓலை வந்து சேர்ந்தது அவ்வோலையை வாசித்தபொழுது பறங்கிகளுக்கு மனத்திருப்தியுண்டாயிற்று.

## நகரை முற்றுகையிடல்

**காக்கைவன்னியன் பரநிருபசிங்கம்** எழுதியபடியே பறங்கிகளை மறுபடி போருக்கணிவகுத்து வரும்படி சொல்லி நல்லூருக்குப் போனான். இவன் இரவிலே போய்ப் **பரநிருபசிங்கத்தைக்** கண்டு சகல ஆலோசனைகளும் பண்ணிக்கொண்டு மறைந்திருக்க மறுநாட்காலமே பறங்கிகள் பல அணிகளுடனேயும் மேற்கு வாசலை வளைந்து

---

சரித்திர மலைவு. காக்கு எனப் போர்த்துக்கேயர் காட்டுவது இயற்பெயரோ அன்றிப் பட்டப் பெயரோ அறிகிலோம். Gago என்பது அவர் பாஷையில் கொன்னையன் எனப் பொருள்படும் — யா. வை. வி. 144.

மயில்வாகனப் புலவர் பறங்கியர்காலத்து யாழ்ப்பாண அரசர்களைப்பற்றி வரைந்து வைத்தன வெல்லாம் தலைதடுமாற்றமான தப்பறைகளே யன்றிச் சரித்திரமல்ல — யா. வை. வி. பக். 144.

கொண்டார்கள். அந்தச் செய்தியறிந்து சங்கிலி யிராசன் சடுதியிற் சேனைகளைத் திரட்டி மேற்கு வாசலிற் போனான். சேனைகள் அணியாய் நிற்கத் துணைச்சேனையுடனே அரசன் முன்னணியில் நின்றான்.

## காக்கைவன்னியனது நம்பிக்கைத் துரோகம்

அந்த வேளையிற் காக்கைவன்னியனும் சேனைகளுக்குள் நுழைந்து சமீபத்தில் நின்றான். பரநிருபசிங்கம் தான் காக்கைவன்னியனுடன் சொல்லியிருந்தபடியே தூரத்தில் வாய்ச்சமர்த்துள்ள ஒருவனை நிற்கவைத்து வேறொருவனைச் சேனாபதியிடத்தில் அனுப்பி, "இந்தப் போரைக்குறித்து உமக்கோர் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை ஒருவன் தேடிக்கொண்டு நிற்கிறான்" என்றறிவித்தான். சேனாபதி அந்தச் செய்தியறிய வெகு ஆவலுடன் விரைந்துபோனான். அப்பொழுது அங்கே நின்றவன் சேனாபதியின் மனதைக் கவரத்தக்க பேச்சுகளை வருவித்துப் பேசிச் சேனாபதியைத் தன் வாய்ச் சாமர்த்தியத்தினால் தடுத்து நிற்க, காக்கைவன்னியன் தனது உடையை மாற்றிச் சுயகோலத்துடன் அரசன்முன் வெளிப்பட்டான். வன்னியனைக் கண்டவுடன் அரசன் எதிர்கொண்டோடி, "இப்பொழுதுதான் உன் மனதில் என்மேற் றயவு பிறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயோ?" என்றுசொல்லி அவனை முத்தமிட்டான். வன்னியனும் அரசனைக் கட்டி முத்தமிடுபவன்போற் காட்டிப் பிடித்தபிடி விடாமற் பிடித்துக்கொண்டான். வன்னியன் பிடித்த

பிடி விடாமல் நிற்கப் பறங்கிப் படைகள் அரசன் மேல் ஓடிவந்தார்கள். பறங்கி வீரர்கள் ஓடிவருவதைக் கண்டு தமிழ்ச் சேனைவீரர் ஆயுதங்களை எடுத்துப் போராட முயன்றார்கள். அப்படியவர்கள் முயல்வதைக் கண்டு, "சேனைபதியின் உத்தரவின்றி ஒருவரும் ஆயுதந் தொட வொண்ணாது" என்று பரநிருபசிங்கம் தடைபண்ணினான். அப்பொழுது சேனைவீரர்கள், "ஆயுதமெடுக்க உத்தரவில்லையே! உத்தரவில்லையே!!" என்று சத்தமிட்டுக்கொண்டு அரசனையும் வன்னியனையும் அந்த நிலையில்விட்டு ஓடிப்போனார்கள். பறங்கிகள் யாதொரு தடையுமின்றிச் சங்கிலியிராசனைப் பிடித்து விலங்கிட்டுச் சேனைபதியைத் தொடர்ந்து பிடித்து வாளினாற் கொலைசெய்து கோட்டை கோபுரங்களையெல்லாம் ஒப்புக்கொண்டார்கள்[1].

## பழையவரசன் மரணம்

இந்தச் செய்தியை யறிந்தபோதே பரராசசேகர மகாராசன் கையில் வாளுடனே வன்னியிற் காட்டுக் கோடிப்போனான். "அவ்வரசனைப் பிடித்துத் தருபவனுக்கு 25,000 இறைசால் உபகாரம் தருவோம்," என்று பறங்கிகள் கூறினார்கள். அதை யறிந்த சங்கிலியின் மந்திரிகளில் ஒருவனாகிய பிராமணன், அரசன் ஓடிப்போன குறிப்பையறிந்திருந்தவன் இளநீரும் எலுமிச்சம்பழமுங்கொண்டு வன்னியிற் காட்டினுள் நுழைந்து அங்குமிங்குந்

1. இதிற் சொல்லப்பட்ட சங்கிலி பாலிய வரசனுக்குப் பரிபாலகனாக விருந்தவன். இப்போர் கி. பி. 1620-ல் நடந்தது.

தேடிக்கொண்டு வருகையில் அரசன்கண்டு எதிராக ஓடிவந்து உபசாரவார்த்தை சொல்லப் பார்ப்பான் இளநீரைத் திறந்து அரசன் கையில் வாளை வாங்கி எலுமிச்சம்பழத்தை அறுத்து அதற்குட் பிழிந்து குடிக்கக் கொடுத்தான். அரசன் குனிந்து நின்று குடிக்கும்பொழுது பிராமணன் அவன் தலையை வாளினால் வெட்டிக்கொண்டுவந்து பறங்கிகள் கையிற் கொடுத்தான். "இராசனை உயிருடன் பிடித்துத் தருபவனுக்கு உபகாரந் தருவோம்" என்று நாங்கள் கூறியிருக்க, "நீ இவ்வரசனைக் கொன்றது மன்றி அவன் உனக்குச் செய்த நன்றியையுங் கொன்றாய். ஆதலால் உன்னையுங் கொலைசெய்வதே நியாயம்," என்றுசொல்லி அவனையுங் கொலைசெய்தார்கள்.

## சங்கிலி மரணம்

பறங்கி[1] இராசன் சங்கிலி[2] யிராசனை நீதாசனத்தின் முன் னிறுத்தி விசாரணைசெய்து அவன்

---

1. பி-ம். — பறங்கிகள்.

2. இவ்வரசனைக் கொலைசெய்ததாகக் குறிப்பிட்டமை சரித்திர மலைவு.

கி. பி. 1519 தொடக்கம் செகராசசேகரன் எனும் பட்டத்துப் பெயருடன் ஆண்ட சங்கிலிக்கும் கி. பி. 1615-ல் ஆண்ட சங்கிலி குமாரனுக்கும் வேற்றுமை யறியாது இவ்விருவருடையசெயல்களையும் மலைவுதர வுரைந்துள்ளார்.

புவிராச பண்டாரம் பறங்கிச் சேனுதிபதி சமூகத்திற் கொண்டுவரப்பட்டு இராசதுரோகத்தின் நிமித்தம் தலையிழந்து சாக, அவனுக்கு ஓர்கால் நூற்றாண்டுக்கு முன் இறந்தொழிந்தவனை சங்கிலியே வெட்டுண்டான் என்றதும் அச் சங்கிலியின் அரசையும் இவன் அரசையும் ஒன்றாக்கிக் கூறியதும் ஒரு மாறுபாடு. யா. வை. வி. பக். — 143.

முடிசூட்டி அரசாட்சி செய்யாதவனுதலாலும், பிதாவுயிருடன் இருக்கப் பிதாவின் சம்மதத்துக்கு விரோதமாகக் கலகம்பண்ணி முடிக்குரிய ராசகுமாரர்களை அநியாயமாகக் கொலைசெய்த பாதகனுதலாலும், நீதிதவறிக் கொடுமைகள் அநேகஞ் செய்து குடிகளை வருத்தியவனுதலாலும் அவனைக் கொலைத் தீர்ப்புக்குள்ளாக்கிச் சமீபத்திலிருந்த ஒரு கோவில் வாசலிலே நிறுத்திக் கொலை செய்தார்கள். சங்கிலி கொலையுண்டானென்பதைக் கேட்டபோதே அவன் மனைவி தற்கொலைசெய்திறந்தாள். அவன் பிள்ளைகளைப் பறங்கிமன்னன் தரங்கம்பாடிக் கனுப்பிவைத்துக் காக்கைவன்னியனுக்குச் செய்யவேண்டிய சகல உபசாரங்களுஞ் செய்தனுப்பி விட்டான்.

## நல்லூர்க் கோட்டையைப் பறங்கியர் அழித்தல்

இப்படியே காலயுத்திவூ ஆனிமீ யாழ்ப்பாணம் பறங்கியரசாட்சிக் குள்ளாயிற்று. பறங்கிகள் அரசாட்சியை யொப்புக்கொண்டு நல்லூரிற்றனே யிருந்துகொண்டு தங்கள் கருமங்களை நடத்திப் பிறக்கோட்டை மதில்களை இடிப்பித்து அக்கற்களைக் கொண்டுபோய்க் கடலோரத்திலே சங்கிலியிராசன் இடித்துப் பரவிவிட்ட தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டையாகக்கட்டி அதன் கீழ்ப்புறத்திலே வீடுகளையும் அரசாட்சி மண்டபங்களையுங் கட்டுவித்துச் சுற்றுப்புறங்களிலுள்ள காடுகளை வெட்டுவித்து குடிகள் சமீபத்தில் வீடு கட்டி வந்திருக்கும்படி வசதியும்பண்ணினூர்கள்.

## இராசத் துரோகிகட்கு உபகாரம்

இவ்வரசாட்சி தங்களுக்குக் கிடைக்கும்படி பரநிருபசிங்கம் செய்த உதவிக்காக அவனுக்குச் சொந்தமாக ஏழு கிராமங்களுடனே நல்லூர், மாதகலென்னும் இரண்டு கிராமங்களையும் பெருந் தொகையான பணத்தையும் முன்னிருந்தபடியே மந்திரி யுத்தியோகத்தையுங் கொடுத்து அவன் குமாரன் பரராசசிங்கத்துக்குக் கிராமவதிகாரத்தை யுங் கொடுத்துப் பறங்கிகள் அவ்விருவரையும் கனப்படுத்தி வந்தார்கள். பரநிருபசிங்கத்தையும் மகனையும் பறங்கிகள் வசப்படுத்திக் கொண்டபோதே பறங்கிகள் அரசாட்சி பெலத்துக்கொண்டது.

## சைவசமயத்தவர்க் கிடர் விளைத்தல்

அதன்பின் பறங்கிகள் சமயக் காரியங்களிற் கையிட்டுச் சிவாலயங்களை யெல்லாம் இடிப்பித் துச் சத்தியவேதத்தையே பரப்பிக்கொண்டார் கள். தமிழரசாட்சியாரால் நல்லூரிலுங் கீரிமலைச் சார்பிலுங் கட்டியிருந்த கோவில்கள் மாத்திரம் பரநிருபசிங்கம் இருக்குமளவும் வழங்கிவந்தபடியே வழங்கலாமென்று உத்தரவு கிடைத்தது.

## பரநிருபசிங்கனின் மரணம்

பறங்கி யரசாட்சி தொடங்கி ஒன்பதாம் வரு டத்திலே பரநிருபசிங்கம் சிவபதமடைந்தான். பறங் கிகள் அவன் மரணத்துக்காகத் துக்கங் கொண் டாடி அவன் பிரேதத்துக்குச் செய்யவேண்டிய முறைப்படி சடங்குகள் எல்லாஞ் செய்வித்துத்

தகனம்பண்ண இடங் கொடுத்தார்கள். அதன் பின் பறங்கிகள் பரராசசிங்கத்தை ஆலோசனைத் தலைவனுக்கி சங்கிலியிராசன் எழுதிவைத்தபடியே பரராசசிங்கமுதலி யென்னும் அவன் குலத்துக்கு மடப்பள்ளி யென்னும் பட்டஞ்சூட்டி அவனையும் பிதாவை நடத்தினதுபோற் கனப்படுத்தி நடத்தி வந்தார்கள்.

பரராசசிங்கமுதலிக்கு மரணகாலஞ் சமீபித்த பொழுது அவன் தன் குமாரர் ஏழுபேரையும் வரவழைத்துத் தனது ஆஸ்திகளைப் பங்கிட்டு நல்லூரையுங் கள்ளியங்காட்டையும் அழகாண்மை வல்லிமுதலி யென்னும் மகனுக்காக்கி அவனை நல்லூரிலுள்ள தன் மாளிகையில் இருத்தினன். தனபாலசிங்கமுதலி யென்னுங் குமாரனுக்கு மல்லாகத்தைக்கொடுத்து அதிலிருத்தினன். வெற்றிவேலாயுதமுதலிக்குச் சண்டிருப்பாயைக் கொடுத்தான். விசயதேவேந்திரமுதலிக்கு அராலியைக் கொடுத்துத் திட்வீரசிங்கமுதலிக்கு அச்சுவேலியைக் கொடுத்தான். சந்திரசேகரமாப்பாணசிங்க முதலிக்கு உடுப்பிட்டியைக் கொடுத்தான். இராயரத்தின முதலிக்குக் கச்சாயைக் கொடுத்தான். இவ் வேழு ஆண்பிள்ளைகளுமன்றி வேதவல்லியார் என்னும் ஒரு மகளு மிருந்தாள். அவளுக்கு வேளாளர் குலத்தில் விவாகஞ் செய்வித்து மாதகலென்னும் ஊரைக் கொடுத்தான்.

## சைவர்களுக்கு இடர் விளைத்தல்

பரராசசிங்கமுதலி இறந்தபின் பறங்கிக்காரர் தாங்கள் இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாம்

இடிப்பித்தார்கள். அப்பொழுது பரசுபாணி ஐயரென்னும்பிராமணன் கீரிமலைச்சாரலிலுள்ளதேவாலயங்களின் தட்டு முட்டுக்களையும் விக்கிரகங்களையும் கிணறுகளிற்போட்டு மூடிவைத்தான். கந்தசாமிகோவிற்பணிவிடைக்காரனுயிருந்த (சங்கிலி என்னும்) பண்டாரம்[1] அத்திசையில் ஆலயங்களைக் குறித்த (பூதபவுஷக) சம்பவங்களும் ஒழுங்குத்திட்டங்களும் அடங்கிய செப்புப் பட்டயத்தைக் கொண்டு மட்டக்களப்புக் கோடிப்போனன். பரராசசிங்கமுதலி மரணமடைந்தபின் கெங்காதரஐயர் வமிசத்துப் பிராமணக் குடிகள் நல்லூரைவிட்டு நீர்வேலியிலும் வடமிருட்சியிலும் போய்க் குடியிருந்தார்கள்.

## மாதாக்கரை நியமித்தல்[2]

அக்காலத்திலே பறங்கிக்காரர் தமிழரசரைப் போலவே தாங்களும் மாதாக்கர்களை வைத்து நடத்தக் கருதி இராயரத்தினமுதலி மகன் சோழசிங்கச்சேனதிராயமுதலியைக் கீழ்ப்பற்று மாதாக்கனுகவும், விசயதெய்வேந்திரமுதலியை மேல்பற்று மாதாக்கனுகவும், அழகாண்மைவல்லமுதலி மகன் இராசவல்லபமுதலியைத் தென்பற்றுக்கு மாதாக்கனுகவும், திடவீரசிங்கமுதலி மகன் குமாரசூரியமுதலியை வடபற்றுக்கு மாதாக்கனுகவும் வைத்து அரசாட்சி செலுத்திவந்தார்கள்.

---

1. பி-ம். (அ) "பண்டாரம் என்பவன்." (ஆ) "குமாரசாமி என்னும் பண்டாரம்".

2. கைலாயமாலையிற் கண்ட செய்தியைப் பின்பற்றியது போலும்.

அக்காலத்திலே காரைக்கால் முதலான பல இடங்களிலிருந்து பல குடிகள் வந்து வட்டுக் கோட்டையிலுங் காரைதீவு முதலிய தீவுகளிலும் குடியேறினார்கள்.

முதன் முதற் பறங்கிக்காரர் சாலிவாகன சகாப்தம்[1] 1428-ம் வருஷமாகிய பரிதாபி வருஷத்திலே இலங்கையில்வந்து வியாபாரம்பண்ணப் பராக்கிரமவாகு மகாராசனிடத்தில் உத்தரவுபெற்று வரத்துப் போக்கா யிருந்தார்கள். கர வருஷம்[2] ஆடி மாதத்தில் அப்பொழுது சவேரியார் முதலான பறங்கிக்காரர்களாற் சத்தியவேதத்திற் சேர்ந்த அறுநூறுவீட்டுக்காரரையும் சங்கிலியிராசன் கொலை செய்வித்தது மன்மத வருஷம் வைகாசி மாதத்திலே[3]. பரநிருபசிங்கத்தின் வழியாய்ச் சவேரியாரென்னுஞ் சத்தியவேதக்குரு சங்கிலி யிராசனுடன் கொண்டாட்டமானர். சகாத்தம் 1503 சுபகிருது வருஷத்திலே பறங்கிக்காரர் வீடுகட்ட உத்தரவு பெற்றது.[4]

1. ஜயவர்த்தன கோட்டையில் தர்மபராக்கிரமவாகு ஆண்டகாலத்தில் (1505 — 1509) போர்த்துக்கேயர் கப்பல் ஒன்று இலங்கைக்கரையை யடைந்தது. இக் கப்பற் றலைவரின் பெயர் Don Lourence de Almeida என்பது. இதிற் குறிப்பிட்ட வருஷம் இரத்தாக்ஷி வருஷம் போலும்.

2. சுபகிருது வருஷம் போலும்.

3. பி-ம். சோபகிருது வருஷம் கி. பி. (1543—44).

4. உலாந்தேசக் கப்பலொன்று கி. பி. 1602 ம் ஹு ஆனி மாதம் மட்டக்களப்புத் துறைமுகத்தை அடைந்தது. கப்பற்படைத்தலைவன் Joris Van Spilbergen. ஆகையால் இவ்வருஷம் சுபகிருது வருஷமாயிருத்தல்

## உலாந்தேசர்

இரத்தாக்ஷிவருஷம் தைமாதத்தில்[1] உலாந்தேசர் இலங்கைக்கு வந்து கண்டிநாட்டிற் சேர்ந்து விமல தர்மராசனுடன் சிநேகிதமாகிப் படைத்துணையா வோமென்று சொல்ல, அவன் அவர்களை யணைத்துக் கொண்டாட்டமானான். கண்டியிலிருந்து துரத்தப்பட்ட இராசனின் மகளைப் பறங்கிகள் மன்னாரில்வைத்து வளர்த்து அவளுக்குத் தோன் கத்திருனா என்று பேரிட்டிருந்தார்கள். மற்ற வருஷத்திலே பறங்கிகள் அத் தோன்கத்திரு னாளுக்குக் கண்டி யரசாட்சியைப் பிடித்துக் கொடுப்போமென்று நெருங்கினபோது விமலதரு மராசன் உலாந்தேசரைத் துணையாகக் கொண்டு பறங்கிப் படைகளை முறியவடித்துத் துரத்தி தோன்கத்திருனாளை விவாகம்பண்ணிக்கொண்டான்[2]. அட்சய வருஷத்திலே உலாந்தேசு கப்பற் சேனாபதியும்[3] சேனைகளிற் பலரும் மதுவெறிகொண்டு

---

வேண்டும். விமலதர்மராசனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 1592 — 1604.

Marcellus de Boschowar என்னும் டச்சுக்காரன் 8-3-1612-ல் கண்டியை அடைந்தான். இவனுடன் அரசன் உடன்படிக்கை செய்திருந்தும் சேனரத்துக்கு படைத் துணைபுரிய எடுத்த முயற்சி பலிக்கவில்லை.

1. சங்கிலி போர்த்துக்கேயரைத் தோல்வியுறச் செய்தது. கி. பி. 1560 ல். எனவே (சகாத்தம் 1503) என்பது இதன்கண் பொருத்தமில்லாதிருக்கின்றது.

2. இச்சம்பவம் கி. பி. 1594-ல் நடந்ததாகும்.

3. இங்கு சொல்லப்பட்ட கப்பற் சேனாபதி சிபால்ட் தேவேர்ட் என்னும் ஒல்லாந்தவனாவன். இச்சம்பவம் கி. பி. 1603 ல் நடந்ததாகும். ஆகையால் அட்சய வருஷம் என்பது பொருத்தமற்றது.

விமலதருமராசனை நிந்தனை செய்தபொழுது அவ்வரசன் அவர்க ளனைவரையுங் கொலை செய்தான். அப்பொழுது உலாந்தேசர் அவ்விடத்தை விட்டுக் கொழும்புக்குச் சமீபமான இடத்திலே போய் ஒரு கோட்டைகட்ட ஆரம்பித்தார்கள்[1]. அந்த முயற்சியைப் பறங்கிகள் குழப்பிவிட்டதினால் அவர்கள் அவ்விடத்தைவிட்டு இலங்கையின் வடதிசையில் வந்து பொறுத்துக்கொண்டார்கள்.

## தென்மார்க்கர் (Danes)

சகாத்தம் 1533-ம் வருஷத்திலே தென்மார்க்கர் கப்பலேறி இலங்கையில் வந்துசேர்ந்து இராசாக்களுடன் கொண்டாட்டமாகவும் படைத்துணை செய்யவும் வருவோமென்றார்கள்[2]. அரசன் அதற்கு உடன்படாமையால் அவர்கள் திரும்பித் தங்கள் நாட்டிற்குப் போய்விட்டார்கள். இது நடந்து நாலு வருஷத்தின் பின் விளம்பி வருஷத்திலே[3] பறங்கிக்காரர் யாழ்ப்பாணக் கோட்டை கட்டத் தொடங்கினார்கள். அதற்கு மூன்று வருஷத்தின் பின் திரிகோணமலையிலும் மட்டக்களப்

1. இச்சம்பவம் பின்சொல்லப்படும் டென்மார்க்கரைக் கருதும்.

2. டென்மார்க்கர் கண்டிக்கு வந்தது கி. பி. 1620-ல் ஆகும். சகாப்தம் 1533-ல் அன்று. கண்டியரசன் அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டு திருக்கோணமலையிற் கோட்டைகட்ட இடங் கொடுத்தான். ஆனால் பறங்கிகள் அவர்களைத் துரத்திவிட்டார்கள்.

3. விளம்பி வருடத்தில் பறங்கிகள் யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்களென்றும், காலயுத்தியில் ஒல்லாந்தர் பிடித்தார்களென்றும் மயில்வாகனப் புலவர் மாற்றி எழுதி

பிலும் கோட்டைகளைக் கட்டினூர்கள்[1]. பராபவ வருஷத்தில்[2] பறங்கிகள் யாழ்ப்பாணத்துக் கற் கோட்டையைக் கட்டி முடித்தார்கள். அடுத்த வருஷங்களில் திரிகோணமலை, மட்டக்களப்பு, நீர் கொழும்பு முதலான இடங்களைப் பறங்கிகள் கையிலிருந்து உலாந்தேசர் பிடித்து[3] நீர்கொழும் பைப் பறிகொடுத்தார்கள்[4].

சய வருஷம் கார்த்திகை மீ 31-ந் தினத் தன்று[5] யாழ்ப்பாணத் தேசாதிபதியா யிருந்த

---

விட்டனர். வைபவமாலைக் கைப்பிரதியொன்றிற் காணப் படும் செய்யுள்களில்.

"பெருமையுடன் காலயுத்தி ஆனி மாதம்
பிலிப்பனெனும் பறங்கிகிளை யரசை யாண்டு"
"உதிக்கின்ற விளம்பிதனி லானி மாச
மொன்பதினி லுலகுபுகழ் உலாந்தே சண்ணல்

—Ancient Jaffna p. 375

என வருதலால் அவ்விரு ஐரோப்பிய சாதியாரும் யாழ்ப்பா ணத்தைப் பிடித்த காலம் நன்ருய்த் தெரிந்திருந்தது. கால யுத்தி கி. பி 1618—1619-க்குச் சரி, விளம்பிஞ கி. பி. 1658-59—க்குச் சரி; பிடித்த காலமும் அதுவே. பறங்கிகள் கோட்டை கட்டத் தொடங்கினது கி. பி. 1620 ல் ஆகும்.

1 திருக்கோணமலைக் கோட்டை கி. பி. 1624 லும் மட்டக்களப்புக் கோட்டை கி. பி 1628 லுங் கட்டப்பட்டன.

2. பிரபவவருஷமாயிருக்கலாம் அவ்வருடம் கி. பி. 1627 க்குச் சரி.

3. மட்டக்களப்பைக் கி. பி. 1638 லும் திருக்கோண மலையைக் கி. பி 1639 லும், நீர்கொழும்பை 1640 லும் ஒல்லாந்தர் தம்வசப்படுத்தினுர்கள்.

4. நீர்கொழும்பை ஜனவரிமாசத்திற் பிடித்து நொவெம்பர் மாசத்திற் பறிகொடுத்தார்கள்.

5. கி. பி. 1654 க்குச் சமம். ஆயின் இங்கிகழ்ச்சி கி. பி 1656-ல் ஆதலின், ஒருவருடங்கழிந்த துர்முகி வருடம் போலும். இவனே ஊராத்துறையிலும் ஒரு கோட்டை கட்டியவனுவான்.

அந்தோனிஅமிருல் என்பவன் மன்னாரிலிருந்து கொழும்புக்குப் போனபோது உலாந்தேசர் அவனைப் பிடித்துச் சிறைப்படுத்தினார்கள்.

## மன்னாரைப் பிடித்தல்

காலயுத்தி [1] வருஷம் மாசிமீ 1-ந் தேதியில் உலாந்தேசர் மன்னாரைப் பிடித்துக்கொண்டார்கள். பங்குனிமீ தொடங்கி யாழ்ப்பாணத்தைச் சூழவரப் பலவிடங்களிலும் சேனைத் திரள்களை நிறுத்தி முற்றிக்கை போட்டார்கள். அந்த மாசக் கடைசியில் ஊர்காவற்றுறை வழியாகக் காரை தீவிலும் இறங்கினார்கள் சிலகாலத்துக்கு முன்னே உலந்தகாவல்முதலி யென்னுமோ ருயர்குல வேளாளன் சோழநாட்டி லிருந்து இராசகலகத்திலேற் பட்டு இராசதண்டனைக்குத் தப்பி யொளித்தோடி வந்து காரைதீவிலே களபூமி யென்னும் இடத்திலே பெருஞ் செல்வனா யிருந்தான் அந்த உலகு காவலமுதலி அவ்விடத்தில் வந்திறங்கின உலாந்தேசருக்குச் சகல வசதியுங் கொடுத் தனுசரித்திருந்தான். அப்படி யிருக்கையில் உலாந்தேசர் இராச்சிய வளப்பங்களைக் குறித்து அவனிடத்திற் கேட்டுக்கொண்டு யாழ்ப்பாணத்துக் கோட்டையைப் பிடிக்கப்போய் நுழைவதற்கு உபாய

1. மன்னாரும் யாழ்ப்பாணமும் ஒரே ஆண்டில் ஒல்லாந்தராற் கைப்பற்றப்பட்டன எனவே முன்னர்க் குறிப்பிட்டவாறு யாழ்ப்பாணம் இவர்கள் ஆளுகைக்குட்பட்டது கி. பி. 1658ல். ஏவிளம்பி வருஷக் கடைசிப் பகுதியில் யாழ்ப்பாணம் வந்து விளம்பி வருஷத்தில் ஆனி மாதம் வெற்றிபெற்றனர். (21st June 1658) சகாப்தம் 1571ல் அன்று; 1581ல்

மென்ன வென்று கேட்டார்கள். அப்பொழுது உலகுகாவலமுதலி[1] அவர்களை நோக்கி, "நான் சொல்லுந் தினத்தில் என்னுடன் வருவீர்களாகில் உங்களை வசதியாகக் கொண்டுபோய் விடுவேன்" என்றான். அவன் சொற்படி உலாந்தேசர் ஒருப்பட்டுத் தங்கள் சேனைகளையும் அணியங்களையும் அவ்விடங்களிலே திட்டம்பண்ணி யிருந்தார்கள். இப்படி மூன்றரைமாதக் காலம் இருந்தபின்[2], உலாந்தேசர் ஒரு நாளிரவிலே பறங்கிக்காரர் காவல் காத்து விழிப்பாயிருக்கும் நோக்கத்தினால் நடன சங்கீத விநோதரா யிருந்த சமயத்தில் அர்த்தசாம வேளையில் உலகுகாவலமுதலி வழிகாட்டத் திறந்திருந்த கள்ளவாசல் வழியாக நுழைந்துபோய்க் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்கள். பொழுது விடிந்தபின் கடலிலுங் கடலோரத்திலும் அநேக பறங்கிப் பிணங்கள் கிடப்பதையும் உலாந்தேசர் பெருங் களிப்புக் கொண்டாடுவதையுங் கண்டவர் திகைப்படைந்தார்கள். இப்படி சாலிவாகன சகாத்தம் 1571-ம் ஆண்டு[3] ஏவிளம்பி வருஷம்[4] ஆனி மீ க-ந் தினத்திலே யாழ்ப்பாணம் உலாந்தேசர் ஆட்சியின் கீழாயிற்று.

---

1 இவர் இவ்வளவு எளிதாகப் பிடித்துக் கொடுத்தார் என்றமை சரித்திரப் பொருத்தமில் கூற்றும்.

2. ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையை 3 மாசம் முற்றுகையிட்டே பிடித்தார்கள்.

3. 84-ம் பக்கம் 13 ம் அடிக்குறிப்பினைப் பார்க்க.

4. பி-ம். விளம்பிவருஷம் புரட்டாதிமாதத்தில். காலவாராய்ச்சியில் திறமையற்ற இந்நூலாசிரியர் சிற்சிலஇடங்களில் வருஷங்களையும் சரியாகக் குறிப்பிட்டுவிடுகின்றார்.

அரசாட்சி ஒப்புக்கொண்ட உடனே [1] உலாந்தேசர் முதன் முதல் இறப்பிறமாது வேதத்தை நுழைவித்தார்கள்.

## [2] பூதத்தம்பியும் அந்திராசியும்

**கயிலாயவன்னியன்** சகோதரியை விவாகஞ் செய்திருந்த **பூதத்தம்பிமுதலி**யும் **மனுவல் அந்திராசி முதலி** யென்னுங் குருகுல வலைஞனும உலாந்தேச அரசாட்சியாருக்கு அரசிறை லிகித முதலிமாரானார்கள். தேசாதிபதி **அந்திராசிமுதலி**க்கு மகா நண்பனாயிருந்தான். தேசாதிபதியின் தம்பி **பூதத்தம்பி முதலி**க்குப் பிராண சிநேகனாயிருந்தான். ஒருநாட் **பூதத்தம்பிமுதலி** **அந்திராசிமுதலி**யைத் தன் வீட்

---

1. "உலாந்தேசரசாட்சியார் யாழ்ப்பாணத்தில்" — தி. த. க. பிரதி.

2. யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கைப்பட்டுப் பல நாட்கள் கழியுமுன், ஒல்லாந்தரைக் கொன்று வேரறத் தொலைக்கவேண்டு மென்னுமோர் அந்தரங்க சூழ்ச்சி யாழ்ப்பாணத்தாரிட மிருப்பதாக மனுவேல் அந்திரேடா வென்னுஞ் சிங்கள முதலி கண்டு வெளிப்படுத்தினன். இச் சூழ்ச்சித் தலைவரான பதினன்குபேர் கொலைசெய்யப் பட்டனர். அவர்களுள் டொன் லூவிஸ் பூதத்தம்பியெனும் யாழ்ப்பாண முதலியாரும் இச் சதியாலோசனைக் கூட்டத் தலைவராயிருந்தனர்....மயில்வாகனப் புலவர் கர்ண பரம்பரையை ஆதாரமாகக்கொண்டே பூதத்தம்பி கதையை எழுதியிருக்கவேண்டும். யா. ச. பக். 171–172.

இக்கதையை ஸ்ரீமான் அ. முத்துத்தம்பிப்பிள்ளை யவர்கள் தாம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் மிகவும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். (பக். 101-54).

**ஆயின்** யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியரும், Notes on Jaffna எனும் நூலினாசிரியரும் இவ்வரலாற்றை மறுத்துத் தம் மதத்துக் கேற்பக் கதையினை விவரித்திருக்கின்றனர். இங்ஙனம் இவ்வரலாற்றைப் பற்றி இருவேறு கொள்கைகளுள.

டிற் கழைத்து விருந்திட்டான். அவ்விருந்திலே பூதத்தம்பிமுதலி மனைவியின் பேரழகைக் கண்டு அந்திராசிமுதலி விகார மயக்கங் கொண்டவனாய் வீட்டுக்குத் திரும்பிப்போய் மறுநாள் ஓர் ஆள் அனுப்பி, "நீ என்னுடனே சிநேக இணக்கமாயிருக்கச் சம்மதித்தால் நான் உனக்குக் கன திரவியங்களும் நீ விரும்பும் எந்தெந்தப் பொருள்களும் தருவேன்" என்று கேட்டனுப்ப, அவள் அந்திராசிமுதலியையும் வைது பேசித் தூதுவந்த ஆளையுந் துடைப்பத்தினால் அடித்துத் துரத்திவிட்டாள். அந்தக் காரணத்தினால் [1] அந்திராசிமுதலி, "அரசாட்சி வேலைக்கு மரங்கள் அழைப்பிக்கக் கச்சாய்த் துறைமுகத்துக்குக் கட்டளை அனுப்ப வேண்டும்; இதற்குக் கையொப்பம் வைக்க," வென்று வெள்ளைப் பத்திரத்திலே பூதத்தம்பிமுதலியைக்கொண்டு கையொப்பமிடுவித்து, அதிலே கோட்டை பிடிக்க இன்னின்ன உதவிகள்செய்வேனென்று பறங்கிக்காரருக்கு பூதத்தம்பி எழுதினதாக வெழுதி அதைப் பூதத்தம்பிமுதலி கொடுத்தனுப்பக் கொண்டுபோன ஆளிடத்திற் பறித்தேனென்று அவ்வந்திராசிமுதலி தேசாதிபதி கையிற் கொடுத்தான். தேசாதிபதி விசாரணைசெய்து அது பொய்க் குற்றச்சாட்டென் றறிந்தும் அந்திராசியின் வேண்டுதலுக்காகப் பூதத்தம்பிமுதலியைக் கொலை செய்வித்தான். தேசாதிபதியின் தம்பி [2]

---

1. "அந்திராசிமுதலிக்கும் பூதத்தம்பிமுதலிக்கும் பகை யுண்டுபட்டுக்கொண்டது. ஒரு தினத்திலே"—தி. த க. பிரதி.

2. "அவ்வேளையிற்"—தி. த. க. பிரதி.

கடற்கோட்டை கட்டுவித்துக்கொண்டு ஊர்காவற்றுறையில் இருந்தான்[1]. விளம்பி வருடம் புரட்டாதி மாதத்திலே இக்கொலையைக் குறித்துக் கைலாயவன்னியன் கொழும்பேறி வழக்காடின போது தேசாதிபதியையும் அந்திராசியையும் வரும்படி கட்டளை வந்தது. அவர்கள் போம்பொழுது தேசாதிபதி கடலில் விழுந்திறந்தான். அந்திராசி முதலியை யானையிடறிக் கொன்றது[2].

இன்னமும் அவ்வருஷத்திலே ஊர்காவற்றுறையிலே வெள்ளப் பெருக்கினால் வெகு மனிதரும் மிருகங்களும் இறந்துபோனார்கள்.

உலாந்தேசர் உலகுகாவலமுதலிக்குக் கன திரவியங்களை யுபகாரமாகக் கொடுத்து மரபாலுயர்ந்த முதலியின் சகோதரியை விவாகஞ் செய்வித்துக் கொடுத்து அவனுக்கு வாசலுத்தியோகமும் மரபாலுயர்ந்தமுதலிக்கு முன்னிருந்தபடி திரவிய சாலைத் தலைமையையுங் கொடுத்து உலகுகாவல முதலி இறந்தபின் அவன் மகன் இராயதுங்க முதலிக்கு மரபாலுயர்ந்தமுதலியின் குமாரத்திகள் ஏழுபேரில் ஒருத்தியை விவாகஞ்செய்வித்து அவன்

---

1. பி–ம். இருந்தமையாற் றன் சிநேகிதனுக்கு உற்ற விடத் துதவி செய்யக் கூடாதவனா யிருந்தான்.

2. பூதத்தம்பி கொலையுண்டது 1658-ம் ஷு செப்ரெம்பர் மாதத்தில் எனவும், அந்திராசி 1659-ம் ஆண்டிலும் உயிருடன் இருந்தமை டச்சுத் தேசாதிபதிகளின் அறிக்கைப்பத்திரங்களால் அறியக்கிடக்கின்றமையால் அவன் கொழும்புக்குப் போகும் வழியில் இறந்தான் என்பது பொருத்தமற்ற கூற்றெனவும் சில சரித்திராசிரியர் கருதுகின்றனர். இஃது இன்னும் ஆராயத்தக்கது.

பிதா நடத்திவந்த உத்தியோகத்தையே அவனுக்குக் கொடுத்தார்கள். மரபாலுயர்ந்தமுதலி இறந்தபின் அவன் பெண்மக்கள் ஏழுபேரில் ஒருத்தியை விவாகஞ்செய்த பூலோகமுதலி யென்பவனுக்குத் திரவியசாலைத் தலைமையையும் வேறு சில தத்துவங்களையும் கொடுத்தார்கள்.

### சோனகர்

அக்காலத்திலே சந்தச்சாய்பு என்பவனால் மகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வமிசத்தவர்களான சில சோனகக் குடிகள் காயில் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னுமிடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக்கொண்டு தாங்களிருந்ததென மிருசுவிலுக்கு உசனென்று பேருமிட்டார்கள். சிலகாலம் அவ்விடத்தி லிருந்து அவ்விடம் வசதிப்படாததினால் அந்தச் சோனகக் குடிகள் அவ்விடத்தை விட்டு நல்லூரிற் கந்தசுவாமி கோவிலிருந்த இடத்திலே வந்து குடியிருந்தார்கள். சோனகர் அதிலே குடியிருந்தால் கந்தசுவாமி கோவில் கட்டவருங் காலத்திற் றடையாயிருக்கு மென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களை அவ்விடத்தை விட்டுப் புறப்படுத்தத் தெண்டித்துப் பார்த்துங் கூடாமற் போயிற்று. "அந்த நிலங்களுக்கு அதிக விலை தருவோம். எங்களுக்கு விற்று விடுங்கள்" என்றுங் கேட்டுப் பார்த்தார்கள். சோனகர் அதற்குஞ் சம்மதிக்கவில்லை. யாதொரு இணக்கத்துக்குஞ் சோனகர் சம்மதியாதே போனதினால் அந்தத் தமிழர் பன்றி யிறைச்சியைக் கொண்டுபோய் அவர்கள்

தண்ணீர் குடிக்கும் கிணறுகளிற் போடுவித்தார்கள். பன்றி யிறைச்சியைக் கண்டவுடனே சோனகர் அழுது புலம்பிப் பசி பட்டினியாய்க் கிடந்து ஆற்றுமல் ஈற்றிலே தமிழருடனே தங்கள் பெருநாட்களிலே தாங்கள் வந்து தங்கள் சமய வழிபாடுசெய்யத் தடைபண்ணு திருப்பதற்கு ஒரு உடன்படிக்கையெழுதுவித்துக்கொண்டு கிடைத்த விலையையும் வாங்கிக்கொண்டு போய் நாவாந்துறைக்குக் கிழக்குப் பக்கமாகக் குடியேறினார்கள்.

## பள்ளர்

அந்த நாட்களில் ஒரு பெருங் கலகமுண்டுபட்டதினால் கலகத்துக்குப் பயந்து சில வீட்டுணு சமயப் பிராமணக் குடிகளுஞ் சிவசம்யப் பிராமணக் குடிகளும் உத்தரகோசமங்கை யென்னு மிடத்திலிருந்து ஆணும் பெண்ணுமாகக் காரைதீவில் வந்திறங்கி அங்கே குடியிருந்தார்கள். சோழ நாட்டிலிருந்து சில பட்குடிகள் வேளாளரின் கீழ்ப் பயிர்க் குடிகளாயிருந்து பிழைக்கலா மென்றெண்ணி வந்திறங்கித் தாங்கள் எண்ணிவந்தபடி பிழைக்க இடங்காணுததினற் சிலகுடிகள் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். சிலர் சாணரைப் போற் பனையேறுந் தொழிலைப் பயின்றூர்கள். நளவரும் பள்ளரும் பனையேறத் தொடங்கிக்கொண்டதினாற் சாணருக்குப் பிழைப்புக் குறைந்தது. அதினாற் சில சாணர் வெள்ளைக்காரர் வீடுகளிலே ஆணும் பெண்ணுமாகப் பணிவிடைகளில் ஏற்பட்டுச் சீவியம் பண்ணினார்கள். [1] சிலர் வலை வீசிப் பிழைத்தார்கள்.

---

1. சிலர் எண்ணெய் வாணிகத்தாற் சீவியம் பண்ணினார்கள் — தி. த. க. பிரதி.

## கோவியர்

இதுநிற்க, முன்வந்த பள்ளர் நளவரிற் பிழைப்புக்கு வழியில்லாதிருந்தவர்கள் தங்களை வேளாளர் முதலானவர்களுக்கு அடிமையாக எழுதிக்கொடுத்திருந்தார்கள். முன்னாட்களிலே சில வறிய குடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்துக் கோவிற் பணிவிடைசெய்து சீவனம்பண்ணிக் கோவிலார் என்றழைக்கப்பட்டு இருந்து பின்பு கோவியர் எனப் பெயர் பெற்றார்கள் [1].

பறங்கிகள் அரசாட்சியைக் கைப்பற்றின காலத்திலே கோவில்களெல்லாம் இடிபட்ட பின் கோவிலெசமான்கள் அந்தக் கோவிற்சிறைகளைப் பிறர்க்கு விற்பனவுபண்ணி யிருந்தார்கள். பிற்காலத்தில் வடதேசத்தி லிருந்து சில சிறைகள் வட சிறை கோவியம் என்னும் பேரால் விலைப்பட்டார்கள்.

## உலாந்தேசரசியல்

இப்படியே சிறை விற்பனவு கொள்வனவு வரவர அதிகப்பட்டது கண்டு உலாந்தேச அர

1. கோவியர், கொவியர் (Goviyas) என்னுஞ் சிங்கள வேளாளரெனவும், சங்கிலி காலத்தில் சிங்களரை யாழ்ப்பாணத்தினின்று அகற்றியபோது, தமிழ் வேளாளக் குடும்பங்களுக்கு அவர்கள் அடிமைகளானார்களெனவும் முதலியார் இராசநாயகம் கூறுவர். கோவியர் அடிமைகளானாலும் வேளாளருக்குச் சாதியிற் குறைந்தவரல்லரென அவர்களுக் கிடையில் இன்னும் நடக்கும் வழக்கமொன்றைக் காட்டியுள்ளார். கோவியர், நளவர், தனக்காரர் என்னுஞ் சாதியார் சிங்களர் என்பதற்குச் சான்றாகப் பெண்கள் தாமுடுக்குஞ் சேலையின் உள் தொங்கலைத் தோளிற்போடுவது, சிங்கள வழக்கம் எனவுங் கூறுவர்—யா. ச. பக். 85-86.

சாட்சியார் அந்த விற்பனவு கொள்வனவைத் தங்கள் அதிகாரத்தின் கீழாக்கித் தங்களுக்கு வருமானத்தை யுண்டாக்கினார்கள். இறப்பிறமாது சமயமே யன்றி மற்றொரு வேதமும் வழங்காமல் அதிகாரத்தினால் றடுத்து யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு கோவிற் பற்றுகளாகப் பகுத்து ஒவ்வொரு பற்றுக்கும் ஒவ்வொரு கோவில் கட்டுவித்து [1] அக்கோவில்களிலே தங்கள் சமயக் குருவானவரை நியமித்து அனைவரும் அந்தக் கோவில்களிற் போய் அறிவு கேட்கவும் கலியாணங் கைப்பிடிக்கவும் மற்றச் சடங்குகள் எவைகளையுந் தங்கள் சமய விதிப்படிதான் செய்யவும் வேண்டுமென்று அவ்வுலாந்தேச அரசாட்சியார் பலவந்தம் பண்ணிவந்தார்கள். பல வரிகளை ஏற்படுத்தி அரசாட்சி வருமானத்தையும் பெருக்கிக் கொண்டார்கள்.

## சிவியார்

போகிச்சாதியாரிற் சிலகுடிகள் தமிழரசரைச் சிவிகைகளில் வைத்துக் காவ அழைக்கப்பட்டிருந்தவர்கள் பெருகிச் சிவியாரென்றொரு சாதியாயிருந்தார்கள். அவர்கள் சிவிகை காவவுங் கோவியருங் குடிமைகளுந் தங்கள் தங்கள் ஒழுங்குப்படி சிறப்புச் செய்யவும் வரிசையை யேற்படுத்தி அவ்வரிசையை அவ்வரிசைப்பத்திரம் பெற்றவர்களேயன்றி மற்றொருவருஞ் செய்யவொண்ணாதென்

---

1 பறங்கிகள் அதிகமாய்த் தாங்கள் இடித்தழித்த சைவக் கோயில்கள் இருந்தவிடங்களிலே தங்கள் கோவில்களைக் கட்டினார்கள். ஒல்லாந்தரும் அக் கட்டடங்களையே தங்கள் கோவில்களாகத் திருத்தி உபயோகித்தார்கள்.

றுங் கட்டளை, வரிசைப்பத்திரம், பட்டக் கடதாசி யென்னுமிவைகளால் அதிக வருமானங்களை அரசாட்சிக்கு வருவித்தும் தங்கள் சமயமே யெங்கும் நிலைபெறவேண்டு மென்னுங் கருத்துடனே அவ் வுலாந்தேசுக்காரர் இதுவரைக்கும் ஆட்சி செய்து வருகிறார்கள்.

## பறங்கி அரசாட்சி விருத்தம்

திருமருவு யாழ்ப்பாண நாட்டை யாண்ட
சிங்கையா ரியன்குலத்தைத் தீங்கு செய்து
பெருமையுடன் காலயுத்தி யாளி மாசம்
பிலிப்பனெனும் பறங்கிகிளை யரசை யாண்டு
குருநெறியு மனுநெறியு மில்லா தாக்கிக்
கொடுமையுடன் நாற்பஃதாண் டளவும் போக்க
உருமருவு முதயகிரி யிரவி போல
வுலாந்தேசு மன்னவன்வந் துதிப்பன் றனே. 1

உதிக்கின்ற விளம்பிதனி லானி மாச
மொன்பதனி லுலகுபுகழ் உலாந்தே சண்ணல்
மதிக்கின்ற மனப்பறங்கி கிளையை யெல்லாம்
வாள்வலியா லுயிர்தொலைத்து வாரி யள்ளிக்
கொதிக்கின்ற தென்கடலி லடைய வீசிக்
கோட்டையொப்புக் கொண்டேற்றுக் கொடியுந் [தூக்கித்
துதிக்கின்ற யாழ்ப்பாண நகரி தன்னிற்
சோதிதிகழ் மணிமகுடஞ் சூட்டு வானே;[1] 2

சூட்டியபின் னூற்றின்மே லையெட் டாண்டு
தொல்வினைபோல் வல்வினைக ளெல்லாஞ் செய்து
ஈட்டுபொரு ளுள்ளதெல்லாங் கவர்ந்து தேடி
யிடர்விளைத்து யாவரையு மிழிகோ லாக்கிக்

1, பி-ம். சூட்டினனே.

கூட்டுறுமின் மினிவீழ்ந்தக் கினியின் மாய்ந்த
கொள்கையென வவன்குலமு நாச மாக
நாட்டுபுகழ் யாழ்ப்பாண நாடெங் கெங்கும்
நன்மைபெற நல்லரசு[1] நடக்குந் தானே. 3

நல்லரசு நடத்திவிட்டா னனேவோ ருக்கும்
நன்ருக விராக்கதக் கன்னி தொட்டு
வல்லபுக ழிங்கிலேசர் எழுபத் தொன்பான்
வருஷமர சாண்டுமனு நீதி தப்பித்
தொல்லைவரி குடிகளுக்குச் சுமத்து நாளில்
தொன்மைபுகழ் பிரஞ்சுபிறர் துணைவ ரோடும்
அல்லல்வள நாடுவவ்வி வால சிங்க
மகிபனுக்கு மணிமகுடம் வழங்கு வானே. 4

[சில பிரதிகளில் 4-ம் செய்யுள் காணப்படவில்லை.]

## அச்சிட்ட பிரதியிலுள்ள செய்யுள்

இலகிய சகாத்த மெண்ணூற்
றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப
னும்புவ னேக வாகு
நலமிகும் யர்ழ்ப்பா ணத்து
நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக்
கோயிலும் புரிவித் தானே.

முற்றும்

1. பி-ம். சைவநெறி.

அநுபந்தம்

# யாழ்ப்பாண வைபவமாலை

இந்நூலினை முதன் முதலாக 1884-ம் ஆண்டில் அச்சிட்ட திரு. V. V. சதாசிவம்பிள்ளை யவர்கள் தமது பதிப்பில் பின்வரும் பகுதியை நூலின் இறுதியிற் சேர்த்துள்ளார். ஆனால் இப்பகுதி ஏட்டுப்பிரதிகளிற் காணப்படவில்லை :—

சில்லாட்டைக் கொடுங்கோலரசினராகிய பறங்கிக்காரர், உலாந்தாக்காரர் காலங்களிலும், இங்கிலீஷ் அரசினர் காலத்திலும் அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள கிறிஸ்துமதச் செல்வர்கள் தம்மத விருத்தியைக் கருதி, நாடுநாடாய்ச் சென்று தம் மத போதனை செய்யுங்களென்று வேதனங்கொடுத் தனுப்ப ஈண்டு வந்த பாதிரிமார், கீண்மக்களாகிய நளவர், பள்ளர், கரையார். முக்குவர் முதலியோருக்குங் கல்வி யுணர்ச்சியில்லாத மிடிமிடைந்த ஏழையர்க்குஞ் சூனியோபாதான சிருட்டியைக் கூறும் விவிலியநூலை வீடுகடோறுஞ் சென்று முற்றத்திலே உரலே ஆசனமாகக்கொண்டிருந்து போதிக்க, அவர்கள் பாதிரிமார்களின் உடல் உடை வாக்கு என்னும் வேற்றுமைத்தோற்றங்களைக் காண்பது கருதிக் கேட்டுவருவாராயினர். பாதிரிமார் போதித்து மீளுங்காலெல்லாம் அவர்கள் வந்திருந்து போன தம்மில்லிடத்தை அச்சனங்கள் சாணத்தாற் சுத்திசெய்து வருவாராயினர். இங்ஙனம் பாதிரிமார் வந்து போதித்ததும், அவர்கள் சாணந் தெளித்ததும் பன்னாட் டொழிற் பயனில் செய்கையாக, இருதிறத்தினர் வாயுங் கையுஞ் சலித்தன. பாதிரிமார் தங்கூற்றங்ஙனமாயினமை கண்டு, இனி யாது செய்வேமெனக் கவன்று நெட்டுயிர்த்துத்

தம்மெசமானர் இச்செய்திகளையெல்லாம் உள்ளவாறுணர்வாராயின் வேதனத்தைக் கொடாரெனநொந்து, இங்ஙனமோர் சூழ்ச்சி செய்வாராயினர். இங்குள்ளாரிற் சிலரைப் போதகர்களாக நியமனஞ் செய்து அவர்களைக்கொண்டும் விவிலியநூலைப் போதிப்பித்தல் வேண்டுமென்று தம்மெசமானருக் கெழுதிப் பொருளுதவி பெற்று, அப்பொருள்வழியாய்ச் சிலரைத் தம் மதத்தினராக்கி அவர்கட்கு மாதந்தோறும் வேதனம் கொடுத்து, ஆங்காங்கு போதித்து வரும்படி சொல்ல, அவர்கள் சில துண்டுப் புஸ்தகங்களோடு தங்கள் சுயமதத்திற்கும் உலகவிஷயங்களுக்குமேற்ற இடங்களிற்போய்த் தாங்கருதிச்சென்ற கருமமுடித்து மீளுமவதியில், அங்குள்ள சிலர் கேட்கும்படி தாங் கொணர்ந்த புஸ்தகத்தில் ஓர் வசனம் வாசித்து மெய்யான தேவனை நம்புங்களென்று சொல்லி, அப்பொழுது கேள்வி கேட்பாருண்டேல் அவர்களையுங் கையமர்த்தித் தமது சுமை குறையும்பொருட்டுத் தம்மிடத்துள்ள துண்டுக் கடுதாசிகளைக் கொடுக்க, வாங்குவோர் தமக்கு வெற்றிலை பாக்கு புகையிலை முதலியன மடித்துவைக்கலா மென்றும், வன்னக் கடதாசியாயின் தங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுக் குதவுமெனவுங்கருதி வாங்குகின்றார்கள். கிறிஸ்து மதத்திற் புகுவது பொருள்பற்றி யென்பது பலரின் கொள்கை. இதற்குத் திருஷ்டாந்தம் பிதாவைக்கொண்டு பானை உடைப்பித்தோர், மாவிட்டபுரத்திற் கந்தசுவாமி கோவிலுக்குப் போயினோர், உழுதோர் முதலியோரின் பல சங்கதிகளுளவாயினுஞ் சென்ற வருஷம் ஓர் சிறுச் சங்கதி உண்டு. அது ஓர் போதகர் ஒரு வறிய பெண்ணுக்கு மாதவிகிதம் இவ்வளவு ரூபா தருகிறேன் நீ இனிமேல் விபூதி பூசவும் வேண்டியதில்லை; சைவ சமயக் கோவில்களுக்குப் போகவும் வேண்டியதில்லை;

என்னுடைய சேட்சுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் வாவென்று சொல்லி அங்ஙனம் ரூபாக்கொடுத்தும் சேட்சுக்கு அழைப்பித்துவரும் நாளிற், சித்திரை வருஷப்பிறப்பும் வந்தது. அந்தப்பெண் ஊர்வழக்கப் படி வருஷப்பிறப்புக்கு வீட்டுப் பொங்கல் நடத்த வில்லை. அடுத்த மாசம் அவ்வூர் அம்மன்கோவிலில் வருஷாந்தப் பொங்கல் கிட்ட, அப்பெண் நான் வரு ஷந்தோறும் கோயிலுக்குச் செய்துவந்த பொங்கலை விடுவேனாயின் எனக்கு யாது நிகழுமோவென நினைந்து ஒருவாறு அப்பொங்கலை நடத்தினாள். இதனையறிந்த போதகர் அடுத்தமாசம் ரூபாக் கொடுத் திலர். இவ்வாறு செய்துவரும் போதகமார், பாதிரி மார் தஞ் சேட்சுக்கு இன்னநாளைக்கு வருவாரென் றறிந்தவுடனே அப்பாதிரிகளுக்குச் சபைப் பொலிவு காட்டும்படி தஞ் சினேகர் வீட்டுக்கு ஒருதரத்துக்கிரு தரஞ் சென்று அவர்களை வருந்தியழைப்பது அன்றும் இன்றும் நாளையும் வழக்கம். இப் பாதிரிமாரும் போதகமாரும் இவ்வாறுசெய்து மதாபிமானங்கொண்டு தங்கள் எசமானருக்கு வருஷத்துக்கு வருஷம் தம் மதத்திற் புகுவோர் பெருந்தொகையினரென அன்று முதல் இன்றும் அறிக்கைப்பத்திர மனுப்பி வருகின் றார்கள். சின்னாட் பல்பிணிச் சிற்றுடல் வளர்ப்பான், தம் மதம் நழுவிப் பிறர் மதந் தழுவி நடிப்பது எவ்வளவோ அறியாமை.

இஃதிப்படி இருக்க, இங்கிலீஷ் அரசினர் தங்கள் பலத்தினாலும், வீரத்தினாலும், நுண்ணறிவினாலும் உலாந்தேசரிடம் யாழ்ப்பாணத்தைச் சகாப்தம் ௧௭௧௮-ம் வருஷத்தில் பிடித்துத் தங்கள் நியாயப்பிர மாணங்களை இலங்கை முழுவதுக்குஞ் சகாப்தம் ௧௭௩௮-ம் வருஷத்தில் நிலைநிறுத்துவாராயினர். இவ் வரசினர் முன்னிருந்த அன்னிய அரசரைப்போற்

கொடுங்கோலரசு செலுத்திக் குடிகளை வருத்தாது எச்சமயத்தவர்களும் தங்கள் இஷ்டப்படியே சமயாசாரங்கள் முதலிய எவ்வகைக் கிரியைகளுஞ் செய்தற்கிடங்கொடுத்துச் செங்கோ னடாத்திவருகின்றனர். இத்தேசத்திற் கிறிஸ்துமதம், மகமதிய மதங்களும் வழங்கிவருகின்றன. ஆயினும், இவ்வியாழ்ப்பாணத் தளவு ஓர்பாகத்தையும், இந்தியாவில் இதற்குச் சரிவந்த ஏதேனுமொரு பாகத்தையும், அதற்குச் சரிவந்த சனத்தொகையையும் ஒப்பிட்டு எங்கே அதிக கிறிஸ்தவர்களுங் கத்தோலிக்கர்களும், மற்றும் பிற மதஸ்தர்களும் இருக்கிறார்களெனக் கருதுகையில் இந்தியாவில் நூற்றுக்கு இரண்டாகவும், யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு ஒன்றாகவு மிருக்கக் காணப்படுகின்றது. இக்காலத்தினர் மேன்மேலுங் கல்வி, செல்வம், பொறை, தயை, தானம், தைரிய முதலிய வற்றிற் குறைவில்லாது தங்கள் பெயர்களை விளக்கித் தூண்டா விளக்குகளாய் இவ்விடத்துங் கன்னியாகுமரி தொடங்கி இமயமலைபரியந்தமுள்ள இடங்களிலுஞ், சிங்கப்பூர், பினாங்கு, சீனா, ஆபிரிக்கா, அமெரிக்கா, லங்தோம்பட்டன முதலிய இடங்களிலுந் தங்கள் கல்வித் திறமைகளைச் சாமர்த்தியத்துடன் காட்டினர்களென்பது யாருக்குந் தெரிந்த காரியம்.

இவ்வரசினர் இம்மை மறுமை இன்பங்களையும் இறுதியில் முத்தியையும் பயத்தற்கு ஏதுவானதும் யாவராலும் வணங்கப்படத்தகும் பெருந்தகைமையினை யுடையதுமாகிய வித்தியாதருமத்தை விருத்தி செய்தலின் மிகவூக்கமுடையராய் ஒரு கோட்டத்திற் பலவாக முப்பத்திரண்டு கோட்டங்களிலுஞ் செல்வர் வறியர் எனப் பேதங்குறியாது எல்லாப்பிள்ளைகளும் நாடோறுங் கல்வியில் விருத்தியாகும்பொருட்டுப்

பற்பல வித்தியாசாலைகளை ஸ்தாபித்து, அவ்வித்தியா சாலைகளிற் கல்வி ஒழுங்காய்க் கற்பிக்கப்படுகின்றதோ என்பதனைப் பரீட்சித்து, அப்பரீட்சைக்கேற்ப வருஷந்தோறும் ரூபா ௪௦௦ முதல் ரூபா ௩௦௦௦ வரையில் ஈந்துவருகின்றார்கள். அமெரிக்கன் மிஷனரால் சகாப்தம் ௧௭௪௯-ம் வருஷமாகிய சுபானு வருஷம் வட்டுக்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்ட செமினாரி (Seminary) யிற் கல்வி கற்றோர்கள் அதிக பிரபல்லிய முள்ளவர்களா யிருக்கின்றார்கள். இக்காலத்துள்ள புண்ணிய சீலர்கள் தமிழ்க் கல்வியையும், சைவசமய சாத்திர உணர்ச்சியையும் மேன்மேலும் விருத்திசெய்வதற்குத் தங்களாலியன்றளவு முயற்சிசெய்து, அரசாட்சியாரின் உதவியையும் பெற்றுக்கொண்டு, பல இடங்களிலே சைவ வித்தியாசாலைகளைத் தாபித்து, ஒழுங்கு பெற நடத்தி, நிகண்டு, கணக்கு, இலக்கண வினுவிடை, இலக்கணச்சுருக்கம், நன்னூல் முதலிய கருவி நூல்களையும், உரையோடு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரையென வழங்கும் வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நாலடி, நானூறு, பரிமேலழகியாருரையோடுகூடிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறண் முதலிய நீதி நூல்களையும், நைடதம், பாரதம், இராமாயண முதலிய காவியங்களையுஞ், சைவவினாவிடை, திருக்கோயிற்புராணம், இதன்சாரமாகிய சிதம்பரமான்மியம், கந்தபுராணம், திருத்தொண்டர் பெரியபுராண முதலிய பல பதிநூல்களையுங் கற்பித்து வருகின்றார்கள். பற்பல உபாத்தியாயர்கள் தங்கள் சுயநயங்களைக் கருதாது தங்கள்பாற் கல்வி கற்கவரும் பிள்ளைகளுக்குப் புத்தகம், போசனம் முதலியவற்றைக் கொடுத்து அத்தியந்த ஆசையோடு அவரவர் அறிவுக்கேற்ப நூல்களைச் சொல்லிவருகின்றனர்.

சிவாலயங்கள், விநாயகராலயங்கள், சுப்பிரமணிய ராலயங்கள் முதலியவைகளிற், கட்டளைப்பிரகாரம் நித்திய நைமித்தியங்கள் வழுவாது நடந்துவருகின்றன. ஒவ்வோ ராலயத்திலும் வருஷந்தோறும் கந்தபுராணம், திருத்தொண்டர் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருச்செந்தூர் தலபுராணம், திருவாதவூரர்புராணம், சிவராத்திரிபுராணம், காசிகாண்டம் முதலிய புராணங்களில் எவ்வெப் புராணம் எவ்வெக்காலத்திற் படித்து முடிக்கவேண்டுமோ அவ்வப் புராணத்தை அவ்வக்காலத்திற் படித்துமுடித்து ஆங்காங்குள்ள சைவசமயிகளில் ஆண் பெண் இருபாலாரும் ஸ்நானஞ்செய்து நித்தியாநுட்டானங்களை முடித்துக்கொண்டு, நியமப்படி ஒருபோதுண்டும், உண்டி ஒழிந்தும், புராண புத்தகத்தைக் கோவில் அருச்சகரைக்கொண்டு அருச்சனை புரிவித்து, விதிப்படி சுபமுகூர்த்தத்திலே கல்வியறிவிற் சிறந்த ஒருவர் திரிகரணசுத்தி யுடையராய் ஆரம்பித்து வாசிக்க, இன்னொருவர்வாசிக்கப்படும் இராகத்திலும் சுதியிலும் பொருள் சொல்லத் தினந்தோறுங் கிரமமாய்ப் படிப்பித்துத், திருக்கல்யாணப் படிப்பு முதலிய விசேஷ தினங்களில் அபிஷேகம் முதலியன விசேஷமாகப் புரிவித்து அலங்காரத் திருவிழா நடாத்திப், புராண நிறைவேற்றுங் காலங்களில் அன்னதானம். வஸ்திர தானம் முதலிய பல தானங்களை ஈந்து வருகின்றார்கள்.

சமயாசிரியர்களாகிய திருநாவுக்கரசு நாயனாராலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும், வேதங்களால் திருக்காப்புச் செய்யப்பட்டிருந்த திருக்கதவு திறக்கப்படவும், அன்றுமுதல் என்றுந் திறக்கப்பட்டு அடைக்கப்படவுந் தேவாரத் திருப்பதிகங்கள் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற புண்ணியக்ஷேத்திர

மாகிய வேதாரணியப்பதி ஆதீனகர்த்தாக்களாகிய சைவக்குருக்கண்மார், வரணி, கரணவாய், நீராவிப் பிள்ளையார்கோவில் முதலிய இடங்களி லிருந்து கொண்டு தங்கள் சீஷருக்குச் சிவதீட்சை முதலிய கிரியைகளைச் செய்துவருகின்றனர். பிராமணக் குருக் கள்மாரும் அநேகருளர். வரணியிற் பிறந்த, தில்லை நாததம்பிரான் சோழமண்டலத்திலுள்ள வேதாரணி யம் முதலிய சில தேவஸ்தானத் திருப்பணிகளை நிறை வேற்றிக்கொண்டு தஞ்சாவூர் மகாராசாவைக்கண்டு தன் விபூதிப் பிரசாதத்தினால், யாரும் மாற்றுதற் கரிதாய் அவரை உபாதித்த நோயை மாற்றித், தான் நிறைவேற்றிய தேவஸ்தானங்களின் பொருட்டு வெகு கிராமங்களும் கோடிக்கரை உப்பளமும் பெற்றனர்.

சோழ தேசாதிபதியாகிய திசைஉக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லி என்பவள் தனக்குக் குதிரை முகம் மாறிய காரணத்தால் மாவிட்டபுர மெனப் பெயரிட்டுக் கட்டிய கந்தசுவாமிகோவில் போர்த்துக் கேசரால் இடிபட்டு அங்கிளயர் காலத்தில் வெகு சனங்களால் நன்குமதிக்கற்பாடுடைய சபாபதியைய ரால் ஏறக்குறைய அடு-வருஷங்களுக்குமுன் கட்டப் பெற்று, ஆடி அமாவாசி, மாசிமாதச் சிவராத்திரி முதலிய புண்ணியகாலங்களில் காலை ஐந்துமணியள வில், கந்தசுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம் நைவே தனம் தீபாராதனை செய்து, வாகனத்திற் கச்சை சாத்திப், பல்வகை வாத்தியத்தோடு அந்தணர் வேத கோஷடஞ் செய்யவும், அடியார் தேவார திருவாச கம் பாராயணஞ் செய்யவும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து கோவிலிருந்து இரண்டுமைல் தூரத் தினதாகிய கீரிமலைச் சாரலின்கணுள்ள சமுத்திர தீரத்திலே உவர்ச்சல மத்தியிற் பெருக்குக்காலங்களிற்

சிறிது தோன்றியும், வற்றுக்காலங்களில் முற்றுந்
தோன்றியுந், தன்னிடத்துப் பத்தியோடு ஸ்நானம்
பண்ணும் அடியார்களின் எவ்வகை நோயையும் நீக்கி
யருளும் புண்ணிய சுத்தசல தீர்த்தத்தில் நிறுத்திச்,
சுவாமிக்காக அத்திரதேவரைப் படிக்கட்டளைச்சாமா
னுடன் சுத்தசல தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்விக்
கும்போது சுவாமி திருக்கண்சாத்தியருளிய பின்னர்
அம்முகூர்த்தம் முதற் பல்லாயிர சனங்கள் அத்
தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சுவாமிக்கு அருச்சனை
புரிவித்துத் தரிசனைசெய்யும் பொருட்டுச் சுவாமியை
அங்கு சுத்திசெய்யப்பட்ட கன்மண்டபத்தில் வைத்
திருந்து, மாலை ஐந்துமணியளவில் மீட்டும் மாவிட்ட
புரத்துக்கு மேற்கூறிய அலங்காரத்தோடு எழுந்
தருளப்பண்ணிக் கொண்டுவருகின்றனர்.

தமிழ் அரசரின் வாசஸ்தானமாகிய நல்லூரிலே
சகாப்தம் ௮௭௦-ம் வருஷத்திற் சிங்கையாரிய மகா
ராசனின் மந்திரியாகிய புவனேகவாகுவினுற் கட்டப்
பட்டுப், போர்த்துக்கேசரால் இடிக்கப்பட்ட கந்த
சுவாமிகோவில், உலாந்தர்காலத்தில் இரகுநாதமாப்
பாணமுதலியாராற் கட்டப்பட்டு வெகுசன சமூகஞ்
சேர்ந்து ஆராதனைபுரியும் விசேஷ ஸ்தலமா யிருக்
கின்றது. பிரமன் மால் முதலாம் பெருந்தகைத்
தேவருந் தெரிவரும் அருணிறை சின்மயவடிவாய்,
யாவரேயெனினுந் தன்னுண் மலரடிமேவி, வழிபாடு
மெய் அகம் வாக்கு யாவதும் ஒன்றித்து இடையறு
அன்போடு இயற்றுவாராயின், அவ்வவர் வேண்டும்
எவ்வகை வரமும் பச்சைமயில் வாகனப் பரமனுகிக்
கலியுகமதனில் எளிவந்தருளலாற் கலியுகவரதனென்
றடியர்களேத்தும் அறுமுகக்கடவுள் ஈழமண்டல
மெனப் பெயர் மருவிய இலங்கை மத்தியில் யாவரு
மேத்துங் கதிர்காமப்பதியே உவந்தருள் பதியாக்

கொண்டு, முழு அருளுருக்கொண் டெழுந்தருளியபடி எப்படி "அப்படியே" இந் நல்லைப் பதியின்கண் ஆண்டுகடோறும் ஆவணி அமாவாசியே தீர்த்தோற்சவத் தினமெனக்கொண்டு நடாத்தும் இருபத்தைந்து நாட்டிரு உற்சவங்களுள் அதி விசேஷதினமாகிய பத்தாந் திருநாளிலும், ஏனைப் புண்ணிய தினங்களிலும் எழுந்தருளியிருந்து விசேஷாநுக்கிரகம் புரிவர். சுவாமி பச்சை மயில்வாகனத்திலும் அவர் சத்தியர்களாகிய தெய்வநாயகியம்மையார், வள்ளிநாயகியம்மையார் இருவரும் வெள்ளி அன்னவாகனத்திலும் திருவோற்சவ காலங்களில் திருவீதிப் பிரதக்ஷிணம்வரும் போது அவர்களுடைய திருத்தோற்றத்தைத் தரிசிக்கும் பெறுதற்கரும்பெரும்பேறுடையவர்களே இருவினை மும்மல நீங்கி, நித்தியானந்தமுத்தி எய்தற்கேதுவாம் அருளைணறியடைவர். இவ்வாலயத்தில் நாக்கறுத்தன் முதலிய பத்திவைராக்கியக் கிரியைகள் செய்வோர் பலர். இங்கே தமிழரசர் காலத்திலே தோண்டிக் கட்டுவிக்கப்பட்ட வற்ருத ஆழ்ந்த பகரவடிவினதாகிய முப்புடைக் கூபமொன்றுண்டு. அது யமுனு நதியினின்றும் வருவிக்கப்பட்ட தீர்த்தங் கலக்கப் பெற்றமையால், யமுனு நதியெனப் பெயர் பெற்றது. இந் நல்லூர்க் கோட்டத்தைச் சார்ந்த நத்தங்களுள் ஒன்ருகிய திருநெல்வேலியின்கண்ணே சிங்கையாரிய மகாராசனுல் இருத்தப்பட்ட கார்காத்தவேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராகிய பாண்டிமழவர் மரபிற்ருேன்றிய ஞானப்பிரகாசதேசிகர் சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் எனப்பெயரிய திருக்குளம் இயற்றுவித்தனர். சமஸ்கிருதத்திலே சில சிவாகமங்களுக்கு வியாக்கியானமும், சில சைவசித்தாந்த சாத்திரங்களுந், தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஒருரையும் இயற்றினர்.

வண்ணை நகரின்கண்ணே வைத்தியலிங்கச்செட்டியாராலே கட்டுவிக்கப்பட்டுச் சகாப்தம் ௧௭௧௩-ம் வருஷமாகிய சாதாரண வருஷம் சித்திரை மாதம் பிரதிட்டை செய்யப்பெற்று நித்தியநைமித்தியங்களில் ஒருசிறிதுங் குறைவுபடாது ஒழுங்குபெற நடாத்திவரப்படும் ஓர் பாரிய சிவாலயம் உண்டு. இக்கோவிற் றிருப்பணியை நிறைவேற்றிய தருமகருத்தா யாழ்ப்பாணமுதற் காசிபரியந்தம் பல தருமசத்திரங்களைக் கட்டினர். இதன் மேல்பாகத்திலே வில்லூன்றி எனப் பெயர்பெற்ற வற்றாத ஒரு சிற்றேரி இருக்கின்றது. இவ்வேரி இராமசுவாமி இந்தியாவினின்றும் இலங்கைக்குத் தாவிய காலத்துத், தம் வில்லையூன்றத் தோன்றிய காரணத்தால் வில்லூன்றி எனவும், அவர் திருவடி தோய்ந்த இடந் திருவடிநிலை எனவும் பெயர் பெற்றன. ஏறக்குறைய ௧௫௦-வருஷங்களுக்கு முன் கொச்சிக் கணேசையர் என்ற பிராமணப் பிரபு யாழ்ப்பாணத்திருந்தவர்களுந் தென்னிந்தியாவினின்று வந்தவர்களுமாகிய தமிழ்ப் புலவர்களைப் போஷித்துத் தமிழை வளர்த்துக்கொண்டு பெரும் புகழ்படைத்து வாழ்ந்த ஊர் வண்ணார்பண்ணை. இங்கே உலாந்தர் காலத்திற் சோழமண்டலத்தினின்றும் வந்து குடியேறி நெசவுத்தொழில் செய்யும் வைஷ்ணவர்களாகிய சில சேணியரும் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு விஷ்ணுவாலயம் உண்டு. இஃதன்றியும், சங்கானை நத்தங்களுளொன்றாய மூளாயைச் சார்ந்த பொன்னாலையிலும், கட்டைவேலி நத்தங்களு ளொன்றாய வல்லிபுரத்திலும் எழுந்தருளியிராநின்ற கண்ணபிரானுக்கு நித்திய நைமித்தியாதிகளிற் குறைவுபடாது நடாத்திவருந் தருமகருத்தாக்களும், அருச்சகர்களும், ஆராதனைபுரிவோர்களும் சைவசமயிகள்.

முன்னாளையில் இலாட தேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விசயனென்பவனாற் கீரிமலைச் சாரலின்கணுள்ள திருத்தம்பலை என்னும் பதியிற் கட்டப்பெற்றதும். முசுகுந்தச்சக்கிரவர்த்தி, நளச் சக்கிரவர்த்தி, அருச்சுனன் முதலிய பெரியோராற் றொழப் பெற்றதுமாகிய திருத்தம்பலேசுரன் திருத் தம்பலேசுவரியம்மன் கோவில்களில், நகுலமுனிவர் சுவாமி தரிசனஞ் செய்து அம்மலையின்கணிருந்து தவஞ் செய்யுநாளில், அவரது கீரிமுகமாறி மனுடமுகம் பெற்ற காரணத்தால். அவ்வாலயங்கள் நகுலேசர் கோவில் எனவும் நகுலாம்பிகையம்மன் கோவில் எனவும் வழங்கிவந்தன. முற்காலத்திற் சுபதிட்ட முனிவர், பரராசசேகர மகாராசனுக்குச் சொல்லிய படியே, பறங்கிக்காரர் யாழ்ப்பாணத்தைப் பிடித்த ஒன்பதாம் வருஷத்திற் பரநிருபசிங்கந் தேகவியோக மடையப். பறங்கிக்காரரால் இடிபட்ட அக்கோவில் கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நன்முயற்சி யால், இக்காலத்துள்ள சில புண்ணிய மகான்களால், உள்ளூர்களிலும் புறவூர்களிலுமுள்ள பல புண்ணிய சீலரின் பொருளுதவியைக்கொண்டு திருப்பணிவேலை நடத்தப்பட்டு வருகின்றன.

விற்பனை உரிமையாளர்கள் :

தனலக்ஷ்மி புத்தகசாலை

சுன்னாகம் :: இலங்கை

திருமகள் அழுத்தகம்
: சுன்னாகம் :